இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பத்தாவது பாராளுமன்றத்தின்

முதலாவது கூட்டத்தொடர்

## பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 487

# அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின்

# நான்காம் அறிக்கை

(2023.11.01 தொடக்கம் 2024.01.26 வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் பாராளுமன்ற
உறுப்பினர் கௌரவ கபீர் ஹஷீம் அவர்களால்
2026 மாச்சு மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

*2026 மாச்சு மாதம் 06 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால்*
*அச்சிடப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டது.*

**பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் தொடர்பிலான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தல்.**

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***"அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்."***

**ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர்**
**அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அமைப்பு**
**(அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில்)**

1. கௌரவ லசந்த அலகியவன்ன (தவிசாளர்)
2. கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா
3. கௌரவ பிரசன்ன ரணவீர
4. கௌரவ கே. காதர் மஸ்தான்
5. கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்
6. கௌரவ (திருமதி) டயனா கமகே
7. கௌரவ சாமர சம்பத் தசநாயக்க
8. கௌரவ எஸ்.பி. திசாநாயக்க
9. கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க
10. கௌரவ வஜிர அபேவர்தன
11. கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா
12. கௌரவ கபீர் ஹஷீம்
13. கௌரவ மனோ கணேசன்
14. கௌரவ (கலாநிதி) சரத் வீரசேகர
15. கௌரவ விமலவீர திசாநாயக்க
16. கௌரவ நிரோஷன் பெரோரா
17. கௌரவ ஜே.சீ. அலவதுவல
18. கௌரவ வடிவேல் சுரேஷ்
19. கௌரவ அஸோக அபேசிங்ஹ
20. கௌரவ புத்திக பத்திறண
21. கௌரவ ஜயந்த கெடகொட
22. கௌரவ சிவஞானம் சிறிதரன் (2023.04.25 தொடக்கம்)
    கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் (2023.04.24 வரையில்)
23. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி
24. கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட
25. கௌரவ இசுறு தொடங்கொட
26. கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி (2023.03.07 தொடக்கம்)
27. கௌரவ எம்.டபிள்யு.டீ. சஹன் பிரதீப் விதான
28. கௌரவ டீ. வீரசிங்ஹ
29. கௌரவ வீரசுமன வீரசிங்ஹ (2023.04.25 தொடக்கம்)
    கௌரவ ஹேஷா விதானகே (2023.04.24 வரையில்)
30. கௌரவ (திருமதி) மஞ்சுளா திசாநாயக்க (2023.03.07 தொடக்கம்)
31. கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

**பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்**

**அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அலுவலகம்**

1. கௌரவ கபீர் ஹஷீம், பாஉ..202) 503.2.5ஆம் திகதி தொடக்கம்(தவிசாளர்) (
2. கௌரவ எண்டன் ஜயகொடி, பா.உ.
3. கௌரவ மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வுபெற்ற), பா.உ.
4. கௌரவ சுகத் திலகரத்ன, பா.உ.
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப், பா.உ. .202) 503.2.ஆம் திகதி தொடக்கம்(
6. கௌரவ நலின் ஹேவகே, பா.உ.
7. கௌரவ அரவிந்த செனரத், பா.உ.
8. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க, பா.உ.
9. கௌரவ ஹிஸ்புல்லாஹ் .எம்.ஏ.எல்.எம் (கலாநிதி), பா.உ. 202) 503.2.ஆம் திகதி தொடக்கம்(
10. கௌரவ ரோஹித அபேகுணவர்தன, பா.உ.
11. கௌரவ ஜேஅலவத்துவல .சீ., பா.உ.
12. கௌரவ சாமர சம்பத் தசனாயக, பா.உ.
13. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.
14. கௌரவ கவிந்த ஹேஷான் ஜயவர்தன (டாக்டர்), பா.உ.
15. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன், பா.உ.
16. கௌரவ சட்டத்தரணி சாகரிகா அதாவுத (திருமதி), பா.உ.
17. கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, பா.உ.
18. கௌரவ கேஇளங்குமரன்., பா.உ.
19. கௌரவ ஒஷானி உமங்கா (திருமதி), பா.உ.
20. கௌரவ அஜந்த கம்மெத்தெகே, பா.உ.
21. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி, பா.உ.
22. கௌரவ சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ (திருமதி), பா.உ.
23. கௌரவ ரீஜயசுந்தர .கே., பா.உ.
24. கௌரவ எம்தாஹிர் .எம் .ஏ ., பா.உ.
25. கௌரவ சுசந்த குமார நவரத்ன, பா.உ.
26. கௌரவ லால் பிரேமநாத், பா.உ.
27. கௌரவ சானக மாதுகொட, பா.உ.
28. கௌரவ சுனில் ரத்னசிரி, பா.உ.
29. கௌரவ சந்தன சூரியஆரச்சி, பா.உ.
30. கௌரவ ஜனக சேனாரத்ன (டாக்டர்), பா.உ.

## **<u>குழுச் செயலகத்தின் தற்போதைய பணியாட்தொகுதி</u>**

- திருசனத் விஜேகுணவர்தண . - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) குழுவின் செயலாளர்
- திருமதி சமிலா ரூபசிங்க - பிரதான உத்தியோகத்தர்
- திருமதி ஆர் – கியோவனி .என்.டீ.ஏ. பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- திரு ஜே பீ.எல்.ரீ.சமீர - உதவிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி ஜீ.டிஅயேஷ்மந்தி .எச்.ஜே. - பாராளுமன்ற அலுவலர்
- திருமதி ஜீ கல்லேகொட .எம். - பாராளுமன்ற அலுவலர்
- செல்வி எம்குமாரி . எம்.டி.எ.எல். - பாராளுமன்ற உத்தியோகத்தர்

### **<u>குழு அறிக்கைகள்</u>**

**www.parliament.lk** எனும் இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் வழிமுறையைப் பயன்படுத்தி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெளியீடுகளை தரவிறக்கம் செய்யலாம்.

Select language → Business of Parliament → Committees
Select Legislature (10th Parliament) ← Committee Reports
Select Session (1st Session) → Select Committee Type
Select Committee ← (Comittees for Special Purposes)
(Committee on Public Accounts) → Search

# உள்ளடக்கம்

**பக்க எண்**


a. தவிசாளரின் குறிப்பு ........................................................................ 7

b. சுருக்க அறிக்கை ........................................................................ 8

c. விசேட அவதானிப்புகள் ........................................................................ 12

d. விசாரணை செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்களிலும் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள் மற்றும் அவதானிப்புகளும் விதப்புரைகளும் ......... 13

e. உள்ளடக்கம் ........................................................................ 211

## தவிசாளரின் குறிப்பு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரின் போது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2023.11.01 ஆம் திகதி தொடக்கம் 2024.01.26 ஆம் திகதி வரையில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை உள்ளடக்கிய குழுவின் இரண்டாவது அறிக்கையை இத்தால் சமர்ப்பிக்கின்றேன். கணக்காய்வு என அறியப்படும் பிந்தியச் செயற்பாட்டில் அடையாளங் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தீர்வுகளை வழங்குவதோடு வினைத்திறனின்மையை முனைப்புடன் தடுப்பது மிகவும் பயன்மிக்கதாக இருக்குமென்பதால் எதிர்காலத்தில் கடந்த கால குறைபாடுகளைத் தடுப்பதன் முகமாக நிறுவனங்களுக்கு வழிகாட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கூடுதல் கவனம் செலுத்துமென்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதன் பிரகாரம், இன்றளவில் அரச நிறுவனங்களை அழைத்து விசாரணை செய்வதற்கு நேர் ஒத்ததாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இணையவழி முகாமைத்துவ கட்டமைப்பின் ஊடாக சகல அரச நிறுவனங்களையும் வருடாந்தம் மதிப்பீடு செய்யும் செயற்பாடு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றதென்பதை குறிப்பிட விரும்புகின்றேன். இதன் மூலம் குழுவின் விசாரணைகளை சீரான இற்றைப்படுத்தல்களுடன் மேற்கொள்ள முடியுமென்பதோடு நிறுவனங்களில் காணப்படுகின்ற பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை அடையாளங்கண்டு சமகால கொள்கை ரீதியான தீர்மானங்கள் மூலம் அவற்றை சீராக்குவதன் பொருட்டு வழிகாட்டுவதற்கு வாய்ப்பேற்படும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

நிறுவனங்கள் மீதான விசாரணைகளின் போது அடையாளங் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகளை சரி செய்யவும் நிலவுகின்ற சாதகமான பண்புகள் மற்றும் போக்குகளை மேம்படுத்தவும் குழுவின் அமர்வுகளை வழிநடத்துகையில் அரச உத்தியோகத்தர்களின் கண்ணியத்தை காத்திடவும் வேண்டுமென்பது குழுவில் பணியாற்றியதன் மூலம் நான் பெற்ற நீண்ட அனுபவங்கள் எனக்கு உணர்த்துகின்றது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றி என்பது அதில் பங்கெடுக்கும் சகல பங்குதாரர் தரப்புகளினதும் ஒத்துழைப்பின் பெறுபேறாகும். ஆகவே, இக்குழுவின் சகல அங்கத்துவ உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி அரச நிதிப் பொறிமுறையை உரிய முறையில் செயற்படச் செய்தல் தொடர்பான பின்னூட்டல் செயற்பாட்டுக்கு எனக்களிக்கும் ஒத்துழைப்பினை நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும், குழுவின் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு அளித்து வரும் ஒத்துழைப்புக்காக கணக்காய்வாளர் தலைமையதிபதி மற்றும் அவருடைய பணியாட்டொகுதிக்கும், திறைசேரியின் உத்தியோகத்தர்களுக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அலுவலகத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் குழு தமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றது என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கபீர் ஹஷீம்
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

## சுருக்க அறிக்கை

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களுக்குரியதாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பிரதம கணக்கீட்டு அலுவலரினால் மேற்கொள்ளப்பட்ட தெளிவுபடுத்தல்கள், குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் விதப்புரைகள் இவ்வறிக்கையில் அடங்கியுள்ளன.

**அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2023.11.01 ஆம் திகதி தொடக்கம் 2024.01.26ஆம் திகதி வரையில் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் / உரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளின் கால எல்லைகள்.**

| | **நிறுவனம்** | **பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளுக்குரிய கால எல்லை/முன்னைய குழுவின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்/தற்போதைய செயலாற்றுகை** | **புலனாய்வு செய்யப்பட்ட திகதி** |
|---|---|---|---|
| 01 | தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் | 2023.08.11 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளை நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம் மற்றும் தற்போதைய செயலாற்றுகை | 2023 நவெம்பர் 08 |
| 02 | உண்ணாட்டரசிறைத் திணைக்களம் | 2019, 2020 மற்றும் 2021 நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை | 2023 நவெம்பர் 15 |
| 03 | இலங்கைச் சுங்கம் | 2019, 2020, 2021 நிதியாண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மதிப்பீடு | 2023 நவெம்பர் 17 |
| 04 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 2022 நிதியாண்டுக்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் “இலங்கை மனித உரிமைகள் | 2023 நவெம்பர் 21 |

| | **நிறுவனம்** | **பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளுக்குரிய கால எல்லை/முன்னைய குழுவின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்/தற்போதைய செயலாற்றுகை** | **புலனாய்வு செய்யப்பட்ட திகதி** |
|---|---|---|---|
| | | ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டமை தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடு" பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கை | |
| 05 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 2022 நிதியாண்டுக்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் "இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டமை" தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடு பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கை | 2023 நவெம்பர் 27 |
| 06 | பாதுகாப்பு அமைச்சு | 2020, 2021, 2022 நிதியாண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மதிப்பீடு | 2023 நவெம்பர் 28 |
| 07 | அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் | 2022 ஆம் அண்டுக்கான மேலதிகம், வறையறை தாண்டல், அதிகாரமற்ற நடவடிக்கை நட்டங்கள் மற்றும் 2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை. | 2023 திசெம்பர் 05 |
| 08 | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் | 2023.04.25, 2023.05.26 மற்றும் 2023.08.09 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகளை | 2024 சனவரி 10 |

| | நிறுவனம் | பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளுக்குரிய கால எல்லை/முன்னைய குழுவின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்/தற்போதைய செயலாற்றுகை | புலனாய்வு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| | | நடைமுறைப்படுத்தியதன் முன்னேற்றம் மற்றும் 2022 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய மீளாய்வு | |
| 09 | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 2019, 2020, 2021 நிதியாண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மதிப்பீடு | 2024 சனவரி 11 |
| 10 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 2021, 2022 நிதியாண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மதிப்பீடு | 2024 சனவரி 23 |
| 11 | நிதி அமைச்சு | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிற்குரிய 2021 மற்றும் 2022 நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள், அந்த அமைச்சின் தற்போதைய செயலாற்றுகை மற்றும் இலங்கை சுங்கத்தின் 2023 நவெம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற கூட்டம், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் 2023 நவெம்பர் 15ஆம் திகதி திகதி நடைபெற்ற கூட்டம் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் 2023 ஒற்றோபர் 05ஆம் திகதி | 2024 சனவரி 24 |

| | **நிறுவனம்** | **பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளுக்குரிய கால எல்லை/முன்னைய குழுவின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்/தற்போதைய செயலாற்றுகை** | **புலனாய்வு செய்யப்பட்ட திகதி** |
|---|---|---|---|
| | | நடைபெற்ற கூட்டம் ஆகியவற்றின் தற்போதைய நிலைமை. | |
| 12 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 2021, 2022 நிதியாண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மேற்பார்வை | 2024 சனவரி 24 |

## குழுவினால் நடாத்தப்பட்ட விசேட விசாரணைகள்

| | **விசேட விசாரணை** | **விசாரணை செய்யப்பட்ட திகதி** |
|---|---|---|
| 01 | அரச நிறுவனங்களில் நிதியல்லாத சொத்துக்கள் முகாமைத்துவ செயற்பாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் அதனுடன் தொடர்புடையதாக நிலவும் பிரச்சினைகளை ஆராய்தல். | 2023 நவெம்பர் 07 |
| 02 | தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் கட்டமைப்பின் (NEMIS) தற்போதைய செயலாற்றுகை, பிரச்சினைகள் மற்றும் மேம்படுத்துவது தொடர்பில் மீள ஆராய்தல். | 2023 நவெம்பர் 08 |

## விசேட அவதானிப்புகள்

விசாரணை செய்யப்பட்ட காலப்பகுதியினுள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் நிறுவனங்கள் தொடர்பிலான கீழ்வரும் பொதுப் பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டது.

- **உள்ளக கணக்காய்வு அலகுகள் காணப்படாமை மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் உரிய முறையில் நடத்தப்படாமை.**
- **பணியாட்டொகுதி வெற்றிடங்கள்.**
- **முன்னைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் விதப்புரைகளுக்கு உரிய கால எல்லைக்குள் பதில் வழங்கப்படாமை.**
- **அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய வருமானங்களை உரிய திகதிகளில் அறவிட்டுக் கொள்வதில் நிலவும் தாமதங்கள்.**
- **அரச நிதியின் முறையற்ற பயன்பாடு**
- **நிறுவனங்களுக்கிடையில் சிறந்த ஒருங்கிணைப்புகள் காணப்படாமை.**

## <u>விசாரணை செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்களிலும் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள் மற்றும் அவதானிப்புகளும் விதப்புரைகளும்</u>

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| **அரச நிறுவனங்களில் நிதியல்லாத சொத்துக்கள் முகாமைத்துவ செயற்பாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் அதனுடன் தொடர்புடையதாக நிலவும் பிரச்சினைகளை ஆராய்தல்.**<br><br>**விசாரணை செய்யப்பட்ட திகதி - 2023 நவெம்பர் 07** | | |
| **அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**<br>❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு<br>❖ பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br>❖ அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம்<br>❖ கொம்ப்ரோலர் ஜெனரல் திணைக்களம் | | |
| 01 | அரசாங்க நிதி அறிக்கையிடல் முறைமை பற்றி அரசாங்கக் கணக்குகள் திணைக்களம் கணினிச் சமர்ப்பணம் (Computer presentation) ஒன்றினை வழங்கியது .<br><br>அதற்கமைய, நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று என்பவற்றுக்கிடையில் நேரடித் தொடர்பு காணப்படாமை, அரச கடன் பெறுகையினூடாக கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்கள் அரசாங்க கணக்கில் (Island Account) வெளிப்படுத்தப்படாமை மற்றும் தேறிய சொத்துக்கள் திருத்த கணக்கின் மிகுதி தொடர்பில் ஆராயப்பட்டது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீள தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட | |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | திருத்தங்களும் இங்கு சமர்ப்பிக்கப்பட்டன.<br><br>விசேடமாக உதவித் தொகைகள் வழங்கப்படுகையில் மீண்டெழும் மற்றும் மூலதனம் என்றவாறு வகைப்படுத்துவதற்காக மற்றும் அரச சொத்துக்கள் விற்பனையின் மூலமாக கிடைக்கும் வருமானங்களை கணக்கில் வரவு வைப்பதற்காக கொள்கையொன்றைத் தயாரித்து 2024ஆம் ஆண்டில் அரச நிதிக் கூற்றுக்களில் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>அரச முயற்சியாண்மைக்காக வழங்கப்படும் மூலதன உதவி/மானியம்/சாட்டல் என்ற வகையில் 2024ஆம் ஆண்டு தொடக்கம் அரச நிதிக் கூற்றுக்களில் வரவு வைப்பதற்காக கொள்கைகள் தயாரிக்கப்படும். | |
| 02 | அரசாங்கத்தினால் பெறப்பட்ட கடன்கள் மூலம் உழைக்கப்பட்ட சொத்துக்கள், பயிற்சிகளுக்கு பயன்படுத்தப்பட்ட நிதி, ஆலோசனை விடயங்களுக்கு பயன்படுத்திய நிதி அவை பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பில் தெளிவான விளக்கம் காணப்படாமை ஓர் குறைபாடென சுட்டிக்காட்டிய குழு 2023.09.13 ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் | சொத்துக்கள் அடையாளம் காணப்படாமை தொடர்பான பிரச்சினையுடன் குடியரசுக் கணக்கு (Island Account) சொத்துக்கள் வெளிப்படுத்தப்படாமை, கணக்கு வைத்தல் பிரச்சினைகள் நிலவுகின்றமை மற்றும் 2022 குடியரசுக் கணக்கு தொடர்பில் காணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் இன்றளவில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அக் கணக்குகளில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளைக் குறைத்துக் கொண்டு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | பற்றிய குழு வழங்கிய கட்டளைகளின் பிரகாரம் அரசாங்க நிதியல்லாத சொத்துக்களை கணக்கில் வைப்பது தொடர்பான வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு அவசியமான குழுக்களை நியமித்து உரிய பணியினை மேற்கொள்ள ஆரம்பித்தமை தொடர்பில் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தது. | நிவர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், குடியரசுக் கணக்கில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மானியங்களாகவன்றி (Grant) Equity ஆக வெளிப்படுத்துவது முக்கியமானதெனவும் குழுவில் கலந்துரையாடப்பட்டது. சொத்துக்கள் மதிப்பீட்டின் போது வெளிநாட்டுக் கடன் உதவிகள்/மானியங்கள் தொடர்பான சொத்துக்களின் பெறுமதி மீது செலாவணி விகிதங்களின் தாக்கம் இருப்பதாக இங்கு குறிப்பிடப்பட்டது.<br><br>இன்றளவில் இது தொடர்பாக பல கூட்டங்களை நடாத்தியுள்ளதாகவும், அதன்போது பிரதானமாக இரண்டு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ./க.அ. தெரிவித்தார். அதற்கமைய அரசாங்கத்தினால் பெறப்படுகின்ற கடன்கள் வெவ்வேறாக என்ன விடயத்திற்காக பெறப்படுகின்றது என்பதனை அடையாளம் கண்டு அது தொடர்பாக குடியரசுக் கணக்கின் கையாளுபவர்களுக்கு disclosure Note ஒன்றினூடாக சுட்டிக்காட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக கையாளப்படுகின்ற கொள்கை Capital Grant/ Equity Transfer என்பவற்றில் எவ்வகையைச் சேர்ந்ததென தீர்மானிப்பதற்கு கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் நிதி, பொருளாதார |

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்</th></tr>
<tr><td></td><td></td><td>உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார். அத்துடன் 2024 ஆம் ஆண்டில் குடியரசுக் கணக்கினை தயாரிக்கின்ற போது முழுமையாக தவறுகளின்றிய முறைமையில் தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார்.<br><br>மேலும் எதிர்வரும் வருடங்களில் அரசாங்க கணக்கு வைப்புக்களின் போது சரியான முறைமைகளைப் பின்பற்றுவதற்காக தற்பொழுது தயாரிக்கப்படுகின்ற கொள்கைகளுக்கு சட்டபூர்வத் தன்மையை ஏற்படுத்துவது அவசியமென்பதை குழு சுட்டிக்காட்டியது.</td></tr>
<tr><td colspan="3">தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்<br>(2023.08.11 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றம் மற்றும் தற்போதைய செயலாற்றுகை)<br>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2023 நவெம்பர் 08</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -<br>❖ நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு<br>❖ தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்</td></tr>
<tr><td>01</td><td><u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் பிழையானவையென 2023.08.11 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் முன்வைத்த கூற்று</u></td><td>கணக்கீட்டு அலுவலர்களின் மேற்படி கூற்றுக்களைத் தொடர்ந்து உரிய 174 நீர்க் கருத்திட்டங்களின் மீள் பரிசோதனைக்காக தமது உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி தகவல்களை பெற்றுக் கொண்டதாகவும், அந்த பரிசோதனையிலும் தமது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவையென</td></tr>
</table>

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | உறுதிப்படுத்தப்பட்டதாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தெரிவித்தார். முன்னைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டமொன்றின் போது வழங்கப்பட்ட விதப்புரையின் பிரகாரம் பிரதம கணக்கீட்டு அலுவலரினால் பிரதேச செயலாளர்களூடாக பெற்றுக்கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையிலும் இந்த நீர்க் கருத்திட்டங்களில் தற்பொழுது 8 கருத்திட்டங்களில் மாத்திரமே நீர் வழங்கப்படுகிறது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேலும் தெரிவித்தார்.<br><br>அரசியலமைப்பினூடாக ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் தொடர்பில் எவராலும் சவாலுக்குட்படுத்த முடியாது எனவும், பாராளுமன்றத்தில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் செயற்பாடுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுவதாகவும், குறித்த கணக்கீட்டு அலுவலரினால் பாராளுமன்றம் தவறாக வழிநடாத்தப்பட்டுள்ளமை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கணக்கீட்டு அலுவலரின் கூற்று தொடர்பில் முறையான விசாரணையொன்றினை நடாத்தி 2023 நவெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னதாக அவ்வறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு (பி.க.அ.) குழு விதப்புரை செய்தது. அந்த அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னர் இது தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகளை தீர்மானிப்பதாக குழு தெரிவித்தது. |
| 02 | **<u>திணைக்களத்தினைத் தாபிப்பதற்குரியதான சட்ட மூலம் தயாரிக்கப்படாமை</u>** | 2014ஆம் ஆண்டு அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் தாபிக்கப்பட்டு சுமார் 10 வருடங்கள் கழிந்துள்ள போதிலும், இத்திணைக்களம் தொடர்பான சட்டமூலமொன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு திணைக்களம் தவறியுள்ளதாக குழு சுட்டிக்காட்டியது. திணைக்களத்திற்குரிய சட்டங்களை உருவாக்கிக்கொள்ளாமல் சமூக மட்ட அமைப்புக்கள் தொடர்பான முறையான மேற்பார்வையை மேற்கொள்வது கடினமென்பது குழுவின் கருத்தாக காணப்பட்டது.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>சட்டமூலத்தை சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தல், அமைச்சரவையின் அனுமதியின் பொருட்டு சமர்ப்பித்தல், சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துதல் தொடக்கம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வரையிலான திகதிகள் உள்ளடங்கிய |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | அறிக்கையொன்றினை 2023.12.08 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலருக்கு(க.அ.) குழு விதப்புரை செய்தது. |
| 03 | 2023 யூன் 30ஆம் திகதியில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த சமூக அடிப்படைச் சங்கங்களின் எண்ணிக்கை 5383 ஆக காணப்பட்ட போதிலும் 2023 ஒற்றோபர் 31ஆம் திகதியில் அந்த எண்ணிக்கை 4232 ஆக குறைவடைந்திருந்தமை தொடர்பில் அவதானித்த குழு அவ்வாறு குறைவடைந்தமைக்கான காரணங்களை வினவியது. | 2014ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையில் சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த சமூக நீர்வழங்கல் அமைப்புக்களின் எண்ணிக்கை 5383 என்ற போதிலும் சில அமைப்புக்களுக்கு நிதி கிடைக்காமை, நீர் மூலாதாரங்கள் தொடர்பான பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நீர்க் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை என பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ.) தெரிவித்தார். இன்றளவில் பதிவு செய்யப்பட்டு செயற்றிறன்மிக்கதாக இயங்கும் சுமார் 3900 சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் செயற்றிறனற்ற சுமார் 305 சமூக மட்ட அமைப்புக்கள் காணப்படுவதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>பதிவு செய்யப்பட்டு, இன்றளவில் செயற்பாடின்றி காணப்படுகின்ற மற்றும் நீர்க் கருத்திட்டங்களை ஆரம்பிக்காதுள்ள சங்கங்கள் தமது பதிவுச் சான்றிதழைப் பயன்படுத்தி வெவ்வேறு முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடுமாயின் அதற்கான பொறுப்பினை தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது. எனவே அவ்வாறான சங்கங்களை அடையாளம் கண்டு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | அவற்றின் பதிவினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பி.க.அ./க.அ. விதப்புரை செய்தது. |
| 04 | பல மாவட்டங்களின் உத்தியோகத்தர்களை சூம் (zoom) தொழில்நுட்பத்தினூடாக தொடர்புகொண்டு அந்தந்த மாவட்டங்களில் செயற்படுகின்ற சமூக அடிப்படைச் சங்கங்கள் தொடர்பாகவும் நீர்க் கருத்திட்டங்களில் நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் குழுவினால் தகவல் வினவப்பட்டது. | குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 589 சமூக நீர்வழங்கல் கருத்திட்டங்களில் 404 கருத்திட்டங்கள் செயற்பாட்டு மட்டத்தில் இருப்பதாக குருநாகல் பிரதேச அலுவலகத்தின் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். செயற்பாடற்ற 185 கருத்திட்டங்களுள் அதிகமானவை நீர்க் கருத்திட்டங்களுக்கான எதிர்பார்ப்புடன் பதிவு செய்யப்பட்டு, ஒதுக்கீடுகள் கிடைக்காத அல்லது வேறு காரணங்களால் ஆரம்பிக்கப்படாத நீர்க்கருத்திட்ட அமைப்புகள் எனவும் அவர் தெரிவித்தார்.<br><br>மொணராகலை மாவட்டத்தில் 160 கருத்திட்டங்களும் கம்பஹா மாவட்டத்தில் 149 கருத்திட்டங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றுள் முறையே 145 மற்றும் 117 கருத்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளதாகவும் இதன்போது வெளிப்படுத்தப்பட்டது. கம்பஹா மாவட்டத்தில் சில சமூக அடிப்படைச் அமைப்புகள் நீர்வழங்கல் சபையுடன் இணைந்துள்ள காரணத்தால் அமைப்புகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்தார்.<br><br>இரத்தினபுரி மாவட்ட மக்களது குடிநீர்த் தேவைப்பாட்டில் சுமார் 70%ஐ அங்கு இயங்குகின்ற 503 சமூக நீர்க் கருத்திட்டங்களூடாக நிறைவேற்றிக் கொள்வதாக இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தின் நிலையப் பொறுப்பதிகாரி சூம் (zoom) |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | தொழில்நுட்பத்தினூடாக தொடர்புகொண்டு தெரிவித்தார்.<br><br>இரத்தினபுரி மாவட்டத்தின் சமூக நீர்வழங்கல் செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்து தமது பாராட்டினைத் தெரிவித்த குழு, அரசாங்கத்தினால் நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்ட கருத்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்பார்வைக்கு உட்படுத்துதல் வேண்டுமெனவும், அத்தகைய மேற்பார்வைக்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றினை தயாரிக்க வேண்டுமென்பதையும் குழு வலியுறுத்தியது. |
| 05 | **<u>சமூக அடிப்படை எண்ணக்கருவைப் பாதுகாத்தல்.</u>** | சமூக அடிப்படை நீர்வழங்கல் கருத்திட்டங்கள் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்ட சில கிராமிய பிரதேசங்களுக்கு நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நீர் வழங்கலை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்த காரணத்தினால் அப்பிரதேசங்களில் சமூக நீர்வழங்கல் கருத்திட்டங்கள் மூடப்படும் நிலைமை உருவாகியுள்ளதாக குழு சுட்டிக்காட்டியது. சமூக அடிப்படை எண்ணக்கரு என்பது மிகச் சிறப்பான எண்ணக்கரு என்பதால் அதனைப் பாதுகாக்கும் வகையில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் மற்றும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்புடன் நீர்க் கருத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு தெரிவித்தது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | சமூக நீர்வழங்கல் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்களில் சில காலப்பகுதிகளில் நீர்வழங்கல் சபையினால் நீர்வழங்கப்படும் போது மேற்படி சமூக நீர்வழங்கல் கருத்திட்டங்கள் நீர்வழங்கல் சபையின் கீழ் கொண்டுவரப்படுவதாக பி.க.அ. இதன்போது தெரிவித்தார். விசேடமாக சமூக நீர்வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் மக்களுக்கு நீரை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட குழாய்களையே நீர்வழங்கல் சபையும் பயன்படுத்துவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது. ஆகக் குறைந்தது 10 வருட காலப்பகுதிக்குள் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நீரை வழங்க முடியாதுள்ள பிரதேசங்களுக்கு மாத்திரம் சமூக நீர்வழங்கல் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு நீர்வழங்கல் சபையுடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக பி.க.அ. தெரிவித்தார்.<br><br>**விதப்புரைகள்**<br><br>பல மில்லியன் நிதி மற்றும் பௌதீக வளங்களைக் கொண்ட சமூக அடிப்படை அமைப்புகளைப் பாதுகாப்பதற்காக முறையான ஒழுங்குபடுத்தல் அவசியம் என்பதனை சுட்டிக்காட்டிய குழு, அதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளை தற்பொழுது வரைவு செய்துள்ள தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்கள சட்டமூலத்தில் உள்ளடக்க வேண்டுமென வலியுறுத்தியது. |
| 06 | 2023.08.11 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரையின் பிரகாரம் | இது தொடர்பில் மீண்டும் விசாரணை செய்து இந்நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள் யாவர்? அவ் உத்தியோகத்தர்கள் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டுள்ள “நிறைவேற்றப்படாத பணிகள் மற்றும் விலைமனுப் பட்டியலின் பணிப்புரைகளுக்கு மாறாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக ரூ. 14.4 மில்லியன் செலுத்தப்பட்டமை தொடர்பிலான குழு அறிக்கை” ஊடாக நிதி ஒழுங்குவிதிகள் ஏற்பாடுகளுக்கு மாறாக செயற்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் யார் என்பதனை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பதையும், அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்காற்று படிமுறைகள் தொடர்பில் எந்தவொரு விதப்புரையும் முன்வைக்கப்படவில்லை என்பதையும் குழு சுட்டிக்காட்டியது. | தொடர்பில் எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவை? ஆகிய விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையினை ஒருமாத காலப்பகுதிக்குள் (2023.12.08ஆந் திகதிக்கு முன்னர்) குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/ க.அ. இற்கு குழு விதப்புரை செய்தது. |
| 07 | **<u>தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இன்மை</u>** | தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கென அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே அலுவலர் ஒருவர் நியமனஞ் செய்யப்படவில்லை எனவும், அதன் காரணமாக இத்திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது.<br><br>மேலும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியின் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமனஞ் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர், கணக்கீட்டு அலுவலரின் தற்றுணிபின் பிரகாரம் கணக்காளர் பதவிக்கு நியமனஞ் செய்யப்பட்டதாக இதன் போது தெரிய வந்தது.<br><br>**விதப்புரைகள்**<br><br>இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு, கணக்காளர் பதவிக்கான நியமனத்தை வழங்குவதற்குள்ள இயலுமை தொடர்பாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் வினவுமாறும், அது தொடர்பான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு (பிக.அ.) குழு பரிந்துரைத்தது. |
| 08 | **சமூக நீர் வழங்கல் கருத்திட்டங்களில் நீரின் தன்மையைப் பரிசோதித்தல்** | உலக வங்கி கடன் உதவித் திட்டத்தின் கீழ் இயங்கும் நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் (WASSIP) கீழ் நீரின் தரத்தை பரிசோதிப்பதற்காக 17 நடமாடும் பரிசோதனைக் கருவிகள் (MOBILE TEST KITS) வழங்கப்பட்டுள்ளதாக இதன் போது தெரிய வந்தது. அப்பரிசோதனை கருவிகள் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ளதாகவும், ஒரு பரிசோதனைக் கருவியின் பெறுமதி ரூ. 10 மில்லியன் எனவும் குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | **<u>விதப்புரைகள்</u>**<br>இக்கருத்திட்டத்தின் கீழ் துப்பரவேற்பாட்டு பணிகளுக்காக பெற்றுக் கொடுத்த உபகரணங்கள் யாவை? அவற்றுக்கான செலவுகள் எவ்வளவு? அவ்வுபகரணங்களின் தற்போதைய நிலை மற்றும் அவை யாருடைய பொறுப்பின் கீழ் உள்ளன? போன்ற விடயங்களை உள்ளடக்கிய முழுமையான அறிக்கையொன்றினை 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆந் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு (பிக.அ.) குழு பரிந்துரைத்தது. |
| 09 | **<u>மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்களுடன் கூட்டங்களை நடத்தல்</u>** | குழு, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மாவட்ட அலுவலகங்களுடன் மாதத்திற்கு ஒரு முறையேனும் கூட்டங்களை நடத்த வேண்டுமென குறிப்பிட்டதுடன், மாவட்ட அலுவலகங்கள் பிரதேச அலுவலகங்களையும் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கியது. |
| **தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் (NEMIS) தற்போதைய செயலாற்றுகை, சிக்கல்கள் மற்றும் மேம்படுத்தல் தொடர்பாக மீண்டும் ஆராய்தல்**<br>**விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி – 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08ஆந் திகதி** | | |

<table>
<tr><th></th><th>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</th><th>- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்</th></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள்<br>❖ கல்வி அமைச்சு<br>❖ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA)<br>❖ மொரட்டுவை பல்கலைக்கழகம்</td></tr>
<tr><td>01.</td><td><u>தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் (NEMIS) தற்போதைய நிலை</u><br><br>முறையான தகவல் முறைமையொன்றை பயன்படுத்துவது பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்கு பேருதவியாக அமையு மென சுட்டிக்காட்டிய குழு, இலங்கை பாடசாலைக் கட்டமைப்பின் பணிகளுக்காக தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை (NEMIS) பயன்பாட்டுக்கு எடுப்பதுடன் தொடர்புடைய பணிகளின் முன்னேற்றம் தொடர்பாகவும் வினவியது.</td><td>2023.07.07 திகதி இடம்பெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக்கூட்டத்தின் பின்னர் பல சந்தர்ப்பங்களில் மொரட்டுவை பல்கலைக்கழகத்துடனும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையுடனும் இத்தகவல் முறைமை தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டதாக கல்வி அமைச்சின் பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.<br><br>இத்தகவல் முறைமையின் தற்போதைய நிலையை விளக்கிய மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், இத்தரவு முறைமை, தரவுத் தளம் (database), தரவு முகாமைத்துவ முறைமை (dbms), பிரயோக முறைமை (application system) மற்றும் அலுவலர்கள் இணையம் ஊடாக தரவுத் தளத்தை அணுகக் கூடிய வசதிகளை வழங்கும் வலை சேவையக முறைமை (web server system) ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது எனவும், அபிவிருத்தி செய்வதற்கு இணங்கிய 09 மொடியூல்களுக்கு மேலதிகமாக பயன்பாட்டின் போது ஏற்பட்ட தேவைகளுக்கு அமைவாக மேலும் 09 மொடியூல்களைத் தயாரித்துள்ளதாக தெரிவித்தார்கள்.<br><br>2017ஆம் ஆண்டு NEMIS தரவு முறைமையை பயன்பாட்டுக்காக விடுவித்த சந்தர்ப்பத்தில் தரவுத் தளத்தை</td></tr>
</table>

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | (database) வடிவமைப்பதற்கு பயன்படுத்திய SQL Server 2017 Enterprise Edition மென்பொருளுக்கு இன்றளவில் பாதுகாப்பு இற்றைப்படுத்தல்கள் (Security updates) வழங்கப்படுவதில்லை என்பதால் நிகழ்கால தேவையொன்றான (Public access) பொது மக்கள் பிரவேசத்துடனான முறைமையொன்றுக்காக அதனை பயன்படுத்துவது பொருத்தமற்றதென அவர்கள் தெரிவித்தார்கள்.<br><br>எதிர்காலத்தில் சீன உதவித் திட்டத்தின் கீழ் Huawei நிறுவனத்தின் தரவு முறைமைக்காக மென்பொருள் தளமொன்றை (platform) வழங்க உள்ளதாக இதன் போது கல்வி அமைச்சின் பி.க.அ. தெரிவித்ததுடன், மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் Huawei ஆய்வுகூடத்துடன் இணைந்து தரவு முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக அதனுடைய தேவைகளை இனங்கண்டு, முன்மொழிவுகளை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டது.<br><br>முறைமையின் தரவுகளை இற்றைப்படுத்தும் தேவையும் நிலவுவதாக மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் சுட்டிக்காட்டியதுடன், நிகழ்காலத் தேவைகளுக்கு பொருந்தும் வகையில் புதிய மென்பொருள் தளத்தின் தரவுக் கட்டமைப்பை செயற்படுத்துவதற்கு அவசியமான வேலைத் திட்டங்களை இற்றைப்படுத்தல் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | மற்றும் தொழில்நுட்ப மேம்படுத்தல் உள்ளடங்கிய நீண்டகாலத் திட்டத்துடன் இப்புதிய மென்பொருள் தளத்திற்கு பிரவேசிக்க வேண்டுமென தெரிவித்தார்கள். |
| 02 | **<u>NEMIS தரவு முறைமைக்குள் தரவுகளை உட்செலுத்தல் மற்றும் இற்றைப்படுத்தல் தொடர்பாக நிலவும் சிக்கல்கள்</u>**<br><br>NEMIS தரவு முறைமையின் 09 மொடியூல்களில் இன்றளவில் general reporting மொடியூல் மாத்திரமே பயன்படுத்தப்படுகிறது எனவும், வலய அலுவலகங்களில் தரவுகளை உட்செலுத்துவதில் நிலவும் குறைபாடுகள் காரணமாக Not specified எனும் தரவுத் தொகுதியொன்று காட்டப்படுவதாகவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.<br><br>NEMIS முறைமை உரிய வகையில் தொழிற்படாததன் காரணமாக மாகாண மட்டத்தில் தரவு முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும், அதன் காரணமாக வலய அலுவலகங்கள் பல முறை தரவுகளை உட்செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது எனவும் குழுக் கூட்டத்தின் போது தெரியவந்தது. | NEMIS தரவு முறைமையில் தரவுகளை உட்செலுத்தும் பணி வலயக் கல்வி அலுவலகங்களில் ஆசிரியர்களின் பெயர் வழிக் கோப்புக்கு பொறுப்பாக இருக்கும் அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது எனவும்,<br><br>தற்போது 220,000 ஆசிரியர்களின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல் முறைமையில் காணப்படுவதாக பி.க.அ./க.அ. தெரிவித்ததுடன், அத்தகவல்களை ஆசிரியர்களின் விடயங்கள் (Subject) மற்றும் மாவட்டத்தின் அடிப்படையில் முறைமையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.<br><br>அண்மையில் அதிபர் பதவிக்கான பதவியுயர்வைப் பெற்றுக் கொண்ட ஆசிரியர்களை இம்முறைமையிலிருந்து நீக்கி, தகவல் முறைமையை இற்றைப்படுத்தும் பணிகள் இன்றளவில் வலயக் கல்வி காரியாலயங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், உரிய உதிரிப்பாகங்கள் மற்றும் வலையமைப்பு இணைப்புக்களில் நிலவும் குறைபாடுகள் காரணமாக வலயக் கல்வி அலுவலகங்களில் தரவுகளை உட்செலுத்துவதில் தாமதம் நிலவுவதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | ஆரம்பத்தில் இத்தகவல் முறைமைக்குள் ஆசிரியர்கள் தாமாகவே தகவல்களை உட்செலுத்தும் (self service) வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதும், அதன் போது எழுந்த சில நடைமுறை ரீதியான சிக்கல்கள் காரணமாக கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைவாக அவ்வசதிகளை நீக்கி, வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக மாத்திரம் தரவுகளை உட்செலுத்தக் கூடியவாறு முறைமையை வடிவமைத்ததாக மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் தெரிவித்தார்கள்.<br><br>இம்முறைமையின் ஒவ்வொரு மொடியூல்களின் தொழிற்படுநிலை தொடர்பாக குழு வினவிய போது, மொடியூல்கள் தொழிற்படு நிலையில் இருப்பதாக பேராசிரியர்கள் தெரிவித்தார்கள்.<br><br>மேலும், தற்போதுள்ள வன்பொருட்களின் ஆற்றல் மற்றும் நினைவகம் மென்பொருட்களை இற்றைப்படுத்துவதற்கு போதுமானதல்ல என்பதால் Huawei நிறுவனத்தின் உதவியுடன் தற்போதுள்ள முறைமையில் வன்பொருள் கூறுகளை இற்றைப்படுத்துவதற்கு (Hardware update) எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.<br><br>NEMIS முறைமையை செயற்படுத்த ஆரம்பித்து நீண்ட காலம் சென்றிருப்பினும், இதுவரை அது ஒரு முழுமையான தரவு முறைமையாக |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | உரியவாறு இயங்காமை தொடர்பாக குழு தனது அதிருப்தியை தெரிவித்தது.<br><br>NEMIS முறைமைக்காக உத்தேச வன்பொருட்களை இற்றைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் வரை, வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக முழுமைப்படுத்தப்படாத தரவுகளை உட்சேர்க்கும் இயலுமை உள்ளதா என்பது தொடர்பாக குழு வினவியதுடன், பொது அணுகல் (Public access) வசதிகளை வழங்காமல் அமைச்சின் அலுவலர்கள் மூலம் அதனை நிறைவேற்ற முடியுமென்ற முடிவுக்கு வரலாமென மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் தெரிவித்தனர்.<br><br>NEMIS முறைமையின் தரவுகளை இற்றைப்படுத்துவதன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு 100 வலயக் கல்வி அலுவலகங்களின் பிரதிப் பணிப்பாளர்களுடன் (zoom) தொழில்நுட்பத்தின் மூலம் 4 கூட்டங்களை நடத்தி, 2023 ஒற்றோபர் மாதம் 15ஆம் திகதி நிறைவேற்றவேண்டிய இலக்குகளை வழங்கியதாக பி.க.அ./ க.அ.தெரிவித்தார்.<br><br>எவ்வாறெனினும் இதுவரை அப்பணிகளை முழுமையாக நிறைவு செய்யாத வலயக் கல்வி அலுவலகங்கள் இருப்பதாகவும், வருடத்திற்கு நான்கு தடவை தொகை மதிப்பு அறிக்கை மூலம் இற்றைப்படுத்தப்படாத தரவுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொண்டு அவற்றை இற்றைப்படுத்துமாறு வலயக் கல்வி அலுவலகங்களுக்கு |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | அறிவிக்குமாறும் பி.க.அ./ க.அ.மேலும் குறிப்பிட்டார்.<br>**<u>அவதானிப்புகள் / விதப்புரைகள்</u>**<br>உரியவாறு தரவுகளை இற்றைப்படுத்தாதன் காரணமாக தரவு முறைமையில் காட்டப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும், சம்பளம் செலுத்தப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் வேறுபாடு நிலவுவதாகவும் குழு அவதானித்தது.<br>தரவு முறைமையை இற்றைப்படுத்தும் பணிகளை 2024ஆண்டு மார்ச்சு மாதமளவில் நிறைவு செய்யுமாறும் பி.க.அ./ க.அ.இற்கு குழு ஆலோசனை வழங்கியது. |
| 03 | **<u>கொள்கை ரீதியான மற்றும் நிர்வாக ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது NEMIS தரவு முறைமையை பயன்படுத்தல்.</u>**<br>தற்போது கல்வி அமைச்சு கொள்கை ரீதியான மற்றும் நிர்வாக ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இத்தரவு முறைமையை பயன்படுத்தும் விதம் தொடர்பாக குழு வினவியது. | ஆசிரியர்கள் ஓய்வுபெறவுள்ள திகதி, ஒவ்வொரு விடயத்திற்கு / மொழி மூலத்திற்குள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு ஆசிரியர் தரத்திலுமுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை இம்முறைமை ஊடாக பெற்றுக் கொள்ள முடியுமெனவும், அமைச்சின் வரவுசெலவுத்திட்டத்தை தயாரிக்கும் போது அவசியமான சம்பளம் தொடர்பான தரவுகளை இதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியாதெனவும் பி.க.அ. / க.அ. தெரிவித்தார். |
| 04 | **<u>NEMIS முறைமையை இற் றைப்படுத்துவதுடன் தொடர்புடைய எதிர்கால நடவடிக்கைகள்</u>** | **<u>அவதானிப்புகள் / விதப்புரைகள்</u>**<br>NEMIS முறைமை பற்றிய கல்வி அமைச்சின் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மாகாணக் கல்வி செயலாளர்கள் மற்றும் மாகாண கல்வி பணிப்பாளர்களை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | விழிப்பூட்டி, அவர்களுக்கும் தரவு முறைமைக்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது பொருத்தமானதெனவும், தரவு முறைமையின் பணிகள் தொடர்பான பொறுப்புக்களை மேலதிகச் செயலாளரின் கீழ் கொண்டு வந்து சகல வலய அலுவலகங்கள் மற்றும் மாகாண அலுவலகங்களுடன் சூம் (zoom)தொழில்நுட்பம் ஊடாக இணையவழிக் கூட்டத்தை நடத்தி அதன் முன்னேற்றத்தை தொடர்ச்சியாக மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் பி.க.அ./க.அ. இற்கு குழு ஆலோசனை வழங்கியது.<br><br>கல்வி அமைச்சு, மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) போன்ற நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலர்களைக் கொண்ட குழுவால் இயக்கப்படும் NEMIS தரவு முறைமையை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தை இரு வாரத்திற்கு ஒரு முறை குழுவுக்கு அறிக்கையிட வேண்டுமென பி.க.அ./க.அ.இற்கு குழு ஆலோசனை வழங்கியது.<br><br>தற்போதுள்ள NEMIS தரவு முறைமையின் மொடியூல்கள் மற்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகள் (Technical requirements), வன்பொருட்கள் தேவையை பூர்த்தி செய்வதற்காக எடுக்கும் கால வரையறை போன்ற தகவல்களை உள்ளடக்கிய அடிப்படை அறிக்கையொன்றை 03 வாரங்களுக்குள் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது.<br><br>தரவு முறைமையை இற்றைப்படுத்தும் பணிகளுக்காக மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் வலயப் பணிப்பாளர்களை இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும், மாதத்திற்கு இரண்டு தடவையேனும் கூட்டத்தைக் கூட்டி அதன் முன்னேற்றத்தை ஆராய வேண்டுமெனவும் குழு தெரிவித்தது.<br><br>**கல்வி அமைச்சின் செயலாளரின் ED/14/DMISD/21/08ஆம் இலக்க மற்றும் 2024.02.08ஆம் திகதிய கடிதத்தின் மூலம் முறைமை தொடர்பாக தயாரித்த அறிக்கையொன்றும், இத்தகவல் முறைமையின் ஆரம்பம், தற்போதைய நிலை தொடர்பான சிக்கல்கள் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான மேலதிக தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும், தற்போது நிலவும் தேவைகளுடன் பொருந்தக்கூடிய இற்றைப்படுத்தப்பட்ட புதிய முறைமையொன்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.**<br><br>**மேலும், கல்வி அமைச்சின் செயலாளரின் ED/05/90/Audit/COPA/2024ஆம் இலக்க மற்றும் 2024.03.04ஆம் திகதிய கடிதத்தில், இப்பணிகள் தொடர்பாக 2023.12.22ஆம் திகதி வரை இடம்பெற்ற கூட்டங்களின் குறிப்புக்களுடன்** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **தற்போதைய நிலையும் அறிக்கை இடப்பட்டுள்ளது.** |
| 05 | **<u>கல்விசார் பணியாட்டொகுதியினரின் பிள்ளைகளை முதலாம் வகுப்புக்கு அனுமதிக்கும் போது கஷ்டப் பிரதேச சேவைக் காலத்திற்காக புள்ளிகளைப் பெற்றுக் கொடுக்கும் முறையியலில் குறைபாடுகள் நிலவுகின்றமை.</u>**<br><br>பாடசாலைகளில் முதலாம் வகுப்புக்கு பிள்ளைகளை அனுமதிக்கும் போது கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் சேவையாற்றல் என்பதன் கீழ் கல்விசார் பணியாட்டொகுதியினருக்கு புள்ளி வழங்கும் நடைமுறையில் குறைபாடுகள் நிலவுவதையும், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளை தீர்மானிப்பதில் தெளிவான வரையறைகள் இல்லை என்பதையும் குழு அவதானித்தது. | கல்வி அமைச்சின் 2005/01ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வசதிகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகள் வகைப்படுத்தப்படுவதாக பி.க.அ. /க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்</u>**<br><br>ஆசிரியர் ஒருவர் வசிக்கும் பிரதேசத்திலிருந்து சேவையாற்றும் பாடசாலைக்கு உள்ள தூரத்தையும் பாடசாலையின் வகைப்படுத்தலுக்கு அமைவாக கஷ்டப் பிரதேச சேவை என்பதன் கீழ் கவனத்திற் கொள்ள வேண்டுமென குழு கருதுகிறது.<br><br>“கஷ்டப் பிரதேசப் பாடசாலை” வரைவிலக்கணத்தை பயன்படுத்தும் விதம் தொடர்பாக சிக்கல் நிலை நிலவுவதை அவதானித்த குழு, யாதேனும் நபரொருவரின் நிரந்தர வசிப்பிடம் கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ளதெனின், அந்நபர் தொடர்பாக “கஷ்டப் பிரதேசப் பாடசாலை” என்ற வரைவிலக்கணம் எவ்வாறு அமைய வேண்டுமென்பது தொடர்பாக வினவியது. மேலும் பாடசாலை வகைப்படுத்தலுக்கு ஏற்புடைய சுற்றுநிருபங்களை இற்றைப்படுத்த வேண்டுமெனவும், அதற்காக குழுவொன்றை நியமிப்பது பொருத்தமானதெனவும் குழு சுட்டிக்காட்டியது.<br><br>ஆசிரியர்கள் அவர்கள் வசிக்கும் பிரதேசத்திலிருந்து மிகத் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | தொலைவிலுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் ஏற்படும் நடைமுறை ரீதியான சிக்கல்கள் தொடர்பாக குழு கவனத்தை செலுத்தியதுடன், ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்ளும் போது மாகாண ரீதியான பிரதிநிதித்துவத்தில் நிலவும் சமமற்ற தன்மை காரணமாகவே அவ்வாறான நியமனங்கள் வழங்கப்படுவதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.<br><br>எதிர்காலத்தில் புதிய கல்விச் சீர்த்திருத்தங்களின் கீழ் பாடசாலை சபைகளுக்கு (School Boards) ஆசிரியர்களை நியமிப்பதற்கு அதிகாரம் வழங்கல், பிரசவ விடுமுறை பெற்றுள்ள ஆசிரியைகளுக்குப் பதிலாக தற்காலிக அடிப்படையில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை நியமித்தல் போன்ற தீர்வுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இச்சிக்கல்களை குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.<br><br><u>**விதப்புரைகள்**</u><br><br>“கஷ்டப் பிரதேசப் பாடசாலை” என்பதை வரைவிலக்கணப்படுத்தல் தொடர்பாக கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி 2024ஆம் ஆண்டு சனவரி மாதம் 31ஆந் திகதியளவில் குழுவிடம் அறிக்கையிடுமாறு பி.க.அ./க.அ.இற்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**கல்வி அமைச்சின் செயலாளரின் ED/05/90/Audit/COPA/2024ஆம் இலக்க மற்றும் 2024.03.25ஆம் திகதிய கடிதத்தில்** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **"பாடசாலைகளுக்கு கல்விசார் பணியாட்டொகுதியை ஆட்சேர்த்தல், சேவை நிலையங்களை வழங்கல் மற்றும் இடமாற்றத்தை முறைப்படுத்துவதற்காக பாடசாலைகளை வகைப்படுத்தல்" என்ற தலைப்பில் 2024.01.29ஆம் திகதி கல்வி அமைச்சின் செயலாளரால் 01/2024ஆம் இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாகவும், மாகாணக் கல்வி அலுவலர்கள், தமது பிரதேசத்தின் சகல பாடசாலைகளுக்கும் சுற்றுநிருபத்துடன் ஏற்புடையதாக புள்ளிகளை வழங்கி, உரிய ஆவணங்களை கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்த பின்னர், கஸ்டப் பிரதேசப் பாடசாலைகளை பெயரிடுவதற்காக எதிர்வரும் 03 ஆண்டுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவால் 09 மாகாணங்களுக்குரிய பாடசாலைகளின் ஆவணங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, அவ்வவ் பாடசாலை வகைக்குரிய ஆகக் குறைந்த புள்ளிகள் தீர்மானிக்கப்படுமெனவும், அதன் பின்னர் பாடசாலை வகைப்படுத்தலை வெளிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.** |
| 06 | **<u>அதிபர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கும் நடைமுறையில் நிலவும் சிக்கல்கள்</u>**<br>தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை ஆட்சேர்க்கும் நேர்முகப் பரீட்சை தொடர்பாக கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ள | அதிபர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் போது அலுவலர்களின் பணிகளுக்கிடையில் பிளவு ஏற்படுவதை தவிர்ப்பதற்காக சகல உத்தியோகத்தர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்குவது பொருத்தமானதென பி.க.அ./ க.அ. தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | 2023.03.07ஆம் திகதிய EDU-A-MOE-2022-05ஆம் இலக்க கணக்காய்வு உசாவல்கள் தொடர்பாக கவனஞ் செலுத்திய குழு, அதிபர்களை ஆட்சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகளின் போது, இதற்கு முன்னர் பாடசாலைகளில் சேவையாற்றியுள்ள விண்ணப்பதாரிகளின் சேவை காலத்திற்கென விசேடமாக புள்ளிகளை வழங்க வேண்டுமா என வினவியது. | மேலும், அதிபர்களை ஆட்சேர்க்கும் நேர்முகப் பரீட்சைகளின் போது அனைவருக்கும் பொதுவான வகையில் சேவை மூப்பைக் கருத்திற் கொண்டு புள்ளிகளை வழங்குமாறு பகிரங்கச் சேவை ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக பி.க.அ./க.அ. குறிப்பிட்டார்.<br><br>எனினும், குறித்த பணிகளில் அனுபவமுள்ள அலுவலர்களை பாடசாலைக்கு நியமனஞ் செய்ய வேண்டுமென்பதால், இந்நேர்முகப் பரீட்சைகளில் புள்ளிகளை வழங்கும்போது பிரதி அதிபர் மற்றும் அதிபர் பதவிகளில் சேவையாற்றிய காலப்பகுதி தொடர்பாக கருத்திற் கொள்வது பொருத்தமானதெனவும், இது தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனும் கலந்துரையாடி தீர்மானமொன்றை மேற்கொள்வதாகவும், அது பற்றி பகிரங்கச் சேவை ஆணைக்குழுவிடமும் வேண்டுகோள் விடுக்க உத்தேசித்துள்ளதாகவும் பி.க.அ./க.அ. மேலும் தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள் / விதப்புரைகள்</u>**<br><br>பாடசாலை தவிர்ந்த வேறு திணைக்களங்களுக்குச் சேவை இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றும் அலுவலர்களுக்கு அத்திணைக்களத்தின் பணிகளுடன் தொடர்புடைய விசேட வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவதால் அவ்வாறான உத்தியோகத்தர்களை பிரதி அதிபர் அல்லது உதவி அதிபர் பதவிகளில் நியமித்து, குறித்த காலப்பகுதிக்கு கடமையில் ஈடுபட்டதன் பின்னர் அதிபர் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | பதவிகளுக்கு நியமனஞ் செய்தல் மற்றும் பாடசாலை வகைப்படுத்தல் விகிதாசாரத்திற்கு ஏற்ப நியமனம் வழங்குவது மிகவும் பொருத்தமானதென குழு கருதியது.<br>தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை ஆட்சேர்த்துக் கொள்வது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பில் அதிபர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும்போது புள்ளிகளை வழங்க பின்பற்றிய நடபடிமுறை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட விடயங்களடங்கிய அறிக்கை ஒன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./க.அ.இற்கு குழு பரிந்துரைத்தது.<br>**கல்வி அமைச்சு செயலாளரின் ED/05/90/Audit/COPA/2024ஆம் இலக்க மற்றும் 2024.03.28ஆம் திகதிய கடிதத்தில் இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் Iஆம் தரத்திற்கு பதவி உயர்த்துவது தொடர்பாக 2019, 2020, 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் அதிபராக சேவையாற்றிய காலப்பகுதிக்கு புள்ளிகள் வழங்கப்படவில்லை எனவும், பகிரங்கச் சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் செயலாளரின் ESC/APP/SLEAS/04/64/2023ஆம் இலக்க மற்றும் 2024.02.15ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள புதிய புள்ளி வழங்கும் நடபடிமுறைக்கு அமைவாக பிரதி அதிபர்/அதிபர் பதவிகளின் சேவை அனுபவத்திற்கு ஆகக் கூடியதாக 20 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளதென அறிக்கையிடப்பட்டுள்ளதுடன்,** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **SC/FR/126/2022ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் பிரதியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 07 | **<u>பாடசாலை நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணப் பட்டியலை செலுத்தல்</u>**<br><br>பாடசாலைகளில் நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணம் செலுத்தும் விதம் தொடர்பாக குழு வினவியது. | மாகாண பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளின் நீர்க் கட்டணப் பட்டியல்கள் அரசாங்கத்தால் செலுத்தப்படுவதில்லை எனவும், 2022 இல் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு கூட்டாக சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரம் மூலம் மாணவர் ஒருவருக்கு 20 லீற்றர் நீர் பயன்பாட்டுக்கு தேவையெனக் கருதி ஒரு மாதத்தில் 20 நாட்கள் பாடசாலை நடைபெறுகின்றது என்ற எடுகோளுடன் நீர் பயன்பாட்டுக்காக செலவாகும் தொகையை அரசாங்கம் செலுத்துவதற்கும், அதற்கு மேலதிகமாக செலவாகும் தொகையை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (School Development Societies) ஊடாக செலுத்துவதற்கும், நீர் இணைப்பொன்றை இலவசமாக வழங்குவது போன்ற முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொண்டதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>பாடசாலை கூரைகளில் சூரிய சக்தி படலங்களை (Solar Panel) பொருத்தும் இயலுமை தொடர்பாக குழு கவனஞ் செலுத்தியதுடன், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுடன் இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கூட்டத்தின் போது 3000 பாடசாலைகளில் சூரிய சக்தி படலங்களை பொருத்துவதற்கு சாத்திய வள ஆய்வை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | மேற்கொள்வதற்காக இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபை, மின்சார சபையுடன் குறித்த அமைச்சையும் இணைத்து செயற்பாட்டுக் குழுவொன்றை நியமித்துள்ளதாக பி.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 08 | **<u>2024ஆம் ஆண்டின் பாடசாலை நாட்காட்டியை தயாரிப்பது தாமதமாகியமை</u>**<br><br>அதிபர்களுக்கு 2024ஆம் ஆண்டின் பாடசாலை நாட்காட்டியை இதுவரை தயாரிக்க முடியாமல் போனமை தொடர்பாக குழு கவனஞ் செலுத்தியது. | இன்றளவில் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகளை நடத்தும் திகதிகளை தீர்மானித்துள்ளமையால் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு வைபவங்கள் போன்றவற்றை உள்ளடக்கி பாடசாலை நாட்காட்டியை தயாரிக்கும் இயலுமை உள்ளதாகவும், எதிர்வரும் வாரமளவில் பாடசாலைகளுக்கு அதனை அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார். இது தொடர்பாக சுற்றுநிருபம் மூலம் அதிபர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பி.க.அ./க.அ.இற்கு குழு ஆலோசனை வழங்கியது. |
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**<br><br>**(2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை)**<br><br>**விசாரிக்கப்பட்ட திகதி – 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆந் திகதி** | | |
| **அழைக்கப்பட்ட நிறுவனங்கள்**<br>❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு<br>❖ உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | | |
| 01 | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கடந்த ஐந்து வருடங்களில் மற்றும் இவ்வருடத்தில் தற்போது வரை | |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | திரட்டிய வரி வருமானம் தொடர்பான தகவல்களை பகுப்பாய்ந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் கணினி சமர்ப்பணமொன்று (Computer presentation) மேற்கொள்ளப்பட்டது.<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஊடாக நிர்வகிக்கப்படும் வரி வகைகள் (நேரடி மற்றும் மறைமுக வரி தனித் தனியாக), மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் வருமானத்தை சேகரித்தல் (2018-2023) அரச வரி வருமானத்திற்கு மற்றும் மொத்த தேசிய உற்பத்திக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பின் மூலமான மொத்த சேர் பெறுமதி வரி (2018 – 2023) மொத்த வருமான வரி (2023), வரிச் செலுத்துபவர்களின் வகைக்கேற்ப பல்வேறு வரிகளின் மொத்த தொகை, நிலுவை வரி வருமானம் (2023), மாதாந்த வரி வருமானச் செயலாற்றுகை – 2023 மற்றும் ஒவ்வொரு வரி வருமான வகை (2018 – 2023) போன்றவை இச்சமர்ப்பணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைவாக,<br>உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கீழ் நிர்வகிக்கப்படும் 11 வரி வகைகள் உள்ளதாகவும்; | |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | மொத்த வரி வருமானத்தில் 50%ஐ அண்மித்த தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பங்களிப்பெனவும், கடந்த சில வருடங்களில்<br>வரிக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தியமையால் வரி வருமானம்<br>வீழ்ச்சியடைந்துள்ளமை.<br><br>දේශීය ආදායම් කොමසාරිස් ජනරාල් යටතේ පරිපාලනය වන බදු වර්ග 11 ක් ඇති<br>බ<br><br>සමස්ත රජයේ බදු ආදායමෙන් 50% කට ආසන්න ප්‍රමාණයක් සඳහා දායකත්වය දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව විසින් දරනු ලබන අතර පසුගිය අවුරුදු කිහිපය තුළ බදු ප්‍රතිපත්තියේ වෙනස් කිරීම් සිදු කිරීම මත බදු ආදායම අඩු වී ඇති<br><br>2023.10.31 දින<br>2023.10.31ஆம் திகதியளவில் PAY As You Earn (PAYE) வரியை செலுத்தியமையால் Individual and Partnership வரியளவு குறைந்துள்ளதுடன்<br>மதிப்பிடப்பட்ட மொத்த வரி வருமானத்தை விஞ்சி வரி சேகரிக்கப்படாமை;<br>வரி அறவிடும் எல்லை (Threshold) விரிவடைந்தமை மற்றும் வரி விகிதம் குறைவடைந்தமை காரணமாக சேர் பெறுமதி வரி (VAT) வருமானம் 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை வீழ்ச்சியடைந்தமை மற்றும் | |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | 2023ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த வரி வருமானத்தை திரட்டும் மதிப்பீட்டிற்கு அமைவாக ரூ.1667 பில்லியன் வருமான இலக்கில் 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் 78.78%ஐ பெற்றுக் கொண்டுள்ளமை அதனூடாக சுட்டிக்காட்டப்பட்டது. | |
| 02 | **<u>சேர் பெறுமதி வரி (VAT) வருமானம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறல்.</u>** | அதிகமான வர்த்தக நிலையங்களால் பாவனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் VAT வருமானம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய வகையில் கிடைக்கப் பெறுகிறதென உறுதிப்படுத்த முடியுமா? என்பது தொடர்பாக குழுக் கூட்டத்தின் போது கவனம் செலுத்தப்பட்டது.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>அவ்வர்த்தக நிறுவனங்களால் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படும் VAT தொகையை கணக்கிடுவதற்கான முறையியலொன்றை தயாரிப்பதற்காக அந்நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் PoS machine (Point of Sale) ஊடாக உரிய தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமான வகையில் அவ்வியந்திரங்களை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் கம்பெனிகளுடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு தலையிடுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ./க.அ இற்கு குழு பரிந்துரைத்தது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின், திறைசேறி பிரதிச் செயலாளரின் MF06/4/IRD/COPA/2023ஆம் இலக்க மற்றும் 2024.01.04ஆம் திகதிய கடிதம் மூலம் POS இயந்திரங்களை இலங்கைக்கு தருவிக்கின்ற சுமார் 20 நிறுவனங்கள் இருக்கின்றன எனவும், அவை வழங்கும் சேவைகள் சமமானவை அல்ல எனவும், அந்நிறுவனங்களுடன் தனியாக கலந்துரையாடி அவர்களுடைய வாடிக்கையாளர்கள் VAT இற்காக பதிவு செய்தவர்களா? மற்றும் VAT வரி எல்லைக்குள் இருக்கின்றார்களா? என ஆராய்வதற்கும், வேறு நாடுகளில் POS இயந்திரத்தை பயன்படுத்தும் விதம் தொடர்பாக ஆராய்வதற்கும் குறிப்பிட்ட காலம் செல்லும் என்பதால் அதற்காக 03 மாதங்கள் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>நிலுவை வரி</u>** | 2023ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆந் திகதி நிலுவை வரி மற்றும் தண்டப் பணத்தின் அளவு ரூ.943,003,334,758/- எனவும் 2022.12.31 திகதிக்கு Legacy கணினி முறைமைக்கு ஏற்ப சேர் பெறுமதி வரி மற்றும் தண்டப்பண நிலுவை பெறுமதி ரூ. 33,265,432,575/-இல் ரூ. 22,184,676,544/-ஆன நிலுவை வரி மற்றும் தண்டப் பண அறவீடு அரசாங்கத்திற்கு ஐயத்திற்குரியதாக உள்ளதாக குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| 04 | **<u>மறுக்கப்பட்ட காசோலைகள்</u>** | காசோலைகள் மூலம் வரி செலுத்தும் போது அவை மறுக்கப்படுகின்ற காரணத்தால் வரி செலுத்துவதற்கான மாற்றுத் திட்டமாக வங்கிக் கட்டளையை பயன்படுத்துமாறு முன்னைய அரசாங்கக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளதுடன் 2023ஆம் ஆண்டு யூன் மாதம் 30 திகதியளவில் ரூ. 210 மில்லியன் பெறுமதியுடைய அறவிடப்பட வேண்டிய மறுக்கப்பட்ட காசோலைகள் இருக்கின்றமை தெரிய வந்தது. அவ்வாறே மறுக்கப்பட்ட காசோலைகளை சமர்ப்பித்த நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக குழு வினவியது.<br><br>மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக ஆராய்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பி.க.அ./க.அ. தெரிவித்தார். காசோலைகள் மூலம் வரி செலுத்தும் போது மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஊடாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு பணம் வரவு வைக்கப்படுவதாகவும், ஆரம்பத்தில் மக்கள் வங்கி மாத்திரமே அவ்வாறு கிடைக்கப் பெற்ற காசோலைகளை மாற்றியதன் பின்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கிற்கு வரவு வைத்தாகவும், உரிய திருத்தங்களின் பின்னர் 2023ஆம் ஆண்டு ஓகத்து மாதம் தொடக்கம் இலங்கை வங்கியும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்குக்கு காசோலைகள் மாற்றப்பட்டதன் பின்னரே பணத்தை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | வரவு வைப்பதாக பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>அவ்வாறே, 03இற்கும் அதிகமான மாற்றப்படாத காசோலைகளை சமர்ப்பித்தவர்களின் பெயர்களை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கி திணைக்களத்தின் இணையதளத்தில் பிரசுரிப்பதன் மூலம் அவ்வாறான நபர்கள் தொடர்பாக திணைக்களத்தின் அலுவலர்கள் அறிந்து கொள்வதால் தொடர்ந்து அவர்களுக்கு காசோலைகள் மூலம் வரி செலுத்த வாய்ப்பளிக்காமல் இருப்பதற்கான இயலுமை கிடைக்கப் பெறுவதாக பிக.அ./க.அ. தெரிவித்தார்.<br><br><u>**விதப்புரைகள்**</u><br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு காசோலைகள் மூலம் வரி செலுத்தும் போது காசோலைகள் மறுக்கப்படுவதால் ஏற்படும் சிக்கல்களுக்கான தீர்வாக வங்கிப் பிணைகளை பயன்படுத்துவதற்குள்ள இயலுமை தொடர்பாக மத்திய வங்கியுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் திறைசேறி பிரதிச் செயலாளரின் MF06/4/IRD/COPA/2023 இலக்க மற்றும் 2024.01.08 திகதிய கடிதம் மூலம், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு காசோலைகள் மூலம் வரி செலுத்தக் கூடாதென** |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **தீர்மானிக்கப்படின் அதைச் சட்டத்திற்கு அறிமுகஞ் செய்யும் ஒழுங்குவிதி மூலம் அல்லது சட்டத் திருத்தம் மூலம் மேற்கொள்ள வேண்டுமென சட்ட அலுவல்கள் திணைக்களத்தால் அவதானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.** |
| | **வருமான நிர்வாக தகவல் முகாமைத்துவக் முறைமை (RAMIS) தரவு முறைமை** | இன்றளவில் RAMIS 2.0 (version) நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் 2018 -2019 மதிப்பீட்டாண்டுக்கான வருமான வரி அறிக்கை செயன்முறையை இதனூடாக மேற்கொள்ள முடியுமெனவும் எதிர்வரும் 03 ஆண்டுகளுக்காக முறைமையில் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதை 2023ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br>RAMIS முறைமையில் 06 நிறுவனங்கள் இணைந்துள்ளதாகவும் பதிவாளர் திணைக்களம் இம்முறைமையுடன் இணையும் போது ஏற்பட்ட சில தொழில்நுட்ப தடங்கல்கள் காரணமாக அத்திணைக்களத்திற்கு இணையமுடியாமல் இருப்பதாகவும் குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்தது.<br>கம்பெனி பதிவாளர் திணைக்களத்தின் e-ROC முறைமையில் கம்பெனிகளை பதிவு செய்யும் போது, அவற்றின் முகவரிகளை உட்சேர்க்கும் போது அதிலுள்ள எழுத்துக்களின் (Characters) எண்ணிக்கை தொடர்பான சிக்கல்கள் காரணமாக RAMIS முறைமையுடன் இணைவதற்கு முடியாமல் இருப்பதாக |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | இதன் போது தெரிவிக்கப்பட்டது. RAMIS முறைமையில் எழுத்துக்களை உட்சேர்ப்பதற்கு 40 எழுத்துக்கள் என்ற மட்டுப்பாடு இருப்பதாக இதன் போது தெரிய வந்தது.<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS 2.0 எழுத்துக்கள் எண்ணிக்கையை 60 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக இதன் போது தெரிய வந்தது.<br><br>கம்பெனி பதிவாளர் திணைக்களத்தில் உள்ள இச்சிக்கல்கள் காரணமாக RAMIS முறைமை தொடர்பாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையை பெற்றுக் கொடுப்பதும் தாமதமாகியுள்ளதாக அக்குழுவின் தவிசாளர் தெரிவித்தார்.<br><br>RAMIS முறைமை மற்றும் கம்பெனி பதிவாளர் திணைக்களத்தை இணைக்கும் போது மாற்றங்களைச் செய்ய வேண்டிய முறைமை யாதென்பது தொடர்பாக குழு வினவியபோது e-ROC முறைமையுடன் ஏற்புடைய மாற்றங்களைச் செய்வது மிகவும் இலகுவானதும், பொருத்தமானதும் என உரிய தரப்பு சுட்டிக்காட்டியது.<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முறைமையை மாற்றினால் அது பல நிறுவனங்களை பாதிக்கக் கூடும் என்பதால் கம்பெனி பதிவாளர் திணைக்களம் அதற்கு பொருத்தமான திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டுமென இதன் போது முன்மொழியப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | கம்பெனி பதிவாளர் திணைக்களத்தால் முறைமையில் முகவரியை உட்செலுத்துவதற்காக மேலதிக துறையை / இடைவெளியை (Additional field) உள்ளடக்குமாறும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் அதன் எழுத்துக்களின் (Characters) எண்ணிக்கை 60ஆக அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் குழு ஆலோசனை வழங்கியது.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையுடன் (RAMIS) இணைந்து கொள்வதற்காக கம்பெனி பதிவாளர் திணைக்களம் தனது தகவல் முறைமையில் தேவையான திருத்தங்களைச் செய்து உரிய ஒருங்கிணைப்பை முழுமைப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் எடுக்கும் காலம் தொடர்பான திகதிகள் மற்றும் அதற்கான செலவுகள் அடங்கிய அறிக்கையொன்றை 2023.12.31 திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு கம்பெனி பதிவாளருக்கு பரிந்துரைத்தது.<br><br>கம்பெனி பதிவாளர் திணைக்களத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமையுடன் இணைப்பதற்கு தேவையான தலையீட்டை மேற்கொள்ளுமாறும், அது தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை 2023.12.01 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கொள்கைகள் அமைச்சின் பி.க.அ./ க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது.<br><br>RAMIS தரவு முறைமை தொடர்பாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு 01 இனுடைய இத்தரவு முறைமையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விதப்புரைகள் அடங்கிய அறிக்கையை 2023.12.01ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு அக்குழுவின் தவிசாளருக்கு குழு பணிப்புரை வழங்கியது.<br><br>அவ்வாறே RAMIS தரவு முறைமையின் பராமரிப்பு ஒப்பந்தம் 2024.01.31 ஆம் திகதியன்று நிறைவு பெறுவதுடன், அம்முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கான வளங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமில்லை என இதன் போது குறிப்பிடப்பட்டது.<br><br>எவ்வாறெனினும், இப்பராமரிப்பு ஒப்பந்தத்தை மேலும் நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவ்வாறு நீடிக்க முடியாவிடின் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடி வருவதாகவும் பி.க.அ./க.அ. தெரிவித்தார்.<br><br>**i. கம்பெனி பதிவாளர் நாயகத்தின் ARGC/Miscellaneous/2023ஆம் இலக்க மற்றும் 2024.01.08ஆம் திகதிய கடிதம் மூலம் Address lineஇல் எழுத்துக்களின்** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | எண்ணிக்கையை 90 வரை அதிகரிப்பதற்கு IRD இணங்காமையால், ROC Address line எழுத்துக்களின் எண்ணிக்கை 60 வரை குறைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ROC Address line மூன்றாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>ii. திறைசேறி பிரதிச் செயலாளரின் MF06/4/IRD/COPA/2023ஆம் இலக்க மற்றும் 2024.01.04ஆம் திகதிய கடிதம் மூலம் கம்பெனி பதிவாளர் திணைக்களத்தின் eROC முறைமை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமை தொழில்நுட்ப ரீதியில் இணைக்கப்பட்டுள்ளதுடன் கம்பெனியொன்றை பதிவு செய்யும் போது வரி செலுத்துபவரை இனங்காணும் இலக்கமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை விண்ணப்பதாரிக்கு உள்ளது.<br><br>எனினும் உரிய முறைமைகளின் முகவரிக்காக வழங்கப்பட்டுள்ள துறைகளில் நிலவும் மாற்றங்களின் அடிப்படையில் eROC ஊடாக அனுப்பப்பட்ட தரவுகள் செல்லுபடியாகாமை மற்றும் அவை உரிய அளபுருக்களின் கீழ் இல்லாததன் காரணமாக சில கம்பெனிகளுக்கு TIN இலக்கத்தை வழங்க முடியாத நிலை நிலவுகின்றது.<br><br>இது தொடர்பாக 2023.08.18 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் eROC |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | முறைமையின் முகவரிக்காக மேலதிக வரியொன்றை ஒதுக்குவதற்கும் RAMIS முறைமையின் எழுத்துக்களை 40 இலிருந்து 60 வரை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் பயனாளிகள் தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டு இதனை முறைமைக்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அவ்வாறே இம்முறைமையின் கீழ் TIN இலக்கமொன்றை மாத்திரம் வழங்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இதனை சகல கம்பெனி பதிவுக் கோரிக்கைகளுக்கும் கட்டாயமாக்க வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது.<br>iii. உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 06 | <u>**சீட்டாட்டத் (கசினோ) தொழில்களுக்கான வரி அறவிடல்**</u> | 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கமைய ஒரே தடவையில் மாத்திரம் செலுத்த வேண்டிய 1000 மில்லியன் ரூபா வரியை சீட்டாட்டத் தொழில்களை நடத்தும் நிறுவனங்கள் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அதன்படி இலங்கையில் தற்போதுள்ள 04 சீட்டாட்டத் தொழில் நிறுவனங்கள் இவ்வரியைச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் குழுவில் தெரியவந்தது.<br>மேற்படி நிறுவனங்கள் குறிப்பிட்ட வரியைச் செலுத்தாத காரணத்தால் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் அவ்வழக்குத் தீர்ப்பின்படி மேற்படி நிறுவனங்கள் 7 மாதங்களுக்குள் குறித்த வரியைச் செலுத்த வேண்டுமெனவும் இருப்பினும் 2 நிறுவனங்கள் மாத்திரமே அத்தீர்ப்பின்படி அவ்வரியைச் செலுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல் எஞ்சிய இரண்டு நிறுவனங்களும் மேற்படி தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்துள்ளதாகவும் இதற்கிடையில் மேற்படி நிறுவனங்கள் மாதாந்தம் 15 மில்லியன் ரூபாய் வீதம் வரி செலுத்திக் கொண்டிருப்பதாகவும் மேலும் தெரியவந்தது.<br><br>அதற்கு மேலாக மேற்படி நிறுவனங்கள் வருடாந்த வரித் தொகையைச் (Annual Levy) செலுத்தத் தவறியதால் அவற்றுக்கெதிராகவும் வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பி. க. அ / க. அ. தெரிவித்தார் . |
| 07 | **<u>புதிதாக வரி செலுத்துவோரைப் பதிவுசெய்தல்</u>** | வரி வருவாயை அதிகரிப்பதற்குத் தேவையான வரி வலையை அதிகரிக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள் குறித்தும் இது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்ட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் குழு வினவியது.<br><br>2023 ஜனவரி மாதம் தொடக்கம் அக்டோபர் 31 வரை 198,253 புதிய வருமான வரிக் கோப்புகள் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | திறக்கப்பட்டுள்ளதாகவும் 2024 ஜனவரி மாதம் தொடக்கம் 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு நபரையும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பி. க. அ / க. அ. தெரிவித்தார். இது தொடர்பான முக்கிய தகவல்களை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனக் குழு சுட்டிக் காட்டியது.<br><br>இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் மூலமான விழிப்புணர்வும் தொலைபேசி குறுந்தகவல் (SMS) மூலமான விழிப்புணர்வும் செய்யப்படுவதாகவும் பி. க. அ / க. அ. தெரிவித்தார். வரி அறவிடுவதற்காக தனிநபர்களுக்கு TIN எண்கள் (Taxpayer Identification Number) வழங்கி தரவுப் பகுப்பாய்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வரிப் பொறுப்பிருந்தால் தானாக முன்வந்து பதிவு செய்ய அனுமதிப்பதும், அவ்வாறு செய்யாவிட்டால் பெயர்களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்க வேண்டுமெனவும் (Force Registration) பி. க. அ / க. அ. தெரிவித்தார். |

**இலங்கை சுங்கம்**

**(2019, 2020 மற்றும் 2021 ஆம் நிதியாண்டுகளின் கணக்காய்வாளர் லைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மதிப்பீடு)**

**விசாரிக்கப்பட்ட திகதி –2023 நவம்பர் 17**

**அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**

- ❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
- ❖ நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு
- ❖ இலங்கை சுங்கம்

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| ❖ நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | | |
| 01 | **<u>இலங்கைக்குள் இடம்பெறும் முறைசாரா வர்த்தகம் (informal trading) ஆரம்பத்தில் இறக்குமதியில் 10% ஆகவிருப்பினும் தற்போது அது 40% ஆக அதிகரித்ததன் காரணமாக அதிகளவு சுங்க வரி வருவாய் இழக்கப்படுகின்றமை .</u>** | கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2525 என்ற இலக்கத்தின் கீழ் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு தற்காலிக இறக்குமதியாளர்களாகப் பதிவு செய்யும் நபர்களுக்குக் கிடைக்கும் வரிச் சலுகையைப் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையே அதற்கான காரணமென பி. க. அ / க. அ. தெரிவித்தார். இவ்வரியை அறவிடுவதற்கு இலங்கை சுங்கத் திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் குழு முன்மொழிந்தது. முறைசாரா வர்த்தகத்திற்காக (informal trading) வரி அறவிடுவது குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக பி. க. அ / க. அ. தெரிவித்தார். இச் சிக்கலைத் தீர்க்க அனைத்து முறைசாரா இறக்குமதியாளர்களிடமிருந்தும் முதலில் வரி அறவிடப்பட வேண்டுமென்றும், பின்னர் ஆண்டிறுதியில் உண்மையான முறைசாரா இறக்குமதியாளர்களுக்கு மட்டுமே வரி மீளளிப்பு முறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென்றும் குழு முன்மொழிந்தது. இம்முன்மொழிவு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பி. க. அ / க. அ. தெரிவித்தார்.<br><br>இத்தகைய சுங்க வரிகளை முறையாக அறவிடுவது தொடர்பான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல் <br> - குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தேசியக் கொள்கைகள் அமைச்சினால் இலங்கை சுங்கம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) தெரிவித்தார். <br><br> **<u>விதப்புரைகள்</u>** <br><br> மேற்படி முன்மொழிவுகள் தொடர்பாக 2023.12.18 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் இலங்கை சுங்கத்தின் கணக்கீட்டு அலுவலர் ஆகியோருக்கு குழு விதப்புரை செய்தது. <br><br> **சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் SLC/ESD/01/COPA/2023 ஆம் இலக்க மற்றும் 19.12.2023 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலமாக அனுப்பிய அறிக்கைக்கமைய, இம் முறையற்ற வர்த்தகத்தால் இழக்கும் வரி வருவாயைப் பாதுகாப்பதற்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. (இணைப்பு_)** |
| 02 | **<u>முதலீட்டுச் சபையின் வரிச்சலுகைகளைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்படும் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மீண்டும் ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கைக்கு வர்த்தக அனுகூலம் கிடைக்கின்றதா என்பதை மீளாய்வு செய்தல்</u>** | இலங்கை சுங்கத்தின் "ஆசிகுடா" கட்டமைப்பூடாக முதலீட்டுச் சபையின் தகவல்கள் பதிவு செய்யப்படுவதாக க.அ. தெரிவித்தார். <br><br> **<u>விதப்புரைகள்</u>** <br><br> இது தொடர்பாக ஆராய்ந்து இலங்கை சுங்கத்தில் முதலீட்டுச் சபை தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் துறை மற்றும் முதலீட்டுச் சபையிடமிருந்து 18.12.2023 இற்கு முன் குழுவிற்கு அறிக்கைகளை வழங்க |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | நடவடிக்கையெடுக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள், நிதி அமைச்சின் பி.க. அ, முதலீட்டு அமைச்சின் பி.க. அ. இலங்கை சுங்கத்தின் க. அ ஆகியோருக்கு குழு விதப்புரை செய்தது.<br>**சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 19.12.2023 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலமாக அனுப்பிய அறிக்கைக்கமைய, ஏற்றுமதியிலிருந்து பெறப்படும் பணவனுப்பல்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குறுத்தப்படும் கட்டமைப்பூடாக கண்காணித்து ஏற்றுமதி மூலம் மீண்டும் இலங்கைக்கு வர்த்தக அனுகூலங்கள் கிடைக்கின்றனவா என்பதைத் தீர்மானிக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>இலங்கை சுங்கத்தின் மேம்படுத்தப்பட்ட உள்ளக மென்பொருள் (ASYCUDA) மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ரமிஸ் (RAMIS) கட்டமைப்பின் ஒருங்கிணைப்பு.</u>** | "ஆசிகுடா" (ASYCUDA) கட்டமைப்பினால் 14 நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்படுவதாகவும் அதன் மூலம் முதலீட்டுச் சபையின் தகவல்கள் பதிவு செய்யப்படுவதாகவும் இவ்வருட இறுதியில் மேற்படி கட்டமைப்பு மேலும் மேம்படுத்தப்படுமெனவும் இலங்கை சுங்கம் தொடர்பான தரவுகளும் ரமிஸ் (RAMIS) கட்டமைப்புக்கு அனுப்பப்படுமெனவும் க. அ. தெரிவித்தார். மேலும், தானியங்கி இடர் முகாமைத்துவக் கட்டமைப்பொன்று மேம்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.<br>**<u>விதப்புரைகள்</u>** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | இலங்கை சுங்கத்துறையின் உள்ளக மேம்படுத்தப்பட்ட ASYCUDA மற்றும் வெளி நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS கட்டமைப்புகள் மூலமாக வழங்கப்படும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் தீர்வுகள் பற்றிய விரிவான மற்றும் திகதிகளுடனான அறிக்கையொன்றை 18.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க. அ. மற்றும் இலங்கை சுங்கத்தின் க. அ ஆகியோரைப் பணித்தது.<br>**சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 19.12.2023 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலமாக அனுப்பிய அறிக்கைக்கமைய, இதுவரை 18 வெளி அரச நிறுவனங்கள் இக்கட்டமைப்பில் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.** |
| 04. | **<u>2021 ஏப்ரல் 06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.</u>**<br>**<u>கட்டளை இலக்கம் 01</u>**<br>கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தித் திட்டத்திற்காக ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியின் பேரில் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியினால் மேற்படி | 2021 ஜூலை 24 ஆம் திகதி சுங்கப் பணிப்பாளர் நாயகம் நியமித்த குழுவின் விதப்புரைகள் சுமார் 2 ஆண்டுகளுக்குப் பின்னர் 2023 ஜூன் 1 ஆம் திகதி வழங்கப்பட்டாலும் சம்பவத்துடன் தொடர்புடைய எந்தவொரு அலுவலருக்கும் தண்டனை விதப்புரை செய்யப்படவில்லை.<br>**<u>குழுவின் விதப்புரைகள்</u>**<br>I. நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்ட தவறான |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | கருத்திட்டத்திற்குத் தேவையான DI குழாய்கள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்யும் பணி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அச்சபையினால் அத்திட்டத்திற்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக M/S Access International (Pvt) Ltd நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி Access நிறுவனத்தினால் 5,139,621/- அ.டொலர்கள் பெறுமதியான களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பொருட்களை, களஞ்சியத்திலிருந்து விடுவிப்பதற்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விலைப்பட்டியலைப் பயன்படுத்தி 6,350,364/- அ.டொலர்கள் பெறுமதியெனப் போலியான தகவல்களுடன் இறக்குமதி செய்ததாகக் குறிப்பிட்டு சமர்ப்பித்ததன் மூலம் 1,210,743/- அ.டொலர்களை M/S Access நிறுவனத்திற்கு மேலதிகமாக வழங்கச் சந்தர்ப்பம் வழங்கியமை.<br><br>மேலும், முதற் தடவையில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தும்போது செலுத்த வேண்டிய வரித் தொகையாக ரூ.263,301,203/- | நடைமுறைகளுக்காக அலுவலர் குழுவொன்றை மாத்திரம் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவது சமமானவர்களை சமமற்ற முறையில் நடத்துவதாகும்.<br><br>II. சம்பவத்துடன் தொடர்புடைய அலுவலர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டதால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தேவையில்லையென்பது.<br><br>III. பொருட்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பது / களஞ்சியத்திலிருந்து அகற்றுதல் தொடர்பான அறிவுறுத்தல்களுடனான திணைக்களக் கட்டளையொன்றை வழங்கல்.<br><br>IV. சுங்க அதிகாரிகளுக்கு களஞ்சியப்படுத்தல் பற்றிய விசேட பயிற்சியொன்றை அளித்தல்.<br><br>V. இக்கருத்திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏதேனும் நட்டம் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் அதன் நிரல் அமைச்சுக்கு அறிவித்தல்.<br><br>பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் போது பொருட்களில் குறிப்பிடப்பட்ட உண்மையான பெறுமதியைவிடவும் அதிகமான பெறுமதியை களஞ்சியத்திலிருந்து விடுவிக்கும்போது அறிவித்ததன் மூலம் இலங்கை சுங்கத்திற்கு அதிகளவு வரி செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாக M/S Access International (Pvt) Ltd நிறுவனத்தால் நீர் வழங்கல் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | எனக் கணக்கிடப்பட்டிருந்தாலும் , இரண்டாம் தடவையில் வரித் தொகையாக ரூ.325,800,859/- எனக் காட்டப்பட்டதால், இலங்கை அரசாங்கத்தால் ரூ.62,499,656/- அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளமை.<br><br>அரசாங்கத்தால் பெறப்பட்ட கடன் மூலம் மேற்கொள்ளப்படும் இவ்வாறான கருத்திட்டங்களில், அரசாங்கம் பெற்ற கடன் தொகையையும் வட்டித் தொகையையும் செலுத்த நேரிடுவதால் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளமாறு பி.க.அ. இற்கு 06 ஏப்ரல் 2021 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் குழு விதப்புரை செய்திருந்தது. | மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து அதிகளவு தொகை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் இலங்கை சுங்கத்தின் க. அ தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>இது தொடர்பாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் ESD/04/2021/06 மற்றும் 2021.07.24, 2022.04.27 மற்றும் 2022.07.08 ஆம் திகதிய கடிதங்கள் மூலமாக நியமிக்கப்பட்ட பூர்வாங்க புலனாய்வுக் குழுவின் விதப்புரைகள் அடங்கிய 2023.06.01 ஆம் திகதிய அறிக்கையைப் பரிசீலனைக்குட்படுத்தி அதன் மூலம் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள விதப்புரைகளில் இலக்கம் 4 தொடர்பாக (Access International (Pvt) Ltd உடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படியும் கருத்திட்டத்திற்கான நிதி வசதிகளை வழங்கும் JICA (Japan International Cooperation Agency) நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படியும் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதையும் அதன்மூலம் அரசாங்கத்திற்கு ஏதேனும் இழப்புகள் ஏற்பட்டுள்ளனவா என்பதையும் கண்டறிவதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு) 2023.12.18 இற்கு முன்னர் குழுவிடம் அறிக்கையொன்றை வழங்குமாறு நீர் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் பி.க.அ இற்கு குழு விதப்புரை செய்தது.<br>**இது தொடர்பில் ஆராய்வதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் 06 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு அதற்கமையத் தயாரிக்கப்பட்ட குழுவின் அறிக்கையானது நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருடைய இலக்கம் FIN/01/01 மற்றும் 2021.12.12 ஆம் திகதிய முகப்புக் கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 05 | **<u>கட்டளை இலக்கம் 02</u>**<br>நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை வழங்குவதற்காக, அரச நிறுவனமான Lanka Coal Company (Pvt) Ltd நிறுவனம் 2016 இல் 66 சந்தர்ப்பங்களில் நிலக்கரியை இறக்குமதி செய்ததுடன் குறிப்பிட்ட நிலக்கரியின் வி.கா.க.(CIF) பெறுமதி பற்றிய சரியான தகவல்களை வெளிப்படுத்தாததன் அடிப்படையில் குறைவாக அறவிடப்பட்ட சுமார் ரூ.187 மில்லியன் (VAT) வரியை மீண்டும் அறவிடுவதற்காக நடத்தப்பட்ட சுங்கப் புலனாய்வுகளின் படி குறைவாகக் கணக்கிடப்பட்ட VAT வரியை மேலதிக வரியாக அறவிடாது ரூ.205 மில்லியனை | பல சந்தர்ப்பங்களில் பிந்திய சுங்கப் புலனாய்வுகளால் அரசு இழந்த வரியைத் திரும்பப் பெறுவதற்குப் பதிலாக அபராதம் விதிக்கப்பட்டு அதில் பெருமளவு தொகை சன்மான நிதியத்தில் வைப்புச் செய்ய நேரிடுவதால் அரசுக்கு பெருமளவு நஷ்டம் ஏற்படுவதாக இங்கு தெரியவந்தது. அதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஆரம்ப கட்டத்திலேயே சரியான முறையில் வரித் தொகையை அறவிடுவது தொடர்பாக பொறுப்பான அலுவலர்களிடமிருந்தும் பணத்தை அறவிட வேண்டுமென குழு முன்மொழிந்தது.<br>எவ்வாறிருப்பினும், நடைமுறையில் சுங்கப் பொருட்களை விடுவிக்கும்போது முகத்தோற்ற அளவில் மோசடி / முறைகேடுகள் எதுவும் கண்டறியப்படுவதில்லை என்பதால், அனைத்துப் பொருட்களும் பிந்தைய கணக்காய்வுக்குட்பட்டவை என்ற முன் நிபந்தனையொன்று குறிப்பிடப்பட்டு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | அபராதமாக விதித்து அதில் 70% அலுவலர்களின் சன்மானங்ளுக்காகவும் நலன்புரிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டதால் அரசாங்கத்திற்கு ரூ.125.5 மில்லியன் வரி வருவாய் இழப்பு ஏற்பட்டமை.<br><br>இதற்கு முன்பிருந்த கணக்குக் குழுவின் விதப்புரைகளின் அடிப்படையில் மேற்படி பிரச்சினையைப் பற்றி விசாரிப்பதற்காக நிதியமைச்சால் நியமிக்கப்பட்ட குழு அதன் விசாரணை நடவடிக்கைகளைத் துரிதமாக முடித்து உரிய அறிக்கையை அடுத்து வரும் 2 மாதங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு 2021.04.06 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் பி.க.அ / க.அ இற்கு குழு விதப்புரை செய்திருந்தது. | பொருட்கள் விடுவிக்கப்படுவதாகவும் பின்னர் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் தவறுகளை வெளிக்கொணர்வதற்காக பல சந்தர்ப்பங்களில் பெருமளவு காலம் செல்வதாகவும் இதன்போது க. அ. தெரிவித்தார்.<br><br>மேலும், தற்போது அபராதத் தொகையில் 30% அரசுக்கும், 50% அலுவலர்களின் சன்மான நிதியத்திற்கும் , 20% அலுவலர்களின் நலன்புரிக்காகவும் ஒதுக்கப்படுவதாக பி. க. அ. தெரிவித்தார். |
| 06 | **<u>கட்டளை இலக்கம் 03</u>**<br><br>இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட ரூ.11,498 மில்லியன் பெறுமதியான 36 பாரந்தூக்கிகள் தொடர்பான சுங்க வரிகளைக் குறிப்பிட்டுச் சமர்ப்பிக்காததன் அடிப்படையில் சுங்க விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டு இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு ரூ.1,580 மில்லியன் அபராதமாக | 2011 இல் கொண்டுவரப்பட்ட இப்பாரந்தூக்கிகள் தொடர்பாக துறைமுக அதிகாரசபையால் 2016 ஆம் ஆண்டு வரை இலங்கை சுங்கத்திற்குத் தெரிவிக்கப்படவில்லையென க.அ. தெரிவித்தார். எவ்வாறிருப்பினும் இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையிலும் ஓர் உறுப்பினர் என்பதனால் இது ஒரு நிர்வாகம் சார்ந்த சிக்கலென குழு வலியுறுத்தியது. மேலும், துறைமுக அதிகாரசபை போன்ற அரச |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | விதிக்கப்பட்டு அதில் 50% அதாவது ரூ. 790 மில்லியனை சன்மானமாகப் பெற முயற்சி செய்யப்பட்டுள்ளமை.<br>மேற்கூறப்பட்ட விடயந் தொடர்பாக சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தைக் கோருவதற்கு 2021.04.06 ஆம் திகதி முன்னைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. முன்னைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டங்களில் வழங்கப்பட்ட ஏனைய விதப்புரைகளையும் அவற்றின் தற்போதைய நிலைமைகளையும் குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பி.க.அ. இற்கு குழு விதப்புரை செய்தது.<br>2021.07.24 ஆம் திகதி சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2 வருடங்களுக்கு மேலாகியும் இது தொடர்பிலான இறுதி அறிக்கை இதுவரையில் வெளியிடப்படவில்லை. | நிறுவனங்களிடமிருந்து இவ்விதம் அபராதம் அறவிடப்படும் முறையானது நியாயமற்றதென்பதனால் எதிர்காலத்தில் அரச நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கின்றபோது மேற்படி அபராதத்தை திறைசேரிக்குச் சேர்க்க சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டுமென குழு வலியுறுத்தியது. |
| 07 | **<u>சுங்கக் கட்டளைச் சட்டத் திருத்தம்</u>** | தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகங்களைத் திருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்தார். இத்திருத்தங்கள் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>விதப்புரைகள்<br><br>இத்திருத்தங்கள் சட்ட வரைஞர் திணைக்களம், சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களம், அமைச்சரவை, பாராளுமன்றம் வரையாக தினங்கள் உள்ளடக்கிய அறிக்கையொன்றை 2023.11.27 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. மற்றும் இலங்கை சுங்கத்தின் க.அ. ஆகியோரைப் பணித்தது.<br><br>**சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 19.12.2023 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 47 மற்றும் 57 உடன் 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அரசாங்க வருவாய்களைப் பாதுகாத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத் திருத்தம் பற்றிய தற்போதைய நிலைமையை உள்ளடக்கிய அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.** |
| 08 | 2021 ஆம் ஆண்டில், இலங்கை சுங்கத்தின் 2432 அலுவலர்களுக்கு சம்பளம், வேதனம், மேலதிக நேர, விடுமுறை ஊதியம் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு என்னும் அடிப்படையில் அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து 1,839,078,959 ரூபாவும் சுங்க மேலதிக நேர | விசேட காரணங்களின் பேரில் இலங்கை சுங்கத்தின் செயற்பாடுகளின் தன்மைக்கேற்ப கைரேகைப் பதிவு இயந்திரங்களிலிருந்து விலகியிருப்பதற்கு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி பெறுவதற்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பினும் நிறுவனப் பணிப்பாளர் நாயகம் இவ்வனுமதியை வழங்க |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | கப்பற் சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்திலிருந்து 1,086,992,639 ரூபாவும் மொத்தமாக 2,926,071,598 ரூபா செலுத்தப்பட்டுள்ளதுடன் மேற்படி செலவினம் தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்றாகிய பணிக்கு சமூகமளித்ததை உறுதிப்படுத்தும் கைரேகைப் பதிவுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமை. | மறுத்துவிட்டாரென க.அ. தெரிவித்தார். ஆகையால், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அனைத்து அலுவலர்களுக்கும் கைரேகை இயந்திரங்களைப் பயன்படுத்த இலங்கை சுங்கத்தின் நிறைவேற்று அதிகாரியால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். எவ்வாறாயினும், இதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>கைரேகைப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய குழு மேற்படி இயந்திரங்களைத் துரிதமாக நிறுவி பயன்படுத்தத் தொடங்க வேண்டுமெனவும் இதனை கடமைப் பணிகளுக்கமைவாக நடைமுறையில் செய்வது கடினமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அது தொடர்பான வருகை தரும் குறிப்புக்களை இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் விதப்புரை செய்தது.<br><br>**சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 2023.12.19 திகதியிட்ட கடிதத்தின் மூலம் ஜனவரி 1, 2024 முதல் இக்கைரேகை இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது.** |
| 09 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொள்கலன்கள் தொடர்பான சுங்கத் தவறுகளைக் கண்டறிவதற்காக 21,590,000 அ.டொலர்கள் பெறுமதியான 4 | இந்த ஸ்கேனர்களை நிறுவி செயற்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் ஒரு தனியார் நிறுவனத்திற்கு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | ஸ்கேனர்கள் (Scanners) அரசாங்கத்தால் முழுச் செலவையும் ஏற்று 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு இலங்கைச் சுங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இங்கு அந்நியச் செலாவணி நெருக்கடியைக் கருத்திற் கொள்ளாமல் 180 நாட்களில் 21,590,000 அ.டொலர்கள் செலுத்தி ஸ்கேனர்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்திருந்தது.<br><br>சுங்கத் தடைநீக்கற் செயல்முறைக்கான முழுமையான எக்ஸ்ரே ஸ்கேனரொன்று இவ்வியந்திரக் கொள்வனவூடாக எதிர்பார்க்கப்பட்டிருப்பினும் அது செயற்படாததனால் அறிவிக்கப்பட்ட பொருட்களில் மறைத்து வைக்கப்பட்ட பொருட்களை அடையாளம் காணல், போலியான பொருள் அறிவிப்புகளின் எண்ணிக்கையைக் குறைத்தல், தடைசெய்யப்பட்ட மற்றும் சட்டவிரோதமான பொருட்களின் இறக்குமதி ஆகியவற்றைக் குறைத்தல் போன்ற எதிர்பார்த்த திட்டங்களை அடைய இயலாமற் போனமை. | ஒப்படைக்கப்பட்டதாகவும் ஒப்பந்தத்தின்படி ஸ்கேன் செய்யப்பட்ட கொள்கலன்களுக்கு மேற்படி கொள்கலன்களை வைத்திருக்கும் நிறுவனத்தினால் ஒரு கொள்கலனுக்கு தலா 10 டொலர்கள் வீதம் செலுத்த வேண்டுமெனவும் க.அ.தெரிவித்தார். கடந்த ஆண்டுகளில் எதிர்பார்த்தளவு கொள்கலன்கள் வராத காரணத்தால் குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திற்கு கொடுப்பனவைச் செலுத்துவதில் சிரமம் இருந்ததால் மேற்படி இயந்திர ஒப்பந்த காலத்தின் 5 ஆண்டுகளுக்குப் பிறகு (மூல ஒப்பந்தம் 8 ஆண்டுகள்) 21 மில்லியன் அ.டொலர்கள் அரசாங்கத்திற்கு கொள்வனவிற்கும் ஒப்பந்தத்திற்கமைவாகவும் பிடித்துவைக்கப்பட்ட தொகையை பகுதி பகுதியாக மீளச்செலுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசேட குழு மூலமாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இங்கு செயற்படுத்துவதில் தொழிநுட்பக் பிரச்சினைகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>இவ் ஸ்கேனர் இயந்திரங்களின் தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக முன்மொழிந்து இவ் ஸ்கேனர் இயந்திரங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கும் முறை தொடர்பாக திகதிளுடனான அறிக்கையையொன்றை 2023.12.18 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழு நிதி, |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. மற்றும் இலங்கை சுங்கத்தின் க.அ. ஆகியோருக்கு விதப்புரை செய்தது.<br>**சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 2023.12.19 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் ஸ்கேனர்களைப் பயன்படுத்துவதில் அவதானிக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அப் பிரச்சினைகளை நிவர்த்திப்பது தொடர்பான முன்மொழிவுகள் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.** |
| 10 | விசாரணைகளுக்குப் பின்னர் சுங்கத்தின் பொறுப்பில் வைக்கப்பட்ட, அரசுடைமையாக்கப்பட்ட மற்றும் ஒழுங்குறுத்தப்பட்ட நிறுவனங்களால் சுங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் ஏனைய ஏராளமான கொள்கலன்கள் சுங்கத்தின் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன் 31 ஒக்டோபர் 2023 இல் 14 இடங்களில் 668 வாகனங்களும், 736 கொள்கலன்களும் காணப்பட்டன. அவற்றில் 419 வாகனங்கள் தனியார் நிறுவனத்திடம் இருந்து ஏலம் விடப்படும் வரை அல்லது அகற்றப்படும் வரை சுங்கத்தின் கண்காணிப்பில் வைத்திருப்பதற்காக வாடகைக்குப் | துறைமுக அதிகாரசபையின் இலங்கை சுங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட களஞ்சியசாலை அகற்றப்பட்டதன் காரணமாகவே இத்தளத்தை வாடகைக்குப் பெற நேரிட்டதாகவும் அச்சந்தர்ப்பத்தில் வாகன பரிமாற்றத்தின் போது இந்த 133 வாகனங்கள் தொடர்பான புலனாய்வுக் கோப்புகள் காணாமற் போனதாகவும் க. அ தெரிவித்தார். மேற்படி வாகனங்களுக்கான தற்காலிக கோப்புகளைத் திறந்து ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 66 வாகனங்கள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 90 வாகனங்கள் TIP கட்டளையின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், 150 வாகனங்கள் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | பெறப்பட்ட முனையத்தில் (SALT YARD) 419 வாகனங்களும், 92 கொள்கலன்களும் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் 261 வாகனங்களும் 86 கொள்கலன்களும் 5 வருடங்களுக்கும் அதிகமான காலமாக மேற்படி இடத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ளன. இதில் 133 வாகனங்களுடன் தொடர்புடைய புலனாய்வுக் கோப்புக்கள் தொலைந்துள்ளன.<br><br>2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையில் மாத்திரம், சுங்கம் குறிப்பிட்ட மேற்படி தனியார் நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தம் செய்துள்ளதுடன், அதன் பின்னர் 05 தடவைகள் காலத்தை 2023 ஜனவரி வரை நீடித்து அத்தளத்தைப் பயன்படுத்தியுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2023 வரை, குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட மொத்த வாடகைத் தொகை ரூ. 77,485,548 என்பதுடன் பெப்ரவரி 2023 முதல் மீண்டும் மாதாந்தம் ரூ. 4,650,000 வாடகைக்கு மேற்படி நிறுவனத்துடன் சுங்கம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. | இவற்றில், இயக்கத்தில் ஈடுபடுத்த முடியாத வாகனங்களை தொழிநுட்பப் பாடம் கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கு கல்விப் பணிகளுக்காக வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்க்குமாறு குழு முன்மொழிந்தது. |
| 11 | 2000 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட சிகரெட் தொகை தொடர்பான விசாரணையின் | <u>**விதப்புரைகள்**</u><br>இது தொடர்பான முழுமையான அறிக்கையையொன்றை 2023.12.17 |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | பின்னர் அவற்றை மீள் ஏற்றுமதி செய்யுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அதற்கு முரணாக ரூ. 5.9 மில்லியனுக்கு விற்பனை செய்ததால் சிகரெட்டுகளை கப்பல் ஏற்றிய வெளிநாட்டுத் தனியார் நிறுவனம் இலங்கை சுங்கத்திற்கெதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.<br><br>மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர் இலங்கை சுங்கம் குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்திருந்தும் அவற்றின் தீர்ப்புகளில் குற்றவாளியாகவே காணப்பட்டுள்ளது. அதன்படி இத்தவறான முடிவினால் இலங்கை சுங்கம் செலுத்த வேண்டிய மொத்த நஷ்டம் ரூ. 69.4 மில்லியன் ஆகும்.<br><br>இவ் விசாரணை தொடர்பான கோப்பும் காணாமல் போனதுடன் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கும் மேற்படி தவறான முடிவிற்கு பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கும் எதிராக நி.ஒ. 102 முதல் 110 வரையான பிரிவுகளின் பிரகாரம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமை. | ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. மற்றும் இலங்கை சுங்கத்தின் க.அ. ஆகியோருக்கு விதப்புரை செய்தது.<br><br>**சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் SLC/ESD/01/COPA/2023 மற்றும் 2023.12.19 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான முழுமையான அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.** |
| 12 | சுங்கக் கிடங்கு (Manufacture in Bond - MIB) வசதியைப் பெற்ற எந்தவொரு | இந்த MIB வசதியை வழங்கும் செயன்முறை தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு நிதி, பொருளாதார |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல் <br> - குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | தொழில்துறையிலும் உள்ளூர் சந்தைக்கு குறிப்பிட்ட பொருட்களை வழங்குகையில் இறக்குமதியாகக் கருதி வரி கணக்கிடப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறன 2 நிறுவனங்கள் இலக்கம் 1448/1 மற்றும் 2006 ஜூன் 05, திகதியிட்ட கைத்தொழிற்றுறை அமைச்சரால் வழங்கப்பட்ட வரிச்சலுகையாகிய " உள்நாட்டில் 30 சதவீதத்துக்குக் குறையாத மதிப்பு கொண்ட உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி சேர்த்துப் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு 70 சதவீத வரிச் சலுகை" பெற்றுக்கொண்டு 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 7,191,949,084 ரூபாய் உற்பத்தி வரி செலுத்தத் தவறியமை. | உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிடம் இலங்கை சுங்கம் கோரியுள்ளதாக இதன்போது தெரியவந்தது. <br><br> கைத்தொழில் அமைச்சு வழங்கும் சான்றிதழின்படி வழங்கப்பட்ட கட்டளைக்கமைவாக இவ்வரிச்சலுகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டதாக க.அ. தெரிவித்தார். <br><br> இச்சம்பவம் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சும் இலங்கை சுங்கமும் கலந்துரையாடியதாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. தெரிவித்தார். <br><br> <u>**விதப்புரைகள்**</u> <br><br> இக்கலந்துரையாடலில் கைத்தொழில் அமைச்சும் பங்குபற்ற வேண்டுமெனக் குறிப்பிட்ட குழு MIB Facility யை வழங்கும் செயன்முறை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து 18.12.2023க்கு முன்னர் குழுவிடம் அறிக்கையையொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. மற்றும் இலங்கை சுங்கத்தின் க.அ. ஆகியோருக்கு விதப்புரை செய்தது. <br><br> **இது ஒரு கொள்கைசார் தீர்மானம் என்பதால் அது தொடர்பாக நிதியமைச்சின் தீர்மானம் கிடைக்கும்** |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **வரை இலங்கை சுங்கத்தால் இது குறித்து தீர்மானமெடுக்க முடியாதென்றும், அது தொடர்பில் சுங்க அவதானிப்புகள் உள்ளடங்கியதாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் இல. SLC/ESD/01/COPA/2023 மற்றும் 12.01.2024 ஆம் திகதிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் இல. MF06/04/COPA/Customs - Vol-iii மற்றும் 2024.01.18ம் திகதிய முகப்புக் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.**<br><br>முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சின் கருத்திட்டங்கள் தொடர்பாக தற்போது ள்ளதை விடவும் அதிக கண்காணிப்பு செய்யப்பட வேண்டும் என்று குழு பி.க.அ/ க.அ ஆகியோருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியது. |

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**(2022 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வறிக்கை மற்றும் “இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் செயற்பொறுப்பினை நிறைவேற்றுவதன் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல் ” தொடர்பான விசேட கணக்காய்வறிக்கை)**

**விசாரணை செய்யப்பட்ட திகதி- 2023 நவம்பர் 21**

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|

**அழைக்கப்பட்ட நிறுவனம் -**

❖ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2022 ஆம் நிதியாண்டின் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பில் வெளியிடப்பட்ட கணக்காய்வறிக்கை மற்றும் "இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பொறுப்பினை மதிப்பீடு செய்தல்" என்ற விசேட கணக்காய்வறிக்கையை ஆராய்வதற்காக இக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கமைய அரசாங்கக் கணக்குக் குழுவிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை அழைக்க முடியாதென ஆணைக்குழு கருதுவதால் இன்றைய குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதிருப்பதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அறிவித்து மேற்படி ஆணைக்குவின் தலைவரால் அரசாங்கக் கணக்குக் குழுவின் தவிசாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை தவிசாளர் குழுவிற்குச் சமர்ப்பித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இத் தீர்மானத்தை தான் அச்சந்தர்ப்பத்திலேயே கௌரவ சபாநாயகர், கௌரவ சபை முதல்வர் மற்றும் கௌரவ நீதி அமைச்சர் ஆகியோரிடம் அறிவித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொண்டதாக தவிசாளர் குழுவிடம் தெரிவித்தார். இது ஒரு தவறான முன்னுதாரணமாக இருக்கக் கூடும் என்பதால் உடனடியாகக் குழுவைக் கூட்டி இது தொடர்பாக கலந்துரையாடி குழுவின் முடிவைத் தனக்குத் தெரிவிக்குமாறு கௌரவ சபாநாயகரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நிதி அதிகாரத்திற்கு எவராலும் சவால் விட முடியாது எனவும், செலவுத் தலைப்புகளூடாக நிதி ஒதுக்கப்படும் அரச நிறுவனங்களின் கணக்குகளை ஆராய்வதனூடாக பாராளுமன்றத்தின் நிதி அதிகாரத்தை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு செயற்படுத்துவதாகவும் குழு குறிப்பிட்டது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கக் கணக்குக் குழுவின் முன் ஆஜராக மறுத்தமையானது இக்குழுவையும் பாராளுமன்றத்தையும் அவமதிக்கும் செயலாகுமெனக் குறிப்பிட்ட குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை அரசாங்க கணக்குக் குழுவின் முன் விரைவில் அழைக்க

<table>
<tr><td></td><td>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</td><td>- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்</td></tr>
<tr><td></td><td colspan="2">கட்டளையிடுமாறு கௌரவ சபாநாயகரிடம் எழுத்துமூலம் கோருவதற்கும் குழு தீர்மானித்தது.</td></tr>
<tr><td colspan="3">இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு<br>(2022 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வறிக்கை மற்றும் “இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் செயற்பொறுப்பினை நிறைவேற்றுவதன் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல் ” தொடர்பான விசேட கணக்காய்வறிக்கை)<br>விசாரணை செய்யப்பட்ட திகதி- 2023 நவம்பர் 27</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனம் -<br>❖ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு</td></tr>
<tr><td>01</td><td><u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 21.11.2023 அன்று நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள மறுத்தமை.</u></td><td>பொது நிறுவனங்களுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியானது சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட முறை மற்றும் அவை அடைந்த செயலாற்றுகை என்பவற்றைப்<br>புலனாய்வு செய்வதே பொதுக் கணக்குக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள முதன்மையான பணியாகுமென கௌரவ தவிசாளர் தெரிவித்தார். அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவின் முகாமைத்துவத் தகவல் அமைப்பின் (MIS) மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளதாகவும், வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதிலும் மிகவும் மோசமான நிலையிலிருப்பதாகவும் கௌரவ தவிசாளர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். அதனடிப்படையிலேயே இலங்கை மனித</td></tr>
</table>

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | உரிமைகள் ஆணைக்குழுவை 21.11.2023 ஆம் திகதி அரசாங்கக் கணக்குக் குழு முன்னிலையில் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக தவிசாளர் தெரிவித்தார். அன்றைய தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தில் பங்கேற்க மறுத்ததால் கௌரவ சபாநாயகரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்படி ஆணைக்குழுவை மீள அழைக்கும் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டதாக தவிசாளர் தெரிவித்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை அழைக்கும் அதிகாரம் அரசங்கக் கணக்குக் குழுவுக்கு உள்ளதா என்பது குறித்து ஆணைக்குழு உறுப்பினர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும் இணக்கப்பாடு எட்டப்படாததால் மேலும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் வரை 21.11.2023 ஆம் திகதி அரசாங்கக் கணக்குக் குழுவின் முன்னிலையில் ஆஜராகப் போவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் குழுவிடம் வருத்தம் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். |
| 02 | **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப் பொறுப்புக்கள்** | அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களின் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதான பணியாகுமென ஆணைக்குழுவின் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | செயலாளர் தெரிவித்துள்ளார். எந்தவொரு குடிமகனும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும் என்பதுடன், விசாரணை அலுவலரின் பூர்வாங்க விசாரணையின் பின்னர் உண்மையிலேயே அடிப்படை உரிமை மீறல் இடம்பெற்றுள்ளதாக முகத்தோற்றளவில் தோன்றும் பட்சத்தில் அத்தகைய முறைப்பாடுகள் தமது ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படுமென செயலாளர் தெரிவித்துள்ளார். பின்னர், முறைப்பாட்டுத் தரப்பினரையும் பிரதிவாதித் தரப்பினரையும் அழைத்து முறைப்பாட்டை விசாரித்து, இணக்கங்காண முடியாத சந்தர்ப்பங்களில் விசாரணை அலுவலர்கள் ஆணைக்குழுவுக்கு விதப்புரைகளை முன்வைப்பதாகவும், ஆணைக்குழுவினால் மேற்படி விதப்புரைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், மேற்படி விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், கௌரவ சனாதிபதியிடம் அறிக்கையிடல் /வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலர் (க.அ ) தெரிவித்தார்.<br><br>கைது செய்யப்பட்டவர் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | இருக்கின்றாரா என்பதை உறுதிப்படுத்தல், சித்திரவதையில் இருந்து தடுத்தல், உறவினர்களைச் சந்திக்க வாய்ப்பளித்தல், தாமதமின்றி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்தல் போன்ற செயல்களில் தொடர்ச்சியாக தலையிடுவதனால் மக்க ளிடையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீது நம்பிக்கையும் மரியாதையும் கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். |
| 03 | **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்/நபர்கள் செயற்படுத்தத் தவறியமை தொடர்பான அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தல்.** | 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 15 (8) இன் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை உரிய நிறுவனங்கள்/ நபர்கள் செயற்படுத்தத் தவறியமை தொடர்பான அறிக்கை சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும் அவ்வாறான அறிக்கை பல ஆண்டுகளாக சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படாதது குறித்து குழு கேள்வி எழுப்பியது.<br><br>ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுடன் தொடர்புடைய சம் பவங்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவுறாமை, முறைப்பாட்டாளர் தரப்பிலிருந்தும் பிரதிவாதிகள் தரப்பிலிருந்தும் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | தேவையான ஒத்துழைப்புக் கிடைக்காமை, இணக்கம் காணப்பட்ட சம்பவங்கள் மீண்டும் தலைதூக்குவது போன்ற பல்வேறு காரணங்களால் விசாரணைகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டமையினால் 2011 ஆம் ஆண்டுக்கு பின்னர் சனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்க முடியாதுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டுள்ளார். |
| 04 | **பதவி வெற்றிடங்களை நிரப்புதல்** | **அவதானிப்புகள்/ விதப்புரைகள்**<br><br>ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை அங்கீகரிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கடந்துள்ள போதிலும், மேல் மட்ட முகாமைத்துவப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பாக குழு கவனம் செலுத்தியது. இந்த விடயம் தொடர்பாக மீளவும் மீளாய்வு செய்து, பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யக்கூடிய வகையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் (Scheme of Recruitment-SoR) திருத்தம் செய்ய ப்பட வேண்டுமென குழு பரிந்துரைத்தது.<br><br>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊழியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதில் காணப்படும் தாமதம் தொடர்பாக கவனம் செலுத்திய குழுவானது, உள்ளமைப்பின் பிரகாரம் இருக்க வேண்டிய ஊழியர்களின் (Cadre) எண்ணிக்கையை பூர்த்தி செய்வது தொடர்பாக நாள் விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை 2023 டிசம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | முன்னதாக குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டுமென அதன் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைத்தது. |
| 05 | <u>**வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடாத்தமை.**</u> | 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை தொடர்பாகவும் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடத்தாமை தொடர்பாகவும் குழு கேள்வி எழுப்பி இருந்தது.<br><br>2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான வருடாந்த அறிக்கைகள் 2022.03.30 ஆம் திகதியன்றும் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை 2023.01.31 ஆம் திகதியன்றும் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த க. அ, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உள்ளக கணக்காய்வாளரொருவர் இல்லாத காரணத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடாத்த முடியாது போனதாகவும் குறிப்பிட்டார்.<br><br><u>**விதப்புரைகள்**</u><br><br>உள்ளக கணக்காய்வாளரொருவர் இல்லாமை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமர்வுகளை நடாத்துவதற்கு இடையூறாக அமையாது என்பதை சுட்டிக்காட்டிய குழு கணக்காளரை இணைத்துக்கொண்டு உடனடியாக உரிய முறையில் முறையாக |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமர்வுகளை நடாத்துமாறு இலங்கை உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு உத்தியோகத்திற்குப் பரிந்துரைத்தது. |
| 06 | <u>**தரவுகள் கட்டமைப்பை இற்றைப்படுத்தல்.**</u> | மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட முறைப்பாடு முகாமைத்துவ தரவுக் கட்டமைப்பு மற்றும் UNDP நிறுவனத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்ட முழுமையான அறிக்கைகளை பெறக்கூடிய தரவு கட்டமைப்பு இற்றைப்படுத்தப்படாமை தொடர்பாக குழு வினவியது.<br><br>மேற்படி இரண்டு தரவுக் கட்டமைகளிலும் எவ்வித பிரச்சனைகளும் காணப்படவில்லை எனவும், ஆனாலும் அவற்றை உரிய முறையில் செயற்படுத்துவதற்குத் தேவையான கணிப்பொறிகள், ஸ்கேன் இயந்திரங்கள் போன்ற உபகரணங்கள் மற்றும் பணியாட்டொகுதொகுதியில் குறைபாடும் தகவல்களை உள்ளடக்குவதில் குறைபாடும் இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.<br><br><u>**விதப்புரைகள்**</u><br><br>கூடுதல் முன்னுரிமை அளித்து, குறித்த தரவுக் கட்டமைப்புகளை இற்றைப்படுத்தி செயல்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையினை இரண்டு வாரங்களுக்குள் (2023.12.11 ஆம் திகதிக்கு முன்னதாக) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் கூடியதாக குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு குழு பணிப்புரை வழங்கியது.<br><br>மேற்குறிப்பிட்டுள்ளவாறு பிராந்திய அலுவலகங்களுக்கும் தலைமை அலுவலகத்தின் தரவுக் கட்டமைப்புக்குமிடையே உரிய ஒருங்கிணைப்பு காணப்படுகின்றதா என்பதை அவதானிக்குமாறு குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவுறுத்தல் வழங்கியது.<br><br>மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தரவுக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக கூடிய விரைவில் திறைசேரியுடன் முறையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த ஆண்டின் மூலதனச் செலவுகளுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம் தரவுக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான கணிப்பொறிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு கணக்கீட்டு அலுவலருக்கு பணிப்புரை வழங்கியது. |
| 07 | **<u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் செயற்படுத்தப்படாத சந்தர்ப்பங்களின் சதவீதம் மிக உயர் மட்டத்தில் காணப்படுகின்றமை.</u>** | ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தாமை தொடர்பாக தொடர் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நிறுவப்பட்டுள்ள "நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகளை மேற்பார்வை |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | செய்வதற்கான பிரிவு" வலுவூட்டப்பட வேண்டும் என குழு சுட்டிக்காட்டியது. அதற்கு மேலதிகமாக நடைமுறைப்படுத்தப்படாத விதப்புரைகள் தொடர்பாக 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையினை காலாண்டுக்கு ஒரு முறை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு கணக்கீட்டு அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது.<br><br>மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சில பரிந்துரைகள் நடைமுறை ரீதியாக செயல்படுத்த முடியாமல் போனமைக்கு கீழ்காணும் காரணங்கள் தாக்கம் செலுத்தியுள்ளதென கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டது<br><br>1. சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகள் சுற்றுநிருபங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிறுவனத்தின் உள்ளக விதிகளுக்கு இசைந்தொழுகாமை.<br>2. ஏற்புடைய தரப்புகளுக்கு முறையாக விதப்புரைகள் ஆற்றுப்படுத்தப்படாமை<br>3. ஒரே சம்பவம் தொடர்பாக நேர் ஒத்ததாக விசாரணைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களின் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றமை. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| 08 | **மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்.** | மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்கு ஆணைக்குழு செயற்படுத்துகின்ற வேலைத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது. ஒரே சம்பவம் தொடர்பாக மக்கள் பல்வேறு நிறுவனங்களிடம் முறைப்பாடு செய்வதற்கு காரணம் மக்களின் அறியாமையே என்பது குழுவின் அபிப்பிராயமாக இருந்தது.<br><br>மக்களை அறிவுறுத்துவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த கணக்கீட்டு அலுவலர், அதன் பிரகாரம் மக்களிடமிருந்து கிடைக்கும் கடிதங்கள், தொலைநகல்கள், மின்னஞ்சல் செய்திகள் மற்றும் நேரடியாக ஒப்படைக்கும் கடிதங்கள் மூலம் ஏராளமான முறைப்பாடுகள் கிடைப்பதாக குறிப்பிட்டார்.<br><br>அதற்கு மேலதிகமாக, வெகுசன ஊடகங்கள் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக முறைப்பாடு இல்லாத நிலையிலும் விசாரிக்கும் அதிகாரம் (on its own motion) மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 14 ஆவது பிரிவின் மூலம் தமது ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக க.அ குழுவிற்கு தெரிவித்தார். ஆண்டொன்றில் பொதுவாக அவ்வாறான 20 முதல் 25 விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் க. அ தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | சிறுவர் இல்லங்கள், உள நல மருத்துவமனைகள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் போன்ற நிறுவனங்களை ஆய்வு செய்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் க.அ தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>கடந்த ஆண்டில் பாதிக்கப்பட்ட தரப்புகளிடமிருந்து முறைப்பாடு ஏதுமின்றி ஊடகங்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் யாவை? எண்ணிக்கையில் அது எவ்வளவு? மற்றும் அவற்றின் முன்னேற்றம் மற்றும் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றை 2024.01.24 ஆம் திகதியன்று குழு மீண்டும் கூட்டப்படும்போது சமர்ப்பிக்குமாறு குழு கணக்கீட்டு அலுவலருக்குப் பரிந்துரைத்தது. |
| 09 | <u>விசாரிக்கப்படாத முறைப்பாடுகள்</u> | **<u>விதப்புரைகள்</u>**<br><br>மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படாத ஏராளமான முறைப்பாடுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய குழுவானது, அந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்குள்ள வேலைத்திட்டம் தொடர்பான அறிக்கையினை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | ஆற்றுப்படுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கணக்கீட்டு அலுவலருக்கு உத்தரவிட்டது. |
| **பாதுகாப்பு அமைச்சு**<br>***(2020, 2021, 2022 ஆம் நிதி ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகையின் ஆய்வு)***<br>**விசாரிக்கப்பட்ட திகதி - 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி** | | |
| **அழைக்கப்பட்ட நிறுவனங்கள்**<br>❖ பாதுகாப்பு அமைச்சு | | |
| 01 | **<u>2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை செயற்படுத்துவதில் எட்டப்பட்ட முன்னேற்றம்</u>**<br><br>1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க துப்பாக்கி (திருத்தச்) சட்டம் மற்றும் வெடிபொருட்கள் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்த வேண்டியதன் அவசியம். | குறித்த திருத்தங்களை மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் 10 ஆண்டுகளை விஞ்சிய நிலையில் உரிமப்பத்திரக் கட்டணங்கள் சமகால அடிப்படையில் திருத்தப்படாத காரணத்தினால் கணிசமான வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளமை தொடர்பாக குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது.<br><br>2016-ஆம் ஆண்டில் துப்பாக்கி சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு ஏற்புடையதாக குழுவொன்று நியமிக்கப்பட்டதாகவும், அமைச்சரவை மாற்றம் காரணமாக சட்டவரைஞர் திணைக்களத்தினால் புதிய அமைச்சரவைக்கு விதப்புரைக்கப்பட்டதாகவும் அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சட்டமூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். துப்பாக்கிகள் உரிமப் பத்திர கட்டணங்களில் திருத்தஞ் செய்வதற்கு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் வழங்கப்பட்டதாகவும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | மேற்படி கட்டணத் திருத்தத்திற்கு முழு சட்டத்தையும் திருத்த வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>**விதப்புரைகள்**<br><br>1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க துப்பாக்கி (திருத்தச்) சட்டம் மற்றும் வெடிபொருட்கள் (திருத்தச்) சட்டம் ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வரையான நாள் விபரங்கள் அடங்கிய அறிக்கையினை 2023.12.28 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அலுவலருக்குப் பரிந்துரைத்தது.<br><br>**இந்த விடயத்தின் தற்போதைய நிலைமையை குறிப்பிட்டு பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளரின் (பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கொள்கைகள்) 2023.12.28 ஆம் திகதிய MOD/PAC/05/COPA/2023 ஆம் இலக்க கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.**<br><br>**குறித்த சட்டமூலம் இன்னளறவில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.**<br><br>வெடிபொருட்கள் உரிமப்பத்திர கட்டண ஒழுங்குவிதிகள் (regulations) மூலம் 2022 ஆம் ஆண்டில் வெடிபொருட்கள் உரிமப்பத்திர கட்டணங்கள் சுமார் 60% ஆல் உயர்த்தப்பட்டுள்ளதாகவும், வெடிபொருட்கள் சட்டம் மற்றும் இராசாயனப் பொருட்கள் சட்டத்தின் பிரகாரம் 12 கடல் மைல் தூர எல்லைக்குள் இலங்கை ஊடாக பயணிக்கும் அபாயகரமான பொருட்களை ஏற்றிச் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | செல்லக்கூடிய கப்பல்களும் பாதுகாப்பு அமைச்சுக்கு கட்டணம் செலுத்தி அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனவும் பி.க.அ தெரிவித்தார்.<br><br>மேலும், இலங்கை கடற்பரப்பில் விபத்துக்குள்ளான “எக்ஸ்பிரஸ் பர்ல் கப்பல்” மேற் குறிப்பிட்டுள்ளவாறு பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வைக்குள் கொண்டு வரப்படாமை தொடர்பாக குழு வினவியதோடு, சர்வதேச உடன்படிக்கைகளுக்கமைய இலங்கை கடற் பரப்பில் பயணிக்கும் கப்பல்களிலிருந்து குறித்த கட்டணங்கள் அறவிடப்பட வேண்டுமெனவும் அதற்கு பாதுகாப்பு அமைச்சினதும் தலையீடு இருக்க வேண்டுமெனவும் குழு சுட்டிக்காட்டியது. இதற்கு ஏற்புடைய சட்டம் வரைபு மட்டத்தில் காணப்படுவதாகவும் அதன் மூலம் இலங்கை கடற்படைக்கு குறித்த கட்டணங்களை அறவிடுவதற்கான அதிகாரம் வழங்கப்படுமெனவும் பி.க.அ தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>இலங்கை கடற் பரப்பில் பயணிக்கும் கப்பல்களில் குறித்த கட்டணங்களை அறிவிடுதல் தொடர்பான உத்தேச சட்டமூலத்தின் தற்போதைய நிலைமை தொடர்பான அறிக்கையொன்றை 2023.12.01 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு வழங்குமாறு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசிலயமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் பி.க.அலுவலருக்கு குழு விதப்புரை வழங்கியது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **குறித்த சட்டமூலம் இன்ளறவில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.** |
| 02 | **<u>2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதியன்று நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றம்.</u>**<br><u>முப்படைகள் மற்றும் பொலிசார் வெளித் தரப்புகளுக்கு வழங்கும் சேவைகள் மூலம் ஈட்டும் வருமானங்கள்.</u><br>முப்படைகள் தொடர்பான நலன்புரி சங்கங்களின் செலவுகள், இணைந்த நிதியத்தினால் ஏற்கப்படுவதால் அதன் வருமானமும் இணைந்த நிதியத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டுமெனவும், ஆனால் சில நலன்புரி சங்கங்களின் வருமானம் 100% இதர நிதியங்களுக்கு வரவு வைக்கப்படுவதாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார். மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்படும் வருமானம் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரையின் பிரகாரம் இணைந்த நிதியத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் 2014 ஆம் ஆண்டு முப்படைகளின் | முப்படைகளின் நிதியங்களின் வருமானங்களை வரவு வைத்தல் தொடர்பாக 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதென்பது இதன் போது வெளிக்கொணரப்பட்டது. 2023.11.03 ஆம் திகதிய உள்ளக கடிதத்தின் மூலம் மேற்படி வருமானத்தில் இணைந்த நிதியத்துக்கு வரவு வைக்கப்பட வேண்டிய வருமான சதவீதம் எவ்வளவென்பது தொடர்பாக முப்படைகளின் தலைமை நிர்வாகிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளக சுற்றுநிருபத்தின் மூலம் வருமானம் பகிரப்படும் விகிதம் தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அங்கீகாரம் பெறப்படவில்லை என்பதும் இதன் போது வெளிக்கொணரப்பட்டது. சதவீதத்தை தீர்மானிக்கும் அதிகாரம் தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்பதோடு குறித்த சதவீதத்தை வருமானத்திலிருந்தா அல்லது தேறிய இலாபத்திலிருந்தா ஒதுக்கப்பட வேண்டும் என்பது தெளிவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், கணக்காய்வுக்கு தகவல்களை வழங்கும் போது சகல வருமான மூலங்களும் குறிப்பிடப்படாமை, செலவை வருமானத்திலிருந்தா அல்லது இணைந்த நிதியத்திலிருந்தா ஏற்க வேண்டுமென்பது உறுதிப்படுத்தப்படாமை, நிறுத்தி |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | தலைமை நிருவாகிகளுக்கு அறிவித்து இது தொடர்பாக உரிய செயன்முறையொன்றைத் தயாரித்து அமைச்சுக்கு அறிக்கையிடுமாறு அறிவித்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைக்கப்படும் தொகை பயன்படுத்தப்பட வேண்டிய விதம், செலவுகள் வெளிக்கொணரப்படாமை மற்றும் வருமானம் மற்றும் செலவுகளுக்கு அரசாங்கத்தின் மனித மற்றும் பௌதீக வளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும் அது அரசாங்கக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படாமை போன்ற விடயங்கள் குழுவினால் மேலும் அவதானிக்கப்பட்டன.<br><br>முப்படைகளின் நலன்புரி நிதியங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சினால் மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனவும், முப்படை கணக்காய்வுக் குழுவில் அவதானிப்பு மட்டத்தில் பங்கேற்கும் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் கவனம் செலுத்தப்பட்ட முப்படைகளின் நிதியங்களை வரவு வைத்தல் மற்றும் அந்த நிதியங்கள் சார்ந்த இதர விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு குழுக்களில் குறிப்பிட வேண்டுமெனவும் குழுவினால் வலியுறுத்தப்பட்டது. மேலும் இவ்வாறு ஈட்டப்படுகின்ற வருமானங்களை இணைந்த நிதியத்துக்கு வரவு வைப்பதற்கு உரிய செயன்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பி.க. அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>முகாம்கள் மட்டத்தில் பேணப்படுகின்ற நிதியங்கள் தொடர்பான அறிக்கையும் முப்படைகளின் பாதுகாப்பு கணக்குகள் தவிர திறக்கப்பட்டுள்ள இதர வங்கிக் கணக்குகளுக்கு ஏற்புடைய மேற்படி |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | வங்கிக் கிளையின் பெயர், கணக்கின் பெயர், கணக்கு திறக்கப்பட்ட திகதி, நிலையான/சேமிப்பு/நடைமுறை கணக்கா என்பதும், எதற்காக அது திறக்கப்பட்டது என்பதும், அதில் கையொப்பமிடும் அதிகாரம் யாருக்குள்ளது என்பதும், அக் கணக்குகளின் தற்போதைய நிலுவைகள் எவ்வளவென்பதும் அடங்கிய விபர அறிக்கையும் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பி. க. அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.<br><br>**பாதுகாப்பு அமைச்சின் 2024.01.10 ஆம் திகதிய MOD/DEF/HRM/GEN/OTHERS/88/(11) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முப்படைகளினதும் ஏற்புடைய கணக்குகளின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதியன்று நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் முன்னேற்றம்.</u>**<br><br>முப்படைகளுக்கு உணவுப் பொருட்கள் கொள்வனவு. | மேற்படி கொள்வனவு செயற்பாட்டுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு தகவல் முகாமைத்துவ கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு குழு விதப்புரை செய்ததோடு வழங்கப்படுகின்ற உணவுகள் தொடர்பாக படையினரின் பதில் குறிகளை மதிப்பீடு செய்யும் தரவுக் கட்டமைப்பொன்றைப் பேண வேண்டியதன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வாறாயினும், மொத்த வழங்கல் பெறுமதியில் 70% ஐ பெற்றுக்கொள்ளும் தரைப்படை இவ்வாறான கட்டமைப்பொன்றை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | பயன்படுத்தாமை, வருடாந்தம் சுமார் 96 பில்லியன் ரூபாய் செலவிட்டு 30 இற்கும் மேற்பட்ட இராணுவ முகாம்களுக்கு 600 உணவு வகைகளை வழங்குவதற்கு 25 ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்துள்ளமை, ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி அளவுகள் இயற்கைக்கு புறம்பாக உள்ளமை, விலை மனு கோரலின் போது வழங்கப்படும் குறைந்தபட்ச விலை இயற்கைக்கு புறம்பாக உள்ளமை மற்றும் குறைந்தபட்ச விலைக்கும் சந்தை விலைக்குமிடையிலான வேறுபாடு சில பொருட்களுக்கு சுமார் 500% - 1000% அளவில் காணப்படுகின்றமை போன்ற விடயங்கள் குழுவில் வெளிக்கொணரப்பட்டன.<br><br>மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக குழு தமது தீவிர கவனத்தை செலுத்தியிருந்ததோடு, வழங்குநர் என்ன விலையை குறிப்பிட்டிருந்தாலும் அந்த விலை சந்தை விலையை காட்டிலும் 5% ஐ விஞ்சலாகாதென சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>கடற்படை மற்றும் விமானப்படையின் உணவு வழங்கல் நடவடிக்கையுடன் தொடர்புடைய தரவுக் கட்டமைப்பு முழுப் பயன்பாட்டில் உள்ளதாகவும், தரைப்படையின் தரவுக் கட்டமைப்பின் முதல் கட்டம் 2023.12.31 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படுமெனவும், 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் மேற்படி தரவுக் கட்டமைப்பை முழுமையாக |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தரைப்படையை பொறுத்த வரை இந்த விடயத்தில் தாமதமொன்று நிலவுவதாகவும் பி.க.அ தெரிவித்தார். எவ்வாறாயினும் முப்படைக்குமான தரவு கட்டமைப்பொன்றைத் தயாரித்து பாதுகாப்பு அமைச்சையும் அதில் இணைத்துக் கொண்டு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் அதன் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென குழு வலியுறுத்தியது. மேற்படி, உணவு வழங்கல் நடவடிக்கைகளுக்கு போட்டி விலைகளை கோருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அச் செயற்பாட்டில் இதர அரச நிறுவனங்கள் மூலம் அதிகபட்ச விலையை தீர்மானித்து மேற்படி செயற்பாட்டை மேற்பார்வை செய்வதாகவும் பி.க.அ தெரிவித்தார். மேலும், தரைப்படைக்கான தரவுக் கட்டமைப்பு 2023.12.31 ஆம் திகதியளவில் செயற்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>தரப்படையின் தரவுக் கட்டமைப்பை முழுமையாக செயற்படுத்தும் நாள் விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை 2023.12.11 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அலுவலருக்கு விதப்புரை வழங்கியது.<br><br>மேலும், உணவுக் கொள்வனவு மதிப்பீடுகளை சீராக கணக்கிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு முப்படைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் பி.க.அ தெரிவித்தார். சுற்றுநிருபமொன்றை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | வெளியிடுவதன் மூலம் மேற்படி உத்தரவை முறையாக வழங்குமாறு குழு பி.க. அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கியது.<br><br>**சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கொள்கைகள்) 2023.12.14 ஆம் திகதிய MOD/PAC/05/COPA/2023 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மேற்படி மென்பொருள் கட்டமைப்பை 2024 மே மாதமளவில் நிறைவு செய்ய முடியுமென்பதோடு அதற்கான கால வரையறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 04 | **<u>ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை நடவடிக்கை கடமைகள்</u>** | ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படை நடவடிக்கைகள் கடமைகளுக்காக 2022 ஆம் ஆண்டில் 19,177,125.83 அமெரிக்க டொலர் பெறுமதியான தொகை திரட்டப்பட்டுள்ள போதிலும் அந்த ஆண்டின் வருமானமாக 7,506,868.47 டொலர் (இலங்கை ரூபாய் 2,447,153,974) மாத்திரம் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆண்டு வருமானத்தத்தில் 11,670,270.36 டொலர் வருமானம் கணக்குகளில் வெளிப்படாமை தொடர்பாக குழு கவனம் செலுத்தி இருந்தது. 1/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றுநிருபம் பின்பற்றப்படாமை மற்றும் மேற் குறிப்பிட்ட தொகை இணைந்த நிதியத்தில் வரவு வைக்கப்படாமை தொடர்பாக குழு வினவியிருந்தது.<br><br>நிறுத்தி வைக்கப்பட்ட தொகை அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பி.க.அ தெரிவித்தார். அமைதிப் படை |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | நடவடிக்கைகளுக்கு மேலும் ஆட்களை அனுப்புவதற்கும் வெளிநாடுகளில் கடமை நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள ஹெலிகொப்டர் விமானங்கள் போன்றவற்றை பழுது நீக்கும் நடவடிக்கைகளுக்குமே அத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பி.க.அ தெரிவித்தார். மேற்படி தொகையை இணைந்த நிதியத்துக்கு வரவு வைக்குமாறு ஆண்டு இறுதியில் சம்பந்தப்பட்ட கணக்குகளை கொண்டுள்ள வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் 2022 ஆம் ஆண்டில் அதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் 2023.01.03 ஆம் திகதியன்று அத் தொகை இணைந்த நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ தெரிவித்தார். |
| 05 | <u>**பொருளாதாரம் சாராத மற்றும் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.**</u><br><br>பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி அலுவலகம் | 2022 ஆம் ஆண்டு சனசரி மாதம் 13 ஆம் திகதி நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கொன்றுக்கு 400 பேருக்கு ரூ 5,197,413 தொகை பொருளாதாரம் சாராத விடயத்துக்கு செலவிடப்பட்டுள்ளமை மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்த வேண்டுமென்ற போதிலும் இதன் போது செலவு விடயத்தின் கீழ் செலவு செய்யாது நலன்புரி நிதியத்திலிருந்து செலவு செய்து பின்னர் மேற்படி செலவின விடயத்துக்கு மீள்நிரப்பும் தவறான முறையொன்று பின்பற்றப்பட்டுள்ளமை குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.<br><br>கோவிட் பெருந்தொற்று காரணமாக 2019 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த மேற்படி கருத்தரங்கு 2022 ஆம் ஆண்டில் நடைபெற்றதாகவும் 300 |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | அலுவலர்களுக்காக திட்டமிடப்பட்டிருந்த கருத்தரங்குக்கு முப்படைகளின் வேண்டுகோளின் பேரில் பின்னர் 400 அலுவலர்கள் வரை அதிகரிக்கப்பட்டதாகவும் பி.க.அ தெரிவித்தார். |
| 06 | <u>**பொருளாதாரம் சாராத மற்றும் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**</u><br><br>தேசிய பாதுகாப்புக் கல்லூரி | பாடநெறியில் பங்கேற்கும் 31 அலுவலர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு 3,000,000 ரூபாய் மாத வாடகையின் கீழ் இரண்டு வருடங்களுக்கு ரூ 72,000,000 ரூபாய் குத்தகை ஒப்பந்தத்தின் பேரில் 24 குடிமனைகளைக் கொண்ட வீடமைப்புத் தொகுதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை மற்றும் மேற்படி வீடமைப்புத் தொகுதியிலிருந்து போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் பேரூந்தொன்றும் பெற்றுக்கொண்டமைக்கு ரூ 1,795,500 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக குழுவினால் வினவப்பட்டது.<br><br>இந்த பாடநெறியின் முதல் கட்டத்துக்காக இச் செலவு செய்யப்பட்டதாகவும் முப்படைகள் மற்றும் அதற்கு இணையான சிவில் பதவிகளின் உயர் மட்ட அலுவலர்கள் இதில் கலந்து கொள்வதாகவும் பி.க.அ தெரிவித்தார். இதன் மூன்றாம் கட்டத்திலிருந்து வெளிநாட்டு அலுவலர்களும் பங்கேற்பதாகவும் அதன் மூலம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.<br><br>பெருந்தொகையை செலவிட்டு வாடகை அடிப்படையில் கட்டடமொன்றை பெறுவதற்கு பதிலாக எதிர்காலத்தில் தேசிய பாதுகாப்பு கல்லூரிக்கு நிரந்தர |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கட்டடமொன்றை நிர்மாணிப்பது தொடர்பாக பரிசீலனை செய்யுமாறு குழு வலியுறுத்தியது. அதற்கான நிதி ரீதியான ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்துமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு குழு யோசனை முன்வைத்தது. |
| 07 | <u>**மூலோபாய தொடர்பாடல் வலையமைப்பு கருத்திட்டம்**</u> | 2016 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் இத் திட்டத்தின் கால எல்லை 06 வருடங்களால் நீட்டிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முழு பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 73% மற்றும் 53% ஆக காணப்பட்டது. இக் கருத்திட்டத்துக்கு 658.68 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் ஆயுதமேந்திய சேவைகளுக்கிடையே எதிர்பார்க்கப்பட்ட இணைந்த மூலோபாய தொடர்பாடலை பேணும் அடிப்படை நோக்கத்தை அடைய முடியவில்லை. மேலும், 2016 ஆம் ஆண்டில் தொடர்பாடல் கட்டமைப்பின் கொள்வனவுத் திட்ட விபரங்கள் தற்போதைய தொழில்நுட்பத்துக்கு பொருந்துகின்றதா என்ற பிரச்சினை காணப்படுவதோடு முழுச் செலவுமே பொருளாதாரம் சாராத செலவென்பதை குழு அவதானித்தது.<br><br>கருத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு பாரியளவிலான கட்டுமானங்கள் தொடர்பாக பணயாற்றும் விஷேட கருத்திட்டக் குழு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கேற்புடைய கோபுரங்களை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | நிர்மாணிக்கும் பணிகளில் ஒரு பகுதி நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் செலவிடப்பட்டுள்ள தொகைக்கு நிகராக சொத்துக்கள் எஞ்சியுள்ளதால் அச் சொத்துக்கள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தொழில்நுட்பத்தை இற்றைப்படுத்தி இத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பி.க.அ தெரிவித்தார்.<br><br>இது தொடர்பாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை (TRC) இணைத்துக்கொண்டால் மேற்படி கோபுரங்களின் மூலம் வருமானத்தை ஈட்ட முடியுமா என்பது தொடர்பாக ஆராயுமாறு குழு பி.க.அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கியது. |
| 08 | **<u>கொள்வனவு</u>** | (i) 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி 08 மோட்டார் வாகனங்களையும் 02 கப் ரக வாகனங்களையும் தொழில்பாட்டு குத்தகை முறையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு கிடைத்திருந்த ஒரே விலைமனுவின் அடிப்படையில் வழங்குநர் தெரிவு செய்யப்பட்டார். அதன் பிரகாரம், அடுத்த 5 ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட மேற்படி 98,300,940 ரூபாய் பெறுமதியான இக் கொடுக்கல் வாங்கல் அரசாங்க கொள்வனவு செயற்பாட்டிலிருந்து விடுபட்டு எதிர்பார்க்கப்படும் போட்டி விலைகளை பெற்றுக் கொள்ளாது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு விலைமனுதாரர்கள் வருகை தராத காரணத்தினால் முப்படைகளின் இவ்வாறான விலைமனுத் தொகைகளுக்கு விண்ணப்பித்த |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | விண்ணப்பதாரிகளிடமிருந்து விலைகளைக் கோரி பதில் அளித்த ஒரே மற்றும் குறைந்த பட்ச விலைகளை சமர்ப்பித்த வழங்குநரை தெரிவு செய்ததாக பி.க.அ தெரிவித்தார்.<br><br>(ii) கொள்வனவு வழிகாட்டுதல் கோவையின் 7.9.1 (அ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக, இலங்கைத் தரைப்படைக்கு 529,000 மீற்றர் பொலியெஸ்டர் வூல் துணிகளை கொள்வனவு செய்வதற்கு விலைகளை கோரும் ஆவணங்கள் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் துணி மாதிரிகளின் தரத்தை ஏற்றுக்கொண்ட 3 நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இரசாயன ஆய்வுக் கூட தரப் பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் விலை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விலை விபரங்கள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து எட்டப்பட்ட கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் பெறப்பட்ட தரப் பரிசோதனை அறிக்கையொன்றின் அடிப்படையாக கொண்டு விலை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை வெளிக்கொணரப்பட்டது. தரப் பரிசோதனை அறிக்கைகளை வழங்குவதற்கு 3 ஆய்வுகூடங்கள் நீண்ட கால அவகாசத்தை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கோரியிருந்த காரணத்தினால் விலை மனுக்களை மதிப்பீடு செய்வதற்கு 6 வாரங்கள் காணப்பட்டதன் பேரில் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் தரப் பரிசோதனை அறிக்கைகள் பெற்பட்டதாக பி.க. அ தெரிவித்தார். |
| 09 | <u>**நுகர்வுப் பொருட்கள் களஞ்சியத்தில் ரூ 12 மில்லியனுக்கு அதிகமான பொருட்கள் தொடர்பான குறைபாடு**</u> | 2021 ஒக்தோபர் மாதத்துக்குரிய நுகர்வுப் பொருட்கள் மேன்முறையீட்டுப் பத்திர கோப்பு காணாமல் போயுள்ளமை, 6 மில்லியன் ரூபாய் செலவுக்கான எவ்வித மொத்த கையிருப்பு ஆவணமொன்றும் பேணப்படாமை, களஞ்சிய பொறுப்பாளர்களின் பணிகள் மேற்பார்வை செய்யப்படாமை மற்றும் கணக்கு ஏடுகளில் சரி பிழை பார்க்காமை தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.<br><br>இதனுடன் தொடர்புடைய களஞ்சியப் பொறுப்பாளரும் மேற்பார்வை அலுவலரும் கடமைகளிலிருந்து பணி நீக்கப்பட்டுள்ளதாகவும் புதிய குழுவொன்றை இதன் பொருட்டு நியமித்து மொத்த கையிருப்பை கணக்கிட்டு பேணுவதாகவும் களஞ்சியப் பொறுப்பாளர் மற்றும் மேற்பார்வை அலுவலர் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பி.க.அ தெரிவித்தார்.<br><br>மேலும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | ஊதியத்திலிருந்து மாதாந்தம் ரூ 9,207.00 அறவிடப்படுவதோடு, மேலும் 12,173,527 ரூபாய் அறவிடப்படவுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.<br><br>எவ்வாறாயினும் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்படி தகவல்கள் வெளிக்கொணரப்படாமை குறைபாடு என குழு இதன் போது சுட்டிக்காட்டியது. |
| 10 | **<u>பணியாட்டொகுதி தகவல்கள்</u>** | பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள இதர பிரிவுகளின் கடமைகளுக்கு அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதிக்கு மேலதிகமாக முப்படை அலுவலர்கள் மற்றும் இதர பதவிகளுக்குரிய 700 இற்கும் மேற்பட்ட இராணுவ அங்கத்தவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததோடு அதற்கான செலவுகள் முப்படையினரால் ஏற்கப்பட்டன. மேலும், சிவில் பிரிவுகளால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 122 பதவி வெற்றிடங்கள் முப்படைகளின் இதர நிலைகளிலிருந்தே உள்வாங்கப்பட்டனர்.<br><br>இன்றளவிலும் ஒரு பகுதி அலுவலர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும் 2023.12.31 ஆம் திகதிக்கு மேலும் ஒரு பகுதியினரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பி.க.அ தெரிவித்தார். கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட போராட்டங்கள் மற்றும் கோவிட் பெருந்தொற்று காரணமாக அமைச்சுக்கு மேலதிகமாக ஒப்படைக்கப்பட்ட கூடுதல் பணிகளை நிறைவேற்றுவதற்கும் புதிதாக |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | ஏற்படுத்தப்பட்ட எல்லை இடர் மதிப்பீட்டு நிலையங்கள் (Border Risk Assessment Center) போன்ற நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.<br>**<u>விதப்புரைகள்</u>**<br>இவ்வாறான அலுவலர்களை இணைப்பதற்கு உரிய சட்ட பின்னணியை ஏற்படுத்துவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென குழு வலியுறுத்தியது. |
| 11 | **<u>“நமக்காக நாம் நிதியம்”, தேசிய பாதுகாப்பு நிதியம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு சொந்தமான இதர நிதியங்கள்</u>** | தரைப்படையில் விபத்துக்குள்ளான மற்றும் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கும், இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும், இந்த நிதியின் நிலையான வைப்புத்தொகையின் மூலம் கிடைக்கும் வட்டித்தொகையை அதற்காக பயன்படுத்தப்படுவதாகவும் பி.க.அ தெரிவித்தார். தொடர்பாடல் கோபுரங்களின் வருமானமும் வீடமைப்புத் திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானமும் “நமக்காக நாம் நிதியத்துக்கு” வரவு வைக்கப்படுவதாகவும் பாதுகாப்பு நிதியத்துக்கு வீட்டு வாடகை வருமானம் கிடைப்பதாகவும் இங்கு வெளிக்கொணரப்பட்டது. |
| 12 | **<u>அனர்த்த முகாமைத்துவம்</u>** | அனர்த்த எதிர்வுகூறல் வேலைத்திட்டம் தொடர்பாக குழுவினால் வினவப்பட்டது. |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன், நாட்டின் 25 மாவட்டங்களிலும் 25 அனர்த்த முகாமைத்துவ நிலையங்கள் மும்மொழியிலும் 24 மணித்தியாலங்களும் செயற்படுவதாகவும் தேசிய பேரிடரொன்றின் போது முப்படையினரும் பொலிசாருமே முதலில் எதிர்வினையாற்றுகின்றவர்களாக இருப்பார்கள் எனவும் பி.க.அ தெரிவித்தார். சுனாமி அனர்த்தம் தொடர்பாக கையடக்கத் தொலைபேசிகளுக்கு செய்திகளை அனுப்புவதை நோக்கமாக கொண்டு 2023.12.26 ஆம் திகதியன்று தொலைபேசி வாயிலொன்றை (Telephone Portal) திறப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அதன் பொருட்டு ஏற்புடைய 14 மாவட்டங்களுக்கும் சேவை வழங்குநர்கள் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளார்களெனவும் பி.க.அ குழுவிற்கு தெரிவித்தார் சுனாமி எச்சரிக்கை கோபுரங்களின் சம்பந்தப்பட்ட செய்மதி தொழில்நுட்பம் இன்றளவில் செயலிழந்துள்ளதாகவும் அதற்கு பதிலாக தொலைபேசி ஊடாக அனர்த்தங்கள் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கும் செயற்பாடொன்றை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். உயரமான கட்டடங்களில் ஏற்படக்கூடிய தீ அனர்த்தங்களின் போது அத் தீயை அணைப்பதற்கு; தேவையான உபகரணங்களில் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இங்கு வெளிக்கொணரப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
| **அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களம்**<br>***(2022ஆம் ஆண்டில் மிகை, வரையறை மீறல், அதிகாரமளிக்கப்படாத தொழிற்பாட்டு இழப்பு மற்றும் 2021ஆந் ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை )***<br>**விசாரணைத் திகதி – 2023 திசெம்பர் 05** | | |
| **அழைக்கப்பட்ட நிறுவனங்கள்**<br>❖ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு<br>❖ அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் | | |
| 01 | **<u>2022ஆந் ஆண்டுக்கான அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் மிகை, வரையறை மீறல் மற்றும் அதிகாரம் அளிக்கப்படாத தொழிற்பாட்டு இழப்பு</u>** | நி.பி.கு. 513இன்படி 2022 திசெம்பர் 31ஆந் திகதியன்று அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணி முற்பணக் கணக்கில் (31003) அதிகாரமளிக்கப்படாத தொழிற்பாட்டு இழப்பு ரூ. 70,758,133 ஆகவிருந்தது. இது சம்பந்தமாக 2022 நவம்பர் 30ஆந் திகதிக்கு தயாரிக்கப்பட்ட இலாப நட்டக் கணக்கின்படி, நிகர இழப்பு ரூ. 32 மில்லியனாகும். 2022 திசெம்பர் 31ஆந் திகதிக்கு மதிப்பிட்ட இழப்பிற்கான செலவினத்திற்கு ரூ. 150 மில்லியன் ஆன தொகையை 310-2-1-0-1701ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கு ஒதுக்குமாறு 2022 திசம்பர் 16ஆந் திகதிய, இல.2C/ மட்டுப்பாடு திருத்தம் / 365 / 02 / (2022 - 2025) என்ற கடிதத்தின் மூலம், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு முகவரியிட்டு அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி (பதில்) கோரியிருந்தாலும், நிதி இழப்பை ஈடுசெய்ய 2023ஆம் ஆண்டு மே மாதம் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | 19ஆந் திகதி வரையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.<br><br>மேலும், 2022ஆம் ஆண்டு அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணி முற்பணக் கணக்கின் நிதி சார்ந்த செயற்பாடுகள் 70,758,133 ரூபா தொழிற்பாட்டு இழப்பாக பதிவாகியிருந்தது. எனினும், முதலில் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்த கணக்குகளில் தொழிற்பாட்டு இழப்பு ரூ. 44 மில்லியன் எனப் பதிவாகியிருந்தாகவும் பின்னர் கணக்காய்வு அவதானிப்புகளின்படி கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருந்த சொத்துகள் மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டு, திருத்தப்பட்ட கணக்குகளில் தொழிற்பாட்டு இழப்பு ரூபா 70 மில்லியன் எனக் கணக்குப் பதிவு வைக்கப்பட்டுள்ளதாகவும் குழு முன்னிலையில் வெளிக்கொணரப்பட்டது. கோவிட் பெருந்தொற்று காலத்தில் பணியாளர்கள் கடமைக்குச் சமூகமளித்திருந்தபோதும், உற்பத்தி குறைவாக காணப்பட்டதாகவும் தொடர்ச்சியாக சம்பளம் செலுத்தப்பட்டதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். அரசாங்க தொழிற்சாலையின் வழமையான நிருவாகத்திற்காக பெற்றுக்கொண்ட சொத்துகளையும் உற்பத்தி நிமித்தம் பெற்றுக் கொண்ட சொத்துகளையும் வேறுபடுத்தி சீராக்கல் செய்யப்பட்ட கணக்கின் மூலம் தொடக்கத்தில் ரூ 44 மில்லியன் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தொழிற்பாட்டு இழப்பு கணக்குப்பதிவு வைக்கப்பட்டதாகவும், பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பின் பேரில் சம்பந்தப்பட்ட சீராக்கல்கள் செய்யப்பட்டதன் பின்னர் ரூ 70 மில்லியன் தொழிற்பாட்டு இழப்பு கணக்குப்பதிவு வைக்கப்பட்டதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். ஆகவே, 2023ஆந் ஆண்டுக்கென சரியான கணக்குப் பதிவை மேற்கொள்ள பணி முற்பண கணக்கில் சீராக்கல் செய்ய வேண்டிய சொத்துக்களை இனங்கான குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>மேலும், திணைக்களம் நிதி ரீதியான நட்டத்தை எதிர்கொள்ள கோவிட் பெருந்தொற்றும் எரிபொருள் நெருக்கடியும் காரணமாக அமைந்ததென இங்கு தெரிவிக்கப்பட்டது.<br><br>வேலை செய்யும் 28 நாட்களுக்கு விசேட விடுமுறை மீதான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டதால் இழக்கப்பட்ட தொகை ரூபா 26,693,689 ஆகும். பணியாளர்கள் கடமைக்குச் சமுகமளித்தபோதும் மின் துண்டிப்பின் காரணமாக இயந்திரங்களை இயக்க முடியாததால் செயலிழந்த ஊழியத்திற்காக ரூபா. 319,523 ஆன தொகையைச் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டமை மற்றும் வேலைப் பத்திர இலக்கம் 4215 இன் கீழ் 1850 கட்டில்களை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | அமைப்பதற்காக 2022ஆம் ஆண்டில் செலவினத்திற்கு ஒப்பாக பட்டியல் வருமான அறிக்கை இடப்படாத அளவு ரூபா. 5,286,153 மற்றும் ரூபா. 38,458,768 ஆன தளபாடங்கள் இயந்திரங்கள் மற்றும் பெறுமானத் தேய்வு ரூபா 70,758,133 ஆன தொழிற்பாட்டு நட்டத்திற்கு காரணமாக அமைந்துள்ளதென பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) தெரிவித்தார்.<br><br>அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் 2022ஆம் ஆண்டுக்கான பணி முற்பணக் கணக்கில் பதிவாகிய ரூ.70,758,133 ஆன அங்கீகரிக்கப்படாத தொழிற்பாட்டு இழப்பு பற்றி உரிய திணைக்களம் முன்வைத்த காரணிகளை / விடயங்களை பரிசீலித்த பின்னர், அந்தக் காரணிகள் / விடயங்கள் இழப்புக்கான காரணங்களாக இருக்கலாம் என்பதை குழு அவதானித்தது.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>2022 திசெம்பர் 31ஆந் திகதிக்கு அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணி முற்பணக் கணக்கு (31 003) அங்கீகரிக்கப்படாத தொழிற்பாட்டு இழப்பான ரூ.70,758,133 தொகைக்கு அனுமதி அளிக்கப்படுதல் வேண்டுமென அரசாங்க கணக்குகள் பற்றிய குழு பாராளுமன்றத்திற்கு விதப்புரை வழங்கியுள்ளது.<br><br>**2023ஆந் ஆண்டுக்காக அரசாங்க தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **ஏற்பாடுகளிலிருந்து நி.ஒ.66 விண்ணப்பப்படிவம் ஒன்றை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களப் பணிப்பாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்து தொழிற்பாட்டு இழப்பான ரூ 70,758,133/- ஆன தொகையை பதிவழிப்புச் செய்யத் தேவையான நிதி பெறப்பட்டுள்ளது. அதன்படி, இந்த அதிகாரமளிக்கப்படாத தொழிற்பாட்டு இழப்பை 2023 ஆம் ஆண்டில் பணி முற்பணக் கணக்கிலிருந்து பதிவழிப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிலையியற் கட்டளை 119(4)இன் கீழ் அமைச்சரின் பதில் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கடித இலக்கம் மற்றும் திகதி).** |
| 02 | **2021ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளும் அவற்றின் தற்போதைய நிலைமையும்** | அரசாங்க விலை மதிப்புத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள கட்டட மதிப்பீட்டுப் பெறுமதி ரூ 327,400,000 ஆகவிருப்பதுடன் (ACA-6) படிவத்தில் அதன் பெறுமதி ரூ 387,000,000 ஆகவிருந்ததால் ரூ 60,000,000 அளவில் மாறுபாடு காணப்படுவதை குழு அவதானித்தது. அரசாங்க விலை மதிப்புத் திணைக்களத்தால் 2015இல் வழங்கப்பட்டுள்ள விலை மதிப்பீட்டு அறிக்கையில் கட்டிடத்தின் பெறுமதியாக அதாவது தொழிற்சாலை அமைந்துள்ள காணியிலுள்ள கட்டிடம் ரூ 327,000,000 எனவும், தொழிற்சாலை ஊழியர்களின் உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்காக ரூ 60,000,000 எனவும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், அந்த அறிக்கையில் கொலன்னாவ நிறுவன |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | வளவில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டடங்களின் பெறுமதியை குறிப்பிடும்போது உத்தியோகப்பூர்வ இல்லம் என தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் பின்னர், விலைமதிப்பு திணைக்களத்தின் 2021.04.22ஆந் திகதிய மற்றும் SAV/MCES/2012/01ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அரசாங்க தொழிற்சாலை கொலன்னாவ ரூ 327,4000 எனக் குறிப்பிட்டு சரி செய்யப்பட்டுள்ளதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |
| 03 | **<u>2021ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளும் அவற்றின் தற்போதைய நிலைமையும்</u>** | 2021ஆம் ஆண்டில் பணிமுற்பண கணக்கிற்கு ஏற்புடையதாக ரூ. 53,161,909 ஆன பெறுமதியைக் கொண்ட கடன்படுநர்களைப் பதிவழித்தல் சம்பந்தமாக எத்தகைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் அந்த விடயம் கணக்காய்வுக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதை குழு அவதானித்தது.<br><br>2009ஆம் ஆண்டில் ஆவணப் பதிவற்ற ரூ 53 மில்லியன் வரையான கடன் மீதி தொடர்பில் குழு ஒன்றை நியமித்து, அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்திற்காக முன்னிலைப்படுத்தி இந்தக் கடன் பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரை</u>** |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | மேற்படி கடன் மீதியைப் பதிவழித்தல் சம்பந்தமாக பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 04 | **<u>தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவுக்கென தற்காலிக கட்டடமொன்றை நிர்மாணித்தல்.</u>** | தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவுக்காக தற்காலிக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தால் முன்னிலைப்படுத்தப்பட்ட ரூ 104,412,899 ஆன மதிப்பீட்டுக்கு இணங்கிய தபால் திணைக்களம் 2018 திசெம்பர் 31ஆந் திகதியன்று ரூ 3,795,000 ஐச் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், உத்தேச நிர்மாணத்தை மேற்கொள்ள உத்தேசித்திருந்த காணியில் உள்ள மண் அதற்குப் பொருத்தமற்றதென 2019 சனவரி 13ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததால், புதிதாக தயாரிக்கப்பட்ட திட்டவமைப்பின்படி வேறோர் இடத்தில் நிர்மாணத்தை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்து மீண்டும் 2019 மார்ச்சு 19ஆந் திகதி ரூ 10,710,572 ஆன தொகையும், 2020 மார்ச்சு 06ஆந் திகதி ரூ 7,694,000 ஆன தொகையுமாக தபால் திணைக்களத்திலிருந்து மொத்தமாக ரூ. 22,199,572 அறவிடப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31ஆந் திகதியில் 10% முன்னேற்றத்தை மட்டும் கருத்திட்டம் கொண்டிருந்ததால், |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | கருத்திட்டத்தை நிறைவுசெய்து ஒப்படைக்கவோ அல்லது பெற்றுக் கொண்ட பணத்தை மீளச் செலுத்தத் தவறியுள்ளமை குறித்து குழு கவனம் செலுத்தியது. நிர்மாணத்தை மேற்கொள்ள உத்தேசித்திருந்த காணி பற்றிய சிக்கல் தோன்றியுள்ளதால் நகர அபிவிருத்தி அதிகார சபை இற்றை வரை அந்தக் கருத்திட்டத்திற்கான அங்கீகாரத்தை வழங்கவில்லை என பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |
| 05 | **<u>மத்திய கலாசார நிதியத்திற்கு ரூ.32,391,346 பெறுமதிகொண்ட 191 மின்கம்பங்களை வழங்குதல்.</u>** | மத்திய கலாசார நிதியத்திற்கு ரூ 32,391,346 பெறுமதியான 191 மின் கம்பங்களை வழங்குவதற்காக 2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்ததோடு, 2022 திசெம்பர் 31ஆந் திகதியன்று ரூ 2,707,512 பெறுமதியான 17 மின் கம்பங்கள் மட்டும் தயாரிக்கப்பட்டிருந்ததால் பௌதீக முன்னேற்றம் 9 சதவீதமாகவும், எஞ்சியுள்ள சீனச்சட்டி மின் கம்ப பாகங்கள், கண்ணாடிப் பெட்டிகள் மற்றும் அலுமினிய பாகங்கள் போன்ற உதிரிப்பாகங்கள் 01ஆம் மற்றும் 06ஆம் இலக்கவேலைத் தளத்தில் பயனற்றதாக காட்டப்பட்டுள்ளதாவும் குழு அவதானித்தது.<br><br><u>விதப்புரை</u><br><br>மத்திய கலாசார நிதியமானது, நிதி இன்மையைத் தெரிவித்து எஞ்சிய உற்பத்திகளை பொறுப்பேற்கவில்லை என்றும், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | ஒப்படைக்கப்பட்ட 34 மின் கம்பங்களுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். எஞ்சிய உற்பத்திகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாக 2021ஆம் ஆண்டில் பணிமுற்பண கணக்கிற்கு ஏற்புடையதாக ரூ. 53,161,909 ஆன பெறுமதியைக் கொண்ட கடன்படுநர்களைப் பதிவழித்தல் சம்பந்தமான எத்தகைய அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் அந்த விடயம் கணக்காய்வுக்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதை குழு அவதானித்தது. |
| 06 | **<u>நீர்ப்பாசன திணைக்களத்தின் ஊவா குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கான மடைக் கதவுககளைப் பொருத்துதல்.</u>** | நீர்ப்பாசன திணைக்களத்தின் ஊவா குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கான மடைக் கதவுககளைப் பொருத்துவதற்கு ரூ 12,708,000ஆன மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொண்ட கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் சுமார் 20 % காணப்படுவது குறித்து குழு கவனம் செலுத்தியது. இந்தக் கருத்திட்டத்தின் முதல் கட்டப் பணியாக மடைக்கதவுகளை நிர்மாணித்து ஒப்படைத்துள்ளதாக பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |
| 07 | **<u>திணைக்களத்திற்குச் சொந்தமான 37 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாது குறைப் பயன்பாடுடையனவாக காணப்படுதல் .</u>** | திணைக்களத்திற்குச் சொந்தமான 37 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாது குறைப் பயன்பாடுடையனவாக காணப்படுதல் மற்றும் அந்த வளவினுள் அமைந்துள்ள 01றூட் 08.87 பேர்ச் நில விஸ்தீரணம் கொண்ட பீப்பாய் சாலையும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தொழிற்பாடற்ற நிலையில் காணப்படுதல் குறித்து குழு கேள்வி எழுப்பியது.<br><br>இந்த *சங்ஹிந்த* உத்தியோகபூர்வ இல்லங்கள் 120இல் பழுது பார்ப்புகளைச் செய்ய வேண்டி இருப்பதாகவும் குளியலுக்கான குழாய் வாய்மூடியில் தண்ணீர்க் கசிவு காணப்படுவதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. அதன்படி, இந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் வசிப்பதற்கு உகந்த நிலையில் இல்லை எனவும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் பழுது பார்ப்புப் பணிகள் ஒப்படைக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |
| 08 | **<u>அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் அமைந்துள்ள காணி உட்பட்ட திணைக்களத்திற்குச் சொந்தமான மொத்தமாக 24 ஏக்கர், றூட் 01, 1.87 பேச் கொண்ட மூன்று காணிகளுக்கு திணைக்களத்தின் வசம் காணி உறுதிகள் காணப்படாமை</u>.** | அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் அமைந்துள்ள காணி உட்பட்ட திணைக்களத்திற்குச் சொந்தமான மொத்தமாக 24 ஏக்கர், றூட் 01, 1.87 பேச் கொண்ட மூன்று காணிகளுக்கு திணைக்களத்தின் வசம் காணி உறுதிகள் இல்லை என்பதிலும், நில அளவை வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலாளர் மூலம் உரிமையை அத்தாட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதிலும் குழு கவனம் செலுத்தியது.<br><br>நகர அபிவிருத்தி அதிகார சபையில் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்ற 09 ஏக்கர் கொண்ட காணி துண்டு தவிர்ந்த, இக்காணியில் எஞ்சியுள்ள 15 ஏக்கரில் நில அளவை செய்யப்பட்டுள்ளதோடு அதற்குரிய காணி உறுதி பிரதேச செயலாளர் ஊடாக |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கிடைக்க வேண்டும் எனவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |
| 09 | <u>**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் மறுசீரமைப்புத் திட்டம்**</u> | அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் 2023 ஆம் ஆண்டில் சுமார் 226 மில்லியன் ரூபாவுக்கான வேலையைப் பூர்த்தி செய்திருப்பதாகவும், அதில் அண்ணளவாக சுமார் 50 % சதவீதம் திணைக்களத்திலுள்ள இணைந்த சேவை மற்றும் திணைக்கள பணியாளர்களின் சம்பளத்திற்காக செலவிடப்படுவதாகவும் அதன்படி, அரசாங்க தொழிற்சாலை திணைக்களத்தின் விளைவுப் பெருக்கம் திருப்தி அளிக்கக்கூடிய மட்டத்தில் இல்லையெனவும், உண்மையான பணியாட்டொகுதி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி சுமார் 50% மட்டுமே என்பதையும் குழு அவதானித்தது.<br><br>சமகாலத்தில் பொதுத் திறைசேரியின் அறிவுறுத்தல்களின்படி திணைக்கள மறுசீரமைப்புக்கான திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |

**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

***(2023.04.25, 2023.05.26 மற்றும் 2023.08.09ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டங்களில் வழங்கிய விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் முன்னேற்றம் மற்றும் 2022ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மீளாய்வு)***

**விசாரணை நடாத்தப்பட்ட திகதி – 2024 சனவரி 10**

**அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**

- மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு
- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
- தொழில் திணைக்களம்

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| ❖ ஓய்வூதியத் திணைக்களம் | | |
| 01 | **<u>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டபோது உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துதல் பற்றிய சிக்கல்.</u>**<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டபோது அதிகார சபைகளிலிருந்து உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்படுதலின் தற்போதைய நிலைமை பற்றி குழு வினவியது.<br><br>தாங்கள் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ள ஊழியர் சேமலாப நிதியிலிருந்து அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகையான 60%யும் அதற்குரிய வட்டியையும் மீளச் செலுத்திய பின்னர், ஓய்வூதியம் செலுத்தல் என்ற நிபந்தனை காரணமாக இதுவரை ஓய்வூதியம் பெறாத அலுவலர்கள் சம்பந்தமாக எடுத்துள்ள நடவடிக்கைகளின் தற்போதையை நிலைமையைத் தெளிவுப்படுத்துமாறு குழு வினவியது. | இன்றளவில் ஓய்வு பெற்றுள்ள 1079 அலுவலர்களது ஓய்வூதிய கோப்புகள் மீதான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி உள்ளது எனவும், அவற்றில் 246 கோப்புகள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஓய்வூதியத் திணைக்களம் 60% வட்டியை மீளச் செலுத்த தவறியதன் காரணமாக 42 கோப்புகளை நிராகரித்துள்ளதாகவும் மகளிர், சிறுவர் அலுவலர்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். மேலும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணியாற்றிய 3,101 அலுவலர்கள் தற்போது ஓய்வு பெற்றுள்ளதாகவும் அவர்களில் 2022 அலுவலர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்தப்படுவதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.<br><br>தாங்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்ட ஊழியர் சேமலாப நிதியத்தில் அரசாங்கத்தின் பங்களிப்பான 60% தொகையையும் அதற்குரிய வட்டியையும் மீளச் செலுத்திய பின்னர் ஓய்வூதியத்தை வழங்குதல் என்ற நிபந்தனை காரணமாக இதுவரை ஓய்வூதியம் பெறாதுள்ள அலுவலர்கள் சம்பந்தமாக காணப்படுகின்ற வழக்கொன்று 2024 சனவரி 08ஆந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் அந்த |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | வழக்கின் தீர்ப்பை அறிவித்தல் 2024 ஏப்பிறல் 02ஆந் திகதி வரை தவணை போடப்பட்டுள்ளதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.<br><br>இதற்குப் பின்னணியான விடயங்களை தெளிவுப்படுத்திய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சட்ட அலுவலர், வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 44( உ)(ii) பிரிவின் கீழ் அந்தந்த அதிகார சபைகளின் முந்திய சேவைக்காலத்துடன் திணைக்களத்திற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துகையில் இந்தச் சிக்கல் தோன்றியுள்ளதால், அத்தகைய அலுவலர்கள் ஏலவே அதிகார சபைகளில் சேவையாற்றியுள்ள காலத்திற்கு ஏற்பானதாக ஊழியர் சேமலாப நிதி நிலுவையிலிருந்து தொழில்கொள்வோரது பங்களிப்பான 12% ஐ மீள அரசாங்கத்திற்குச் செலுத்தக் கோரும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர், அவர்கள் 252/2015ஆம் இலக்க வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார். அந்த வழக்கின் மத்தியஸ்த தீர்ப்பில், 03/2008ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின்படி நிலுவையாக உள்ள விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகையை உரிய வட்டியுடன் செலுத்துதல் மற்றும் ஊழியர் சேமலாப நிதியை உத்தரவாதமாக முன்வைத்து கடன் பெறப்பட்டிருந்தால் அந்தக் கடனை மீளச் செலுத்துதல் போன்றவற்றை பணியாளர்கள் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஊழியர் சேமலாப நிதியில் எஞ்சியுள்ள மொத்த நிலுவையை அந்த ஊழியர்களுக்குச் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்த சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சட்ட அலுவலர், திணைக்களம் தாபிக்கப்பட்டதன் பின்னர் மேற்படி தீர்ப்பின்படி குறித்த மொத்த நிலுவை, சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். ஓய்வூதிய பிரமாணக் கோவையின் 48(3)ஆந் வாசகத்தின்படி அரசாங்கத்தின் பங்களிப்புத் தொகையாக செலுத்தப்பட்டுள்ள தொகையை அரசாங்கத்திற்கு மீளச் செலுத்த வேண்டுமென ஓய்வூதியத் திணைக்களத்தால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததாகவும், அந்த தீர்மானத்திற்கு எதிராக இந்த அலுவலர்கள் மீண்டும் நீதி மன்றத்தை நாடியதாகவும் தெரிவித்த பி.க.அ / கணக்கீட்டு அலுவலர், ஊழியர் சேமலாப நிதியின் அரசாங்க பங்களிப்புத் தொகையான 12% மற்றும் அதன் மீதான வட்டியை அரசாங்கத்திற்கு மீளச் செலுத்த வேண்டுமென அமைச்சரவையின் கொள்கை ரீதியான தீர்மானம் இன்றளவில் நடைமுறையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.<br><br>இந்தத் தொகையைச் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன 03/2019 சுற்றறிக்கைக்கு எதிராக சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தடையீட்டு எழுத்தாணைப் பெற விண்ணப்பித்துள்ளதால், அந்த விடயம் இன்றளவில் விசாரணையில் இருப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. சமுர்த்தி அபிவிருத்தி |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | திணைக்களம் மற்றும் மகளிர், சிறுவர் அலுவலர்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இந்த வழக்கின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதோடு ஓய்வூதிய பணிப்பாளர் தலைமை அதிபதி மற்றும் தொழில் திணைக்கள ஆணையாளர் தலைமை அதிபதி ஆகியோர் தரப்பினர்களாக பெயரிடப்பட்டுள்ளதாகவும் சட்ட அலுவலர் மேலும் தெரிவித்தார்.<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு ஓய்வூதியத்தைச் செலுத்துவதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட ஓய்வூதிய பிரமாணக் கோவையின் 48(3)ஆம் வாசகமானது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்திருந்து அரசாங்க சேவையில் இணைந்துகொண்ட அலுவலர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துதல் பற்றியது எனவும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியமானது ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் சமமானது என்பதால் அந்த வாசகம் இந்த அலுவலர்களுக்கு ஏற்புடையது என்பதே ஓய்வூதிய பணிப்பாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் எனவும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சட்ட அலுவலர் தெரிவித்தார். இந்த விடயம் சம்பந்தமாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் வினவியபோது, ஊழியர் சேமலாப நிதியம், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியம் போன்றன |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிதியங்கள் எனத் தெரிவிக்கும் கடிதமொன்றை தொழில் ஆணையாளர் தலைமை அதிபதி வெளியிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>உயர்நீதிமன்றத்தில் 252/2015 ஆம் இலக்கம் கொண்ட வழக்கின் மத்தியஸ்த தீர்ப்புக்கும் அது சம்பந்தப்பட்டதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்திற்கும் இடையில் காணப்படுகின்ற பிரச்சினைக்குரிய நிலை சம்பந்தமாக சட்டத்துறை தலைமை அதிபதியின் ஆலோசனை கோரப்பட்டுள்ளபோதும் இதுவரை அதற்கான பதில் கிடைக்கவில்லையென பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்கள அலுவலர்களைச் சந்தித்து கலந்துரையாடியதாகவும், நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்கு சம்பந்தமாக அவர்களுடைய கருத்துரைகளை தெரிவிக்காமையானது பொதுவான ஒரு நடைமுறை என்பதால் ஏற்பட்டுள்ள தாமதத்தில் அது தாக்கம் செலுத்தலாம் எனவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். சட்டத்துறை தலைமை அதிபதியால் வழக்கின் தரப்பினரான நிறுவனம் ஒவ்வொன்றிலிருந்தும் வழக்கின் உறுதிக் கூற்றுகள் பற்றிய அவதானிப்புகள் கோரப்படுமெனவும், மனு ஒன்றின் மூலமாக ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் தலைமை அதிபதி மற்றும் தொழில் ஆணையாளர் தலைமை அதிபதி ஆகியோரை இந்த வழக்கில் இணைத்துக் கொண்டதன் பின்னர் திருத்தப்பெற்ற |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தலைப்புக்காக (amended caption) சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்தால் அவ்வாறு கோரப்பட்ட அவதானிப்புகளை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் சமர்ப்பித்துள்ளதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். சட்டத்துறை தலைமை அதிபதி நீதிமன்றத்திற்கு மீண்டும் சமர்ப்பணத்தைச் செய்யவில்லை எனவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் மேலும் தெரிவித்தார். இந்த வழக்கின் பிரதிவாதியாக தன்னை நியமித்துள்ளதாக இதுவரை தெரியப்படுத்தவில்லையென இதன்போது தெரிவித்த ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் தலைமை அதிபதி நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கின் பிரதிநிதியைப் பெற்று அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்தார். இந்தப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின்படி செயலாற்றுதலே தனது பரிந்துரை எனவும், 2023.02.20ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து சேமலாப நிதியை உரிய வட்டியுடன் மீள அறவிட்டுக் கொண்டதன் பின்னர் ஓய்வூதியத்தை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஓய்வூதிய பணிப்பாளர் தலைமை அதிபதி மேலும் தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள் / விதப்புரைகள்</u>**<br><br>திணைக்களம் ஒவ்வொன்றும் இவ்விடயத்தில் பல்வேறு வரைவிலக்கணங்களை வழங்குவதாலும், சரியான முடிவு எடுக்கப்படாமையாலும் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br><br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | ஊழியர்கள் பாதிக்கப்படுவதாக குழு சுட்டிக்காட்டியது.<br><br>அமைச்சரவையின் மேற்படி கொள்கை ரீதியான தீர்மானம் மற்றும் உயர் நீதிமன்ற வழக்கிலக்கம் 252/2015இன் மத்தியஸ்த தீர்ப்பு விடயத்தில் செயலாற்ற வேண்டிய விதத்தை வினவி, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு சட்டத்துறை தலைமை அதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் பிரதியை 2024.01.11ஆந் திகதியளவில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறும், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டதால் அதையொட்டி விதப்புரை ஒன்றை துரிதமாக வழங்குதல் பொருத்தமானதெனத் தெரிவித்து அரசாங்க கணக்குகள் பற்றிய குழு ஊடாக சட்டத்துறை தலைமை அதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் குழு தெரிவித்தது.<br><br>**மேற்படி விடயம் குறித்து சட்டத்துறை தலைமை அதிபதிக்கு முன்னிலைப்படுத்தியுள்ள 2023.12.30ஆந் திகதிய கடிதத்தின் பிரதியானது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரது MSE/ACC/01/44 II ஆம் இலக்க மற்றும் 2024.01.11ஆந் திகதிய கடிதத்துடன் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பணிப்பின் பேரில் இதற்கான விதப்புரைகள் துரிதமாக மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைத்தல் பொருத்தமானதென தெரிவித்து அரசாங்க** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **கணக்குகள் பற்றிய குழுவின் செயலாளரது PAC/9/5/2024ஆம் இலக்க மற்றும் 2024.04.17 திகதிய கடிதம் சட்டத்துறை தலைமை அதிபதிக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.**<br><br>சேமலாப நிதியம் பற்றிய பொருளை விவரணம் செய்து தொழில் ஆணையாளர் தலைமை அதிபதியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 2023.09.14ஆந் திகதிய கடிதத்தின் பிரதியை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தவில்லை என்பதை அவதானித்த குழு, முறையான ஒருங்கிணைப்பைப் பேணத் தவறியுள்ளதன் காரணமாக இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்வதில் மேலும் தாமதம் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டி தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.<br><br>ஊழியர் சேமலாப நிதியம், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி மற்றும் அரசு பணிக்கான ஊழியர் சேமலாப நிதி பற்றி தெளிவுபடுத்திக் கொள்ளுதல் என்ற தலைப்பில், தொழில் ஆணையாளர் தலைமை அதிபதியால் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள இலக்கம் PB/பொது அறிவுறுத்தல்/1(iiஆந்தொகுதி) மற்றும் 2023.09.14ஆந் திகதிய கடிதத்தின் பிரதியை 2024.01.11ஆந் திகதியளவில் சட்டத்துறை தலைமை அதிபதிக்கும் குழுவுக்கும் பிரதி கொண்டதாக ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் தலைமை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | அதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு பி.க.அ / கணக்கீட்டு அலுவலருக்கு குழு விதப்புரை வழங்கியது.<br><br>**மேற்படி கடிதத்தின் பிரதியானது மகளிர் சிறுவர் அலுவலர்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரது MSE/ACC/01/44 II(தொகுதி) ஆம் இலக்க மற்றும் 2024.01.11ஆந் திகதிய கடிதமூலம் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.**<br><br>இந்த விடயம் சம்பந்தமாக விசாரணையில் உள்ள வழக்குக்கான சமர்ப்பிப்புகளுக்கு நடவடிக்கை எடுக்குமாறும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் தாபிக்கப்பட்டபோது அதிகார சபைகளிலிருந்து உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் எந்த ஊழியர் சேமலாப நிதியத்தை பிரதிநிதித்துவம் செய்தனர் என்பது பற்றிய தெளிவானதொரு அவதானிப்பை 2024.01.20 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு அனுப்பி வைக்குமாறும் தொழில் ஆணையாளர் தலைமை அதிபதிக்கு விதப்புரை வழங்கிய குழு, மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி ஆகியோருடன் இணைந்து இது சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கியது.<br><br>**தொழில் திணைக்களத்தின் தரவு முறைமையில் காணப்படுகின்ற** |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **தகவல்களுக்கு இணங்க, இந்த அலுவலர்களுக்கு 1958ஆந் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் இலங்கை மத்திய வங்கியால் கொண்டு நடத்தப்படுவதுமான ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புத் தொகையை வரவு வைக்க இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபை, சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை மலையக அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் பதிவு பெற்றுள்ளதாக குறிப்பிட்டு தொழில் ஆணையாளர் தலைமை அதிபதியின் இலக்கம் PB/பொது அறிவுறுத்தல்/ (iஆந் தொகுதி) இலக்க மற்றும் 2024.01.19ஆந் திகதிய கடிதம் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 02 | <u>அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி மீதான திருத்தம்</u><br><br>இன்றளவில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் புதிய பணியாட்டொகுதி மீதான திருத்தத்திற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளதால் அதற்கு அமைவாக பணியாட்டொகுதி சம்பந்தமாக காணப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளை தெளிவுபடுத்துமாறு குழு தெரியப்படுத்தியிருந்தது. | 2023.11.01 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட புதிய பணியாட்டொகுதி மீதான திருத்தத்திற்கு இணங்க ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு சம்பந்தப்பட்ட 06 நடைமுறைகளைத் திருத்தம் செய்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டியுள்ளதால், அதில் ஒரு நடைமுறை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் 03 நடைமுறைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் இன்றளவில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதாக பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இத்தகைய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | குறிப்பாக சமுர்த்தி முகாமையாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுகின்ற சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி குழு வினவியது.<br><br>. | உயர்வு நடைமுறைகளை தயாரிக்கும்போது தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து அவர்களது கோரிக்கைகளையும் உள்ளடக்கு வதற்கான உடன்பாட்டைப் பெற காலத்தை செலவிட நேர்ந்ததாகவும் அவர் தெளிவுபடுத்தினார். இன்றளவில் தயாரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுடன் சம்பந்தப்பட்ட பிற நடைமுறைகள் 02ம் 2024.01.12ஆந் திகதியளவில் நிறுவன பணிப்பாளர் தலைமை அதிபதியின் அங்கீகாரத்தைப் பெற ஆற்றுப்படுத்துவதாக தெரிவித்த பி.க.அ / கணக்கீட்டு அலுவலர், அதற்கான ஒரு கால வரம்பு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதன்படி நிறுவன பணிப்பாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக ஆற்றுப்படுத்த வேண்டிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு சம்பந்தப்பட்ட இரண்டு நடைமுறைகளுக்கு 2024.01.15ஆந் திகதிளவில் நிறுவன பணிப்பாளர் தலைமை அதிபதியின் சிபாரிசைப் பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்த்துள்ளதாகவும், 2024.02.01ஆந் திகதியளவில் இந்த ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தால் ஆட்சேர்ப்புக்கான பரீட்சை அறிவித்தல்களை வெளியிட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை தொடர உள்ளதாக பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | சமுர்த்தி முகாமையாளர் பதவி இதுவரை காலமும் அந்தப் பதவியை வகிப்பவர்களுக்குத் தனிப்பட்டதாக இருந்ததாகவும் புதிய பணிட்டொகுதி திருத்தத்திற்கு இணங்க, புதிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் சமுர்த்தி முகாமையாளர் பதவியல் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இதுவரை அப்பதவியின் கடமைகளை நிறைவேற்றி வந்த சமுர்த்தி முகாமையாளர்களுக்கான நேர்முக பரீட்சை நடத்தப்பட்டுள்ளதாகவும் அதன்படி, பதில் கடமைக்கான நியமன கடிதங்களை வழங்குவதற்குரிய திகதிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரை</u>**<br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளைத் தயாரித்து அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு பிரதி கொண்டதாக, அரசாங்க சேவை ஆணைக்குழு, பொது நிர்வாக உள்நாட்டுலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு துரிதமாக ஆற்றுப்படுத்துமாறு பி.க.அ / கணக்கீட்டு அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது.<br><br>புதிய பணியாட்டொகுதிக்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஏலவே காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மூலமாக மேற்கொள்ள வேண்டிய அனைத்து செயற்பாடுகள் பற்றிய விவரமான ஆவணம் ஒன்றை (அவ்வாறான ஒவ்வொரு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | செயற்பாட்டுக்கும் பொறுப்பு கூறவேண்டிய அலுவலர் யார், அவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் யாது போன்ற அத்துடன் இந்தச் செயற்பாடுகளை நிறைவேற்ற எதிர்ப்பார்க்கும் காலப்பகுதி பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை) 2024.01.20ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறும், பின்னர் ஒவ்வொரு மாதமும் 15ஆந் திகதியன்று செயற்பாடுகளின் முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுமாறும் பி.க.அ / கணக்கீட்டு அலுவலருக்கு குழு விதப்புரை வழங்கியது.<br><br>**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தகை அமைச்சின் செயலாளரது MSE/ACC/01/44 IIஆந் தொகுதி மற்றும் 2024.01.22ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பதவி ஒவ்வொன்றுக்குமான ஆட்சேர்ப்பு / பதவி உயர்வுக்குரிய காலவரம்பு அடங்கிய அறிக்கை குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதோடு 2024.02.15, 2024.03.15, 2024.04.15, 2024.05.15 மற்றும் 2024.06.15ஆந் திகதின்று அதன் முன்னேற்றம் முறையாக அதே இலக்கம் மற்றும் 2024.02.19, 2024.03.20, 2024.04.25, 2024.06.25 மற்றும் 2024.06.24ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>சமுர்த்தி வங்கிளை கணினிமயமாக்கல் திட்டத்தின் தற்போதைய நிலை</u>** | தற்போது மொனராகலை ரதுகல வங்கிக் கிளை தவிர்ந்த ஆரம்பத்தில் திட்டமிட்ட 1089 சமுர்த்தி வங்கிகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளதென்றும், |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | சமுர்த்தி வங்கிகளை கணனி மயமாக்கலின் தற்போதைய நிலை குறித்து குழு வினவியதுடன், கணக்காய்வு நடவடிக்கைகள் முடிவடைந்து 100 வங்கிகள் மாத்திரமே கணினி முறைமையில் இணைக்கப்பட்டுள்ளதை குழு அவதானித்துள்ளது.<br><br>சமுர்த்தி வங்கிகளை கணினி மயமாக்குவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட செயற்திட்டத்தின் குறிப்பிட்ட சில பணிகள் 31.12.2023 வரை பூர்த்தி செய்யப்படவில்லையென்றும், கணினி முறைமை இலக்கு நிலைக்கு மேம்படுத்தப்படவில்லையென்றும், கையியக்க (Manual) செயல்பாட்டில் மிகுதி சரிபார்த்தல் சமநிலையில் இல்லாத சந்தர்ப்பங்கள் இருப்பதாகவும் பிரதி கணக்காய்வாளர் குழுவின் முன் தெரிவித்தார்.<br><br>கணனி நுட்பங்களைப் பயன்படுத்தி சமுர்த்தி வங்கிகளின் விவகாரங்களை கணக்காய்வு செய்வதற்கான வசதிகள் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்றும், இந்த கணனி முறைமையில் அதற்காக கணக்காய்வு தடம் (audit trail) இருப்பதாக கூறிய பிரதி கணக்காய்வாளர் நாயகம், இந்த முறைமை அந்த இலக்கை இன்னும் | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 05 வங்கிகள் இன்னும் கணினிமயமாக்கப்படவில்லையென்றும் பி.க.அ/க.அ தெரிவித்தார். 2023 டிசம்பரில், அனைத்து கணக்கு வரவுகள், வட்டி வரவுகள் மற்றும் இறுதிக் கணக்கு தயாரிப்புகள் போன்ற பணிகள் கணினி மென்பொருளைப் பயன்படுத்தி செய்யப்பட்டதாக பி.க.அ/க.அ தெரிவித்தார்.<br><br>கையியக்க (Manual) செயல்பாட்டை நிறுத்துவதற்காக 500 வங்கிகள் விண்ணப்பித்தபோதிலும், செயற்திட்டத்தின் படி கணினிமயமாக்கும் பணிகள் நடைபெற்றாலும், கணக்காய்வு நடவடிக்கைகள் மற்றும் கையியக்க (Manual) செயல்பாட்டின் தவறுகளைத் திருத்தும் பணிகள் காரணமாக, இதுவரை 100 வங்கிகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்க முடிந்ததென்று பி.க.அ/க.அ தெரிவித்தார்.<br><br>இப்பணிக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தினூடாக அனுமதியை வழங்குவதற்கு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும், சில கால அவகாசம் தேவைப்படுவதால், இப்பணியை துரிதப்படுத்துவதற்கு கணக்காய்வாளர்கள், தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் வங்கி கண்காணிப்பு அலுவலர்கள் உள்ளடங்கிய மாவட்டக் குழுவை நியமித்து அதன் மூலம் உரிய அனுமதியை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | அடையவில்லை என்றும் தெரிவித்தார். | சமுர்த்தி வங்கிகளின் முழு செயல்முறையையும் கணினிமயமாக்கல்/நிகழ்நிலை ஊடாக செய்வதற்கானதொரு மென்பொருள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளதென்றும், கூகுள் ஷீட் (Google Sheet) மூலம் வங்கி கணினிமயமாக்கல் பணியின் மாதாந்த முன்னேற்றத்தை இற்றைப்படுத்துமாறு மாவட்ட அளவில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பி.க.அ/க.அ தெரிவித்தார். சில வங்கிகளில் ஆரம்பத்திலிருந்து நிலவும் தனிநபர் மிகுதி சரிபார்ப்பு தொடர்பான பிரச்சினைகள் இந்த மென்பொருளை நடைமுறைப்படுத்துவதற்கோ அல்லது வங்கியின் அன்றாட நடவடிக்கைகளுக்கோ தடையாக இல்லை என்றும், நாடு முழுவதுமுள்ள வங்கிகளில் இது வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br>அனைத்து சமுர்த்தி வங்கிகளும் கையியக்க (Manual) செயல்பாட்டிலிருந்து நீக்கப்பட்டு முழுமையாக கணினி முறைமையிலேயே இயக்க வேண்டுமென்று வலியுறுத்திய குழு, சமுர்த்தி வங்கிகளின் கணினிமயமாக்கலை துரிதப்படுத்த கணக்காய்வு அலுவலர்கள், தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள், வங்கி மேற்பார்வை அலுவலர்கள் உள்ளடங்கிய மாவட்ட குழுக்களை உடனடியாக நியமித்து, ஒவ்வொரு வங்கிக்கும் கணக்காய்வு உட்பட அதன் செயல்பாடுகளை முழுமையாக கணினிமயமாக்குவதற்கு காலக்கெடுவை வழங்கி அது குறித்த அறிக்கையை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழுவினால் பி.க.அ/க.அ விற்கு பரிந்துரைக்கப்பட்டது.<br><br>நடைமுறையில், சமுர்த்தி வங்கி அலுவல்களுக்கு தொடர்பான கணினி முறைமையை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதனால் அந்தப் பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமென்றும், அனைத்து சமுர்த்தி வங்கிகளினதும் கையியக்க (Manual) செயல்பாடுகளை முற்றாக நீக்கி கணினி முறைமையினூடாக வங்கிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியுள்ளது.<br><br>மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2024.04.30 திகதியிட்டப்பட்ட இலக்கம் MSE/ACC/01/44 தொகுதி II கடிதத்தின் மூலம் குழுவின் அறிவுறுத்தல்களின்படி மாவட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், முழுமையான கணினிமயமாக்கல் தொடர்பான அறிக்கையொன்று விரைவில் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 04 | **<u>340 கணினிகளை கொள்வனவு செய்யும் போது சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திற்கு சுமார் 11 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுதல். (சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் 2022-154(6) அறிக்கையின் 3.4 ஆம் பந்தி)</u>** | இந்த விலைமனுக்கோரல் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும், அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றால் மதிப்பீடு செய்யப்பட்டதாகவும் பி.க.அ/க.அ குழுவின் முன் தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | 340 கணினிகளை கொள்முதல் செய்யும்போது, முதல் கொள்முதலில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த பெறுமதியுடைய விலைமனுக்கோரலுக்கு பதிலாக மீள கொள்முதல் செய்து தெரிவு செய்யப்பட்ட வழங்கீட்டாளரிடமிருந்து அலகொன்றுக்கு 149,500 ரூபா அதிக விலைக்கு கணினிகளை கொள்வனவு செய்திருத்தல் தொடர்பில் கவனம் செலுத்திய குழு, அதற்கான காரணங்கள் குறித்து வினவியது. | அதில் விலைகளை வழங்கிய உள்ளூர் வழங்கீட்டாளர் ஒருவரால் உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் கொள்கைக்கு அமைச்சரவையின் ஒப்புதலின் பேரில் வெளியிடப்பட்ட இலக்கம் 03/2020 அரச நிதி சுற்றறிக்கையை சமர்ப்பித்ததாக தெரிவித்த பி.க.அ/க.அ, மேற்படி சுற்றறிக்கையின் மூலம் உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தும் உற்பத்தியாளர்களுக்கு 30% சலுகை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் பெறுகைக் குழுவினால் அவ்வழங்கீட்டாளரை தெரிவுசெய்யுமாறு பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.<br>விலை கோரும் போது இந்த சுற்றறிக்கை வெளியிடப்படாத காரணத்தால், பெறுகைக் குழுவின் ஒரு உறுப்பினர் இந்த முடிவுக்கு இணங்கவில்லை என்றும் இரண்டு உறுப்பினர்கள் உரிய பரிந்துரையை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். பெறுகைக் குழுவின் பரிந்துரையை அமைச்சின் செயலாளர் அங்கீகரிக்கவில்லையென்றும், மீளவும் விலைமனுக்கோரி கொள்முதல் செய்ய தீர்மானித்துள்ளதாகவும், அதற்கமைய மீள விலைமனு கோரி கொள்முதல் செய்யும்போது மேலே குறிப்பிட்ட உள்ளூர் உற்பத்தியாளரை தெரிவுசெய்துள்ளதாகவும் பி.க.அ/க.அ மேலும் கூறினார்.<br>இந்த பெறுகைக் குழு பொறுப்பற்ற முறையில் செயற்பட்டுள்ளதாகவும், அதன்மூலம் 11 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் குழு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும், இந்த |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கணிணிகளை கொள்வனவு செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே அதற்குத் தேவையான பாகங்கள்/உதிரிப் பாகங்கள் 2021 ஆம் ஆண்டு கொள்வனவு செய்து செயலிழந்த நிலையில் வைத்திருந்ததாகவும் தெரியவந்தது.<br>முதல் கொள்முதலில் அரச நிதிச் சுற்றறிக்கை இல. 03/2020 இன் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட குறைந்த விலைமனுக்கோரலுக்குப் பின்னுள்ள விலைமனுக்கோரல் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின்படி மீள் கொள்முதல் செய்யும்போது சமர்ப்பிக்கப்பட்ட குறைந்த விலைமனுக்கோரல் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த விலைமனுகோருபவர் முதல் கொள்முதலில் தெரிவு செய்யப்பட்டவரே என்று கூறிய பி.க.அ/ க.அ, இந்த கொள்முதலுக்கான அழைப்பிதழ்களுக்கு இடையே உள்ள கால இடைவெளி காரணமாக கணினிகளின் விலைகளில் மாற்றம் இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்டார்.<br><br>விலைமனுகோரும் போது வெளியிடப்படாத ஒரு சுற்றறிக்கை மேற்படி கொள்முதலுக்கு கருத்திற்கொள்ளப்படாதென்றும், கொள்முதல் தொடர்பாக விளக்கம் தேவைப்படும்போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) பெறுகைக் குழு அல்லது பெறுகை ஆணைக்குழுவிடம் ஆலோசனை பெற்றிருக்க வேண்டுமென்றும் அரச நிதித் திணைக்களம் தெரிவித்தது.<br>தற்போது பிரதேச செயலகங்களில் சமூக பாதுகாப்பு விடயங்களுக்காக மேற்படி |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | கொள்வனவு செய்யப்பட்ட கணினிகள் எவ்வித தொழிநுட்ப பிரச்சினைகளுமின்றி பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் பி.க.அ/க. தெரிவித்தார்.<br>மேற்படி கணனி கொள்வனவு தொடர்பாக திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு மூலம் தெரியவந்த விடயங்கள் குறித்து குழு வினவியதோடு, முதல் கொள்வனவில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு முறையான மதிப்பீட்டைச் செய்துள்ளதாகவும், பெறுகைக் குழுவின் மூலம் அரச நிதிச் சுற்றறிக்கை இல. 03/2020 தொடர்புபடுத்தியமையினால் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளதாகவும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br>இந்த கணினி கொள்முதல் நடவடிக்கையால் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவதால் மேலும் இது தொடர்பாக ஆராய்ந்து இந்தக் கணினிகளை கொள்வனவு செய்வது தொடர்பான பெறுகை குழுவில் உறுப்பினர்களாக செயற்பட்ட அலுவலர்களின் பெயர்கள், மேற்படி குழு அளித்த அவதானிப்புகள் மற்றும் இந்த விவகாரம் தொடர்பாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் அவதானிப்புகள் உள்ளிட்ட கூடுதல் தகவல்களுடன் கூடிய அறிக்கையொன்றை 2024.02.10க்கு முன் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/ க.அ விற்கு குழு பரிந்துரைத்தது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2024.02.09 திகதியிட்ட இல. MSE/ACC/01/44 தொகுதி II கடிதத்தின் மூலம் சம்பந்தப்பட்ட கொள்முதல் குறித்த விரிவான அறிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது.** |
| 05 | **<u>வாழ்வாதாரத்திற்காக சமுர்த்தி பெறுநர்களுக்கு மீன்பிடி வலைகளை வழங்கும் போது "தமன" பிரதேச செயலகத்தில் நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கப்பெறும் அறிக்கைகள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்.</u>**<br><br>இந்தச் சம்பவம் கடந்த அரசாங்கத்தில் கணக்குக் குழுக் கூட்டங்களிலும் விரிவாகப் பேசப்பட்டதைச் சுட்டிக்காட்டிய குழு, மேற்படி முறைகேடுகளுக்கு பொறுப்புகூற வேண்டிய அலுவலர்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி வினவியது. | இது தொடர்பில் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணையின் ஊடாக 2021ஆம் ஆண்டு வாழ்வாதார அபிவிருத்திக்காக தமன பிரதேச செயலகத்திற்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பிரதேச செயலாளரால் அதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிக்காமல் பெறுகைக் குழுவை மாத்திரம் நியமித்திருப்பது தெரியவந்ததாக பி.க.அ/ க.அ தெரிவித்தார்.<br><br>இச்சம்பவத்துடன் தொடர்புடைய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலர்களான திட்ட முகாமையாளர் மற்றும் தலைமையக முகாமையாளர் ஆகியோர் மீனவர்களைத் தெரிவு செய்து மீன்பிடி வலைகளை வழங்கியுள்ளதாகவும், அதன்படி, உரிய ஆவணங்களை பராமரிக்காதது தொடர்பில் மேற்படி அதிகாரிகளிடம் விளக்கம் கோரி, ஒழுக்காற்று தண்டனையாக இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் பி.க.அ/ க.அ தெரிவித்தார்.<br><br>**<u>அவதானிப்புகள்/விதப்புரைகள்</u>**<br><br>இங்கு குறித்த அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ஒழுக்காற்றுத் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | தண்டனையானது ஒரு நாள் சம்பளத்தை இடைநிறுத்துவது மற்றும் எச்சரிப்பது என்பதை குழு அவதானித்துள்ளது. இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டங்களில் இவ்விடயம் கலந்துரையாடப்பட்ட பின்னரும், மேற்படி மீன் வலை விநியோகப் பணி முறையாக நடைபெறாமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மீன் வலைகள் முறையான விவரக் குறிப்பை பூர்த்தி செய்யாமை போன்ற பிரச்சினைகள் இருப்பதாகவும் இதில் தெரியவந்தது.<br><br>இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு குறித்த பிரதேச செயலாளரிடம் உள்ளதால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பி.க.அ/ க.அ தெரிவித்தார்.<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் அலுவலர்களின் முறைகேடான செயற்பாடுகளுக்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடைய முடியாதென வலியுறுத்திய குழு, இந்த சம்பவம் தொடர்பில் குறித்த சமுர்த்தி முகாமையாளர் நோக்கத்துடன் கூடியதாக பொறுப்பேற்க வேண்டுமெனவும், பொருட்களை பெற்று சுமார் 02 வருடங்கள் வரை பொருட்களை விநியோகம் செய்யாமை, பொருட்களுக்கு முறையான விவரக் குறிப்பு வழங்காமை, கருத்திட்ட செயற்பாடுகள் தொடர்பில் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | பின்னாய்வு செய்யாமை போன்றவற்றை சுருக்கப் பணிகளாக ஒழுக்காற்று அதிகாரியினால் கணிக்கப்பட்டமையினை அவர் சுட்டிக்காட்டினார்.<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சுமார் 163 முறைகேடு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அவற்றுக்காக நடத்தப்பட்ட விசாரணைகள் பக்கச்சார்பான முறையில் நடத்தப்பட்டதாகவும், கடுமையான துர்நடத்தைகளுக்கு சிறு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது.<br><br>இது தொடர்பில் அவதானம் செலுத்திய குழு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களின் முறைகேடுகள் சம்பந்தமாக நடத்தப்படும் விசாரணைகள் தொடர்பில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு போதிய இடையீடுகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.<br><br>தமன பிரதேச செயலகப் பிரிவின் சமுர்த்தி பெறுநர்களுக்கு மீன்பிடி வலைகளை வழங்கும் போது ஏற்பட்ட பிரச்சினைக்குரிய சம்பவம் தொடர்பில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் மட்டத்தில் மீள் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும்,<br><br>குறித்த பிரச்சினைக்குரிய மீன்பிடி வலைகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கையின் ஆரம்பம் முதல் ஒவ்வொரு படி/பணிகள் மற்றும் அது தொடர்பான பொறுப்புகள் வழங்கப்பட்ட |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தமன பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்ப முடியுமான தகவல்கள் உள்ளிட்ட அறிக்கையை அமைச்சின் செயலாளரின் அவதானிப்புகளுடன் 2024.01.16 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் பி.க.அ/ க.அ விடம் குழு பரிந்துரைத்தது. இது தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்பட்டால் கடற்றொழில் அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு குழு அறிவுறுத்தியுள்ளது.<br><br>**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2024.01.16 திகதியிட்ட இல. MSE/ACC/01/44 தொகுதி II கடிதத்தின் மூலம் மேற்படி தகவல் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதுடன், அமைச்சு மட்டத்தில் முதற்கட்ட விசாரணை நடத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**<br><br>**இந்த விடயம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காக அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரைகளின்படி 2024.01.26 ஆம் திகதியிட்டு பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டதோடு, அவ்வமைச்சின் செயலாளரின் 2024.03.08 திகதியிட்ட இல. HAF/INV/22/2023-** |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **11(09) கடிதத்தின் மூலம் இந்த விடயம் தொடர்பில், பெறுகைக் குழு முடிவெடுப்பதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து தமன பிரதேச செயலகத்தின் உரிய உத்தியோகத்தர்களுக்கு சுறுக்க ஒழுக்கக்கோவையின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**<br><br>**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2024.08.20 திகதியிட்ட இல.MSE/ACC/01/44 தொகுதி I கடிதத்தின் மூலம் அவ்வமைச்சு மட்டத்தில் இச்சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையின் அறிக்கையின்படி சம்பவத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதல் அட்டவணையில் குற்றப்பத்திரங்களை வெளியிடுவதற்குப் போதுமான காரணங்கள் அவதானிக்கப்படவில்லையென்றும், அந்த உத்தியோகத்தர்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடைய முடியுமென்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.** |
| 06 | **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதியங்கள் கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படாமை** | இந்நிதியங்கள் குறித்து அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு அரச நிதி திணைக்களம் அவ்வப்போது நினைவூட்டல் கடிதங்களை அனுப்பி வருகின்ற போதிலும், சமுர்த்தி |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | திவிநெகும சட்டத்தின் 45ஆவது பிரிவின் கீழ் நிறுவப்பட்ட திணைக்கள நிதியத்திற்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படுவதில்லையென குழுவில் தெரியவந்துள்ளது. வாழ்வாதார அபிவிருத்தி நிதியம் இதுவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லையெனவும், அதேபோல் முறையான அனுமதி பெறாத 15 நிதியங்கள் உள்ளதாகவும், அவற்றில் 09 நிதியங்கள் செயற்படாமல் இருப்பதையும் குழு அவதானித்துள்ளது. திறைசேரியால் வழங்கப்பட்ட பணம் மற்றும் உறுப்பினர்களின் கட்டாய வைப்புத்தொகையிலிருந்து அமைக்கப்பட்ட இந்த நிதியம், இதுவரை திறைசேரியின் கட்டுப்பாட்டிலோ அல்லது கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்விற்கோ உட்படவில்லையென்றும், சுமார் 48 பில்லியன் பெறுமதியான இந்த நிதியங்கள் நிதிக் கட்டுப்பாட்டில் இல்லையென்றும் தெரியவந்துள்ளது. இந்த நிதியத்தை சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடப்பட்டதாக பிரதி | அபிவிருத்தி திணைக்களம் இரண்டு திணைக்கள நிதியங்களுக்கு மாத்திரம் ஓரளவு பதிலளித்துள்ளதாகவும் புதிய இரண்டு நிதியங்களை அமைப்பதற்கு ஒப்புதல் கோரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிகளில் 14.5 பில்லியன் ரூபா பெறுமதியான சமூக பாதுகாப்பு நம்பிக்கை நிதியத்தின் இறுதிக் கணக்குகள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு அரசாங்க கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுமென பி.க.அ/ க.அ தெரிவித்தார்.<br><br>வாழ்வாதார அபிவிருத்தி சுழல் நிதியம் 2007 – 2013 காலப்பகுதியில் திறைசேரி மூலம் பயனாளிகளுக்கு வழங்கிய கடன்களில் 50% வசூலித்து ஆரம்பிக்கப்பட்டதாகவும், இதனை நிதியமாக பெயரிடுவதில் சிக்கல் இருப்பதாகவும் தெரிவித்த பி.க.அ/ க.அ, அனைத்து சமுர்த்தி வங்கி கிளைகளுக்கும் அதன் சொந்த கணக்கு இருப்பதாகவும், அதன் பணம் சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக கடன்களை வழங்குவதற்கு பயன்படுத்தப்படுவதாகவும், அது திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுக்கு உட்பட்டதென்றும் அவர் கூறினார்.<br><br>07 திணைக்கள நிதியங்களுக்கு மேலதிகமாக இருப்பதாக கூறப்பட்ட 15 நிதியங்கள் தற்போது நிதியங்களாக செயற்படுவதில்லையென்றும், அவை வங்கி முகாமைத்துவ சபையினால் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டார். | நிருவகிக்கப்படுவதாகவும் பி.க.அ/ க.அ தெரிவித்தார்.<br><br>இந்த நிதியங்கள் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுக்குமாறு அரச நிதித் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கிய குழு, சமுர்த்தி வங்கிகளூடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நிதியங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டது.<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான 48 பில்லியன் ரூபா பெறுமதியான நிதியில் 43 பில்லியன் ரூபா சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்பு என்றும், கணக்கு வைத்திருப்பவர்களின் தேவைக்கு ஏற்ப, அப்பணம் விடுவிக்கப்பட வேண்டுமென்றும், அதன்படி, 5 முதல் 6 பில்லியன் ரூபா உண்மையில் மற்ற நிதிகளாக இருப்பதாக பி.க.அ/ க.அ தெரிவித்தார்.<br><br>சமுர்த்தி வங்கி முறைமையில் திரவத்தன்மை குன்றிய வங்கிகள் தற்போது இல்லையென்று தெரிவித்த பி.க.அ/க.அ, கட்டாய சேமிப்பை திரும்பப் பெறுவதற்கான வயது எல்லை 70 வயதிலிருந்து 60 ஆகக் குறைக்கப்பட்டதால் சமுர்த்தி வங்கிகளிலிருந்து பணம் பெறப்படுவதாக அதிகரித்துள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.<br><br>இதன்படி, சமுர்த்தி வங்கிகளிடமிருந்து சுமார் 600 மில்லியன் ரூபாவை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | வழங்குமாறு கோரிக்கைகள் கிடைத்துள்ளதாகவும், அந்த பணத்தை பயனாளிகளுக்கு தேவையான படி வழங்குவதற்காக அந்த வங்கிகளுக்கு அனுப்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். கட்டாய சேமிப்பிலிருந்து ஊழியர் வீட்டுக்கடன்களுக்காக 476 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக குழு சுட்டிக்காட்டியுள்ளது.<br><br>கட்டாயச் சேமிப்பிலிருந்து உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கப்படுவதில்லையென்றும், இந்தக் கடன்கள் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மூலம் அவற்றின் நிதியங்களிலிருந்து வழங்கிய "நிலதரு கடன்கள்" என்றும் பி.க.அ/ க.அ கூறினார்.<br><br>இந்த நிதியங்கள் சமுர்த்தி பெறுநர்களின் நிதித் தேவைகளுக்கு திறம்பட பயன்படுத்த வேண்டுமென்றும், மிக வறிய மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவும் இந்த நிதியை திறம்பட பயன்படுத்த வேண்டுமென்றும் குழு வலியுறுத்தியது.<br><br>அதற்காக, 2024 ஆம் ஆண்டில் பல புதிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுமென்றும், எதிர்காலத்தில் அதிக கடன் வழங்க எதிர்பார்க்கப்படுகிறதென்றும், வங்கிக் கடன் பெற முடியாத சமுர்த்தி பெறுநர்களுக்கு சமூகம் சார்ந்த அமைப்புகளூடாக "அருணலு" கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் பி.க.அ/ க.அ இங்கு தெரிவித்தார். |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | **விதப்புரைகள்**<br><br>இந்த நிதியங்கள் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறுப்பேற்க வேண்டுமென்று வலியுறுத்திய குழு, உற்பத்தித்திறனற்ற நிதியங்களை பயன்பாட்டிலிருந்து நீக்குமாறும் அறிவுறுத்தியது.<br><br>சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து நிதியங்கள் தொடர்பாகவும், நிதியத்தின் பெயர், நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி, நிதியத்தை நிறுவியதன் நோக்கம், நிதியத்தின் வங்கிக் கணக்குகளின் விவரங்கள், நிதியத்தின் தற்போதைய இருப்பு, நிதியத்தின் பொறுப்புதாரி யார்? காசோலைகளில் கையெழுத்திட அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பது யாருக்கு? நிதியம் நிறுவப்பட்டுள்ள சட்டப் பின்னணி, நிதியம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட அறிக்கையை 2024.02.10 க்கு முன் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/ க/அ விற்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2024.02.09 திகதியிட்ட இல.MSE/ACC/01/44 தொகுதி II கடிதத்தின் மூலம் மேற்படி அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.** |
| 07 | **<u>“அஸ்வெசும” திட்டத்தில் சேராத சமுர்த்தி பெறுநர்களை</u>** | 1,638,000 ஆன மொத்த சமுர்த்தி பயனாளிகளில் "அஸ்வெசும" |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | <u>**வலுவூட்டுவதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்.**</u> | கொடுப்பனவை பெறாத எண்ணிக்கை அண்ணளவாக 8 இலட்சம் ஆகுமென பி.க.அ/க.அ தெரிவித்தார்.<br><br>“அஸ்வெசும” திட்டத்தின் கீழ் ஏழைகள் மற்றும் மிக ஏழ்மையானவர்களென வகைப்படுத்தப்பட்ட பயனாளிகளிடமிருந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்வதற்கான சம்மதத்தைப் பெறுவதற்கான சுற்றறிக்கைகளை வெளியிடுதல், இதற்காக தொடர்புபடும் வணிக வங்கிகளுடன் கலந்துரையாடல் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் பங்களிக்க விருப்பம் தெரிவிக்கும் "அஸ்வெசும" பயனாளிகளின் தகவல்களைச் சேகரிப்பது போன்ற பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 2024 ஜனவரி மாத இறுதியில் அப்பணிகளை நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாக பி.க.அ/க.அ தெரிவித்தார். 8 இலட்சம் வறிய குடும்பங்கள் மற்றும் 4 இலட்சம் மிகவும் வறிய குடும்பங்களென 12 இலட்சம் குடும்பங்களை வலுவூட்டும் வேலைத்திட்டத்தைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையின் தீர்மானத்தின்படி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், அதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்று தயாரிக்கப்பட்ட திட்டம் அமைச்சரவையின் ஒப்புதலுக்கு உடனடியாக அனுப்பப்படுமென்றும் பி.க.அ/ க.அ தெரிவித்தார்.<br><br>கடந்த அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டங்களிலும் இந்த வேலைத்திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டிய குழு “அஸ்வெசும” கொடுப்பணவு |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | கிடைக்கப்பெறாத சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்கும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் முன்னுரிமை வழங்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்தியது.<br><br>**<u>அவதானிப்புகள்/விதப்புரைகள்</u>**<br>"அஸ்வெசும" கொடுப்பணவு பெறாத சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்ட சரியான வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று குழு இங்கு வலியுறுத்தியது.<br><br>"அஸ்வெசும" கொடுப்பணவு பெறாத சமுர்த்தி பயனாளிகளை கிராம அலுவலர் பிரிவுகளின் படி பல்வேறு நிலைகளின் கீழ் வகைப்படுத்தி, அதற்கேற்ப ஒவ்வொரு வகைக்கும் தகுதியான திட்டங்களைத் தயாரிக்குமாறு பி.க.அ/ க,அ விற்கு குழு பரிந்துரைத்தது.<br><br>**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் 2024.04.30 திகதியிட்ட இல.MSE/ACC/01/44 தொகுதி II கடிதத்தின் மூலம் மேற்படி அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.** |

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கம்**

**(2019, 2020 மற்றும் 2021 ஆம் நிதியாண்டுகளின் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மதிப்பாய்வு)**

**விசாரிக்கப்பட்ட திகதி – 2024 ஜனவரி 11**

**அழைக்கப்பட்ட நிறுவனங்கள்**

- ❖ கமத்தொழில் அமைச்சு
- ❖ கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கம்

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| 01 | **<u>இறக்குமதி செய்யப்பட்ட காளை விந்து பற்றிய தகவல்கள் திணைக்களதில் காணப்படாமை</u>** | **<u>விதப்புரைகள்</u>**<br>அரச மற்றும் தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்படும் காளை விந்துகளின் அளவு, தரம், இருப்பை பராமரித்தல், அதை தேசிய புள்ளிவிவரங்களில் சேர்ப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் மற்றும் அவற்றின் வெற்றிகரமான நிலையை பின்தொடர்வதற்குப் பொருத்தமான வேலைத்திட்டத்தைத் தயாரித்து அது பற்றிய அறிக்கையொன்றை 2023 ஆகஸ்ட் 07 ஆம் திகதிக்குள் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு கமத்தொழில் அமைச்சின் பி.க.அ/ க.அ விற்கு குழு பரிந்துரைத்தது.<br>குழுவில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின்படி, கால்நடை அலுவலகங்களால் நேரடியாக மையப்படுத்தப்பட்ட முறைமைக்கு தகவல்கள் உள்ளிடப்படுகின்ற அதேவேளை அந்தத் தகவல்கள் தொடர்பில் மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட பிரதிப் பணிப்பாளர்களின் விழிப்புணர்வும் முக்கியமானதென்பதால் இது தொடர்பில் தேடிப்பார்க்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி.க.அ/ க.அ விற்கு குழு அறிவுறுத்தியுள்ளது. |
| 02 | **<u>புதிதாக பதிவுசெய்யப்படும் கால்நடைப் பண்ணைகள் மற்றும் மூடப்பட்டு வரும் கால்நடைப் பண்ணைகள் பற்றிய தரவுகள் மாகாண அலுவலகங்களில் காணப்படாமை</u>** | புதிதாக பதிவு செய்யப்படும் கால்நடைப் பண்ணைகள் மற்றும் மூடப்பட்டு வரும் கால்நடைப் பண்ணைகள் பற்றிய சரியான தரவுகளை உள்ளடக்கியதொரு நிகழ்நிலை தரவு முறைமையை(Online Information System) துரிதமாக தயார் செய்யுமாறும், இதனை தயார் செய்து தொழிற்படுத்துவது வரையிலான |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | திகதிகளைக் குறிப்பிடும் முழுமையான அறிக்கையினை 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆந் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறும் கமத்தொழில் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு (பி.க.உ./க.உ.) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு விதப்புரை செய்தது.<br>**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் DAPH/FD/01/04/14/ ஆம் இலக்க, தொகுதி iii மற்றும் 2024.03.27 ஆந் திகதிய கடித்தின் வாயிலாக அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>வட மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் பயன்படுத்தும் விதத்திலான தகவல் மற்றும் தரவு முறைமையை (Database & Information System) ஏனைய மாகாணங்களுக்கும் அறிமுகப்படுத்துதல்.</u>** | இதற்கு முன்னுரிமை வழங்கி, வட மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் பயன்படுத்தும் விதத்திலான முறையான தகவல் மற்றும் தரவு முறைமையொன்றை ஏனைய மாகாணங்களுக்கும் அறிமுகப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்யுமாறு கமத்தொழில் அமைச்சின் பி.க.அ./க.அ.இற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு விதப்புரை செய்தது.<br>**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் DAPH/FD/01/04/14/ ஆம் இலக்க, தொகுதி iii மற்றும் 2024.03.27 ஆந் திகதிய கடித்தின் வாயிலாக பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| 04 | **<u>உள்ளூராட்சி தொகுதி வாரியாக கால்நடை சங்கங்களைப் தாபித்தல்</u>.** | வட மத்திய மாகாணத்தில் நடைமுறையிலுள்ள விலங்கு வேளாண்மை சங்கங்களை முன்மாதிரியாகக் கொண்டு, உள்ளூராட்சி தொகுதி வாரியாக நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் கால்நடை சங்கங்களைத் தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இச்சங்கங்களின் செயற்பணிகளை தெளிவாக உள்ளடக்கிய அறிவுறுத்தல் துண்டுப் பிரசுரத்தை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அமைச்சரவை அங்கீகாரத்துடன் குறிப்பிட்ட சுற்றறிக்கைகள் / வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு, இச்சங்கங்களுக்கான சட்டரீதியான பின்னணியை உருவாக்குமாறும், (சகல மாகாணங்களுடனும் Zoom தொழிநுட்பத்தின் வழியாக கலந்துரையாடி அவர்களது கருத்துக்களையும் பெற்றுக்கொண்டவாறு) இச்சங்கங்களை அமைக்கும் செயன்முறையின் முன்னேற்றம் குறித்து 2024.02.12ஆந் திகதியளவில் குழுவுக்கு அறிக்கையை முன்வைக்குமாறும் கமத்தொழில் அமைச்சின் பி.க.அ./க.அ.இற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு விதப்புரை செய்தது.<br>**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் DAPH/FD/01/04/14/ ஆம் இலக்க, தொகுதி iii மற்றும் 2024.03.27 ஆந்** |

| | | |
|---|---|---|
| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **திகதிய கடித்தின் வாயிலாக பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 05 | **கமத்தொழில் அமைச்சு இதனுடன் இணைந்த மாகாண திணைக்களங்களுடன் கூட்டங்களை நடாத்துவதன் தற்போதைய நிலைமை குறித்து குழு வினவியது**. | கால்நடைத் துறையை மேம்படுத்துவது தொடர்பிலான அடிப்படை பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு பொறுப்பளிக்கப்படுவதனால், குறிப்பிட்ட சுற்றறிக்கைகளை வெளியிடுவதற்கு முன்னர் 9 மாகாணங்களினதும் கமத்தொழில் திணைக்களங்களுடன் zoom தொழிநுட்பத்தின் ஊடாகவேனும் மாதத்துக்கு ஒரு தடவை தொடர்பு கொண்டு கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொண்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பது மிக அவசியமானதென குழு சுட்டிக்காட்டியது. |
| 06 | **கமத்தொழில் அமைச்சு மற்றும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினுள் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட் குதியினர் சிதறியுள்ள விதம் குறித்தும் மாகாண மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட் தொகுதியினர் குறித்தும் குழு வினவியது.** | நாடு பூராகவும் அமைந்துள்ள கால்நடை விசாரணை அலுவலங்கள், சகல மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கமநல சேவை நிலையங்களினால் நிறைவேற்றப்படும் பணிகளின் அளவுக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியினரை இணைப்பதற்கு உகந்த மாதிரியொன்றைத் தயார் செய்து சுற்றிக்கையொன்றைப் பிறப்பிக்குமாறு குழுவானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியது. |
| 07 | **அரச மற்றும் தனியார் துறைகளால் செயற்கை கருவூட்டல் செய்வதற்கான கட்டணங்களைத் தீர்மானித்தல்.** | 9 மாகாணங்களிலும் செயற்கை கருவூட்டலுக்காக அரச மற்றும் தனியார் துறைக்கு சேவைக் கட்டணத்தை அறவிடுவதற்காக பயன்படுத்தக் கூடிய அளவீடுகளை உள்ளடக்கியதொரு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | செயன்முறையைத் தயார் செய்து இது பற்றிய அறிக்கையை 2024.02.12ஆந் திகதியளவில் குழுவுக்கு முன்வைக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி.க.உ./ க.உ. இற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு விதப்புரை செய்தது.<br>**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் DAPH/FD/01/04/14/ ஆம் இலக்க, தொகுதி iii மற்றும் 2024.03.27 ஆந் திகதிய கடித்தின் வாயிலாக அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 08 | <u>குளம்பு மற்றும் வாய் நோய்களுக்கான (கோமாரி நோய்) 100,000 தடுப்பு ஊசிகளுக்கான மருந்துகளை கொள்வனவு செய்கையில், சந்தை விலையினையும் விட அதிகமான விலையை செலுத்தியதன் விளைவாக சுமார் ரூ.3.9 மில்லியன் மேலதிகமாக செலுத்தியிருத்தல்.</u> | இது குறித்து ஆராய்ந்து பார்த்து அவதானிப்புகளை உள்ளடக்கியதொரு முழுமையான அறிக்கையை குழுவுக்கு முன்வைக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி.க.அ./க.அ.இற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு விதப்புரை செய்தது.<br>**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் DAPH/FD/01/04/14/ ஆம் இலக்க, தொகுதி iii மற்றும் 2024.03.27 ஆந் திகதிய கடித்தின் வாயிலாக அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 09 | <u>அரசாங்கத்துக்குச் சொந்தமான இம்புலன்தண்ட மற்றும் தெலஹர இனப்பெருக்க நிலையங்களில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட ஆடுகள் தனிமைப்படுத்தல் காலத்திலும், அதன் பிற்பட்ட காலத்திலும் நோய்களுக்கு</u> | இது தொடர்பில் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணையின் விதப்புரைகளை உள்ளடக்கிய முழுமையான அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு முன்வைக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி.க.அ./க.அ.இற்கு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | **ஆளாதல்,இறத்தல் மற்றும் அவை பிரசவித்த ஏராளமான குட்டிகள் இறந்துபோதல்.** | அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு விதப்புரை செய்தது.<br>**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் DAPH/FD/01/04/14/ ஆம் இலக்க, தொகுதி iii மற்றும் 2024.03.27 ஆந் திகதிய கடித்தின் வாயிலாக அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 10 | **கடந்த 3 வருட காலப்பகுதியில் விலங்குகளுக்கு சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக மருந்துப்பொருட்கள் மீது செலவிடப்பட்டுள்ள மொத்த நிதித்தொகை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு சிகிக்கைகளை மேற்கொள்கையில் மருந்துப் பொருட்கள் மீது செலவிடப்பட்டுள்ள நிதித்தொகையைக் கணிப்பீடு செய்தல்.** | இந்த விடயம் தொடர்பில், 9 மாகாணங்களிலும் தனித்தனியாக மருந்துப் பொருட்கள் மீது செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை பற்றிய தரவுகளை உள்ளடக்கியதொரு அறிக்கையை 2024.02.12ஆந் திகதியளவில் குழுவுக்கு முன்வைக்குமாறு கமத்தொழில் அமைச்சின் பி.க.அ./க.அ.இற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு விதப்புரை செய்தது.<br>**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் DAPH/FD/01/04/14/ ஆம் இலக்க, தொகுதி iii மற்றும் 2024.03.27 ஆந் திகதிய கடித்தின் வாயிலாக அறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 11 | **கரந்தகொல்ல மற்றும் சீப்புக்குளம் விலங்கு வளர்ப்புக் கல்லூரிகளின் தற்போதைய நிலைமை** | பரந்தளவில் போதிய விளம்பரத்தை முன்னெடுத்து குறிப்பிட்டதொரு கட்டணத்துடன் பாடநெறிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் வழியாக |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | பாடநெறிகளின் இடைநடுவில் மாணவர்கள் பாடநெறிகளிலிருந்து இடைவிலகிச் செல்வதை குறைத்துக் கொள்ள முடியுமெனவும், கரந்தகொல்ல மற்றும் சீப்புக்குளம் 2 விலங்கு வளர்ப்புக் கல்லூரிகள் மீதும் விசேட கவனம் செலுத்தி இதன் பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழுவானது கமத்தொழில் அமைச்சின் பி.க.அ./க.அ.இற்கு ஆலோசனை வழங்கியது. |
| **இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்**<br>**(2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை பற்றிய ஆய்வு)**<br>**விசாரிக்கப்பட்ட திகதி – 2024 ஜனவரி 23** | | |
| **அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**<br>❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு<br>❖ இறக்குமதி,ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் | | |
| 01 | **<u>1969ஆம் ஆண்டில் 01ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி சட்டத்தின் பிரகாரம், இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள 11 பிரதான பணிகள் குறித்து குழுவில் கலந்துரையாடப்பட்டது.</u>** | இப்பிரதான பணிகளில் உள்ளடங்கும் “இலங்கையில் உள்ளூர் மற்றும் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான உலக வர்த்தக சங்கத்தின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்” எனும் பணி தொடர்பில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களத்தின் விடயப்பொறுப்புகள் குறித்து குழு வினவியது.<br>“மொண்டியல் சமவாயத்துக்கு அமைய ஓசோன் மண்டலத்தைப் பாதிக்கும் வாயுக்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல்” எனும் பணியில், ஓசோன் மண்டலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாயுக்களை உள்ளடக்கிய |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கருவிகளின் இறக்குமதி மீது குறிப்பிட்டளவு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், சூழலைப் பாதிக்கும் பண்டங்களின் இறக்குமதிக்கான உரிமப்பத்திரங்களை வழங்குகையில் சுற்றாடல் அமைச்சிடமிருந்து இது சார்ந்த விதப்புரைகளைப் பெற்றுக்கொள்வதாகவும் க.உ. மேலும் தெரிவித்தார்.<br><br>ஏற்றுமதி செயன்முறையின்போது, அரசாங்கம் எதிர்பார்க்கும் அந்நியச் செலாவணி வருமானம் அரசாங்கத்துக்கு கிடைப்பதில்லை என்பதை அவதானித்த குழுவானது, ஏற்றுமதி செயன்முறையின்போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் விடயப்பொறுப்பு குறித்து வினவியது.<br><br>இறக்குமதி,ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், ஏற்றுமதி செய்யும் பண்டங்களுக்கான அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதாகவும், நாணயச் செலாவணி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இத்திணைக்களத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ.) தெரிவித்தார்.<br><br>இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் தமது பொறுப்புகளை நிறைவேற்றுகையில் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் வழியாக இறக்குமதி ஏற்றுமதியை கட்டுப்படுத்துவதாகவும், பண்டங்களின் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | இறக்குமதி தொடர்பிலான ஒழுங்குவிதிகைள பிறப்பிப்பதாகவும் இதன்போது வெளியானது.<br><br>பண்டங்களின் இறக்குமதியின்போது, நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு போன்ற விடயங்கள் மீது முக்கிய கவனம் செலுத்தியவாறு இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி திணைக்களத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அடிப்படை பணியாகுமென க.அ. தெரிவித்தார். |
| 02 | **<u>இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விதப்புரை வழங்கும் 36 நிறுவனங்கள் (Recommending Authorities) காணப்படுவதாக குழுவில் வெளியானது.</u>** | இந்த நிறுவனங்கள் முன்வைக்கும் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், பண்டங்களை இறக்குமதி செய்ததன் பின்னர் இலங்கை சுங்கம் மற்றும் விதப்புரைகளை வழங்கியுள்ள நிறுவனங்கள் இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுடன் இசைவாக்கம் பெறுகின்றதா என்பது குறித்து பரிசீலிப்பதாகவும் க.அ. தெரிவித்தார்.<br><br>உரிய தரத்திலன்றியும் அனுமதிப்பபத்திரத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை மீறியவாறும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பண்டங்களை மீள்ஏற்றுமதி (Re-Export) செய்வதற்கு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | விதப்புரை செய்யப்படுவதாக இதன்போது குறிப்பிடப்பட்டது.<br><br>**விதப்புரைகள்**<br><br>இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ள நிறுவனங்கள் தொடர்பில் பின்வரும் தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையை குழுவுக்கு முன்வைக்குமாறு குழுவானது பிரதான கணக்கீட்டு அலுவலர்( பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலர் (க.அ.) இற்கு விதப்புரை செய்தது.<br><br>இதுவரையில் ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள்/ இறக்குமதியாளர்களின் எண்ணிக்கை யாது?<br><br>இறக்குமதி அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை மீறியுள்ள நிறுவனங்கள் / இறக்குமதியாளர்களின் எண்ணிக்கை யாது?<br><br>கடந்த 02 வருட காலப்பகுதியில் தரமற்ற வகையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பண்ட வகைகள் மற்றும் அளவுகள் யாவை?<br><br>கடந்த 02 வருட காலப்பகுதியில் மீள்ஏற்றுமதி (Re-Export) செய்யப்பட்டுள்ள பண்ட வகைகள் மற்றும் அளவுகள் யாவை ? |
| 03 | **<u>இறக்குமதி, ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவது</u>** | மென்பொருள் முறைமையை நடைமுறைப்படுத்தும் வரையில், இறக்குமதி உரிமப்பத்திரங்களை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | **<u>தொடர்பில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி திணைக்களத்தினுள் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மென்பொருள் முறைமை</u>** | வழங்குவதற்கான விதப்புரைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகளைப் பெற்றுக்கொள்தவற்கான பொது மாதிரிப் படிவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பண்ட இறக்குமதிக்கான விதப்புரைகள் மின்னஞ்சல் வழியாக பெற்றுக்கொள்ளப்படுவதுடன், அவற்றின் வன்பிரதிகளும் பெற்றுக்கொள்ளப்படுவதாக க.அ. தெரிவித்தார்.<br><br>இந்த மென்பொருள் முறைமைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அமெரிக்க தூதுவராலயத்தினால் வழங்கப்படும் நன்கொடைகளின் கீழ், வெளிநாட்டு மென்பொருள் அபிவிருத்தி கம்பனியொன்றினால் மென்பொருள் முறைமை அபிவிருத்தி செய்யப்படுவதாகவும் குழுவில் குறிப்பிடப்பட்டது. முறைமைக்கான தகவல் தொழிநுட்ப கட்டுப்பாட்டாளர் பதவியும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் தாபிக்கப்பட்டுள்ளதாகவும், முறைமையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவு செய்யப்படவுள்ளதாகவும் க.அ. மேலும் தெரிவித்தார்.<br><br>***<u>விதப்புரைகள்</u>***<br><br>இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்கத்தில் குறிப்பிட்ட மென்பொருள் முறைமையை தாபிக்கையில், மென்பொருள் முறைமையை அபிவிருத்தி செய்யும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | வெளிநாட்டு மென்பொருள் நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளுமாறும், இந்த மென்பொருள் முறைமையின் வழியாக பரிமாற்றப்படும் தரவுகளின் பாதுகாப்பு குறித்தும் மென்பொருள் முறைமையின் பராமரிப்புப் பணிகள் குறித்தும் கருத்தில் கொள்ளுமாறும், இணக்கப்பாட்டின் அடிப்படையில் 02 வருடங்கள் நிறைவடைந்ததும் குறிப்பிட்ட முறைமையை திணைக்களம் பொறுப்பேற்று உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை திட்டமிட வேண்டுமெனவும், குழுவானது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் ( பி.க.அ.) மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ.)இற்கு விதப்புரை செய்தது. |
| 04 | **<u>இறக்குமதியாளர்கள் இறக்குமதி அனுமதிப்பத்திரங்களில் உள்ளடங்கும் நிபந்தனைகளை மீறுகையில் அதற்கான தண்டனையை வழங்குவதற்கு சட்டங்களை திருத்துதலும் இதற்கான செயன்முறையொன்றை தயார் செய்தலும்.</u>** | இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் நிபந்தனைகளை மீறியவாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ள பண்டங்களை மீள்ஏற்றுமதி (Re-Export) செய்வதற்கும் நிபந்தனைகளை மீறும் இறக்குமதியாளர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்துவதற்கும் (Publish) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்தார். முன்னாள் அரசாங்கத்தின் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகளின் பிரகாரம், அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | இறக்குமதியாளர்களை பகிரங்கப்படுத்துவதற்கு மேலதிகமாக அவர்களது பதிவினை தடை செய்ய முடியுமா என்பது குறித்து சட்டமா அதிபரிடத்தில் வினவி அவரது ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டதாகவும் க.அ. தெரிவித்தார். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தில் காணப்படும் தத்துவதங்களின் கீழ் குறிப்பிட்ட இறக்குமதியாளர்களை பகிரங்கப்படுத்த மாத்திரம் முடியுமென சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாகவும், இந்த அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியவாறு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்ததைத் திருத்துவதற்கு சட்ட வரைஞரிடத்தில் (Legal Draftsman) முன்வைக்கப்படவுள்ளதாக க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>இறக்குமதி அனுமதிப்பத்திரங்களில் காணப்படும் நிபந்தனைகளை மீறும் இறக்குமதியாளர்களை பகிரங்கப்படுத்துவதற்கு (Publish) மேலதிகமாக, அவர்களுக்கு தண்டனை வழங்குதவதற்கானதொரு செயன்முறையை தயார் செய்ய வேண்டுமென குழுவில் முன்மொழியப்பட்டது. இவ்வாறு தண்டனை வழங்குவதற்கான சட்டங்களை திருத்துதல் மற்றும் இது தொடர்பிலான செயன்முறையொன்றை தயார் செய்வது தொடர்பில் திகதி குறிப்பிடப்பட்ட அறிக்கையினை ஒரு வாரத்துக்குள் ( 2024.01.31ஆந் திகதிக்கு முன்னர்) குழுவுக்கு முன்வைக்குமாறு |

| | | |
|---|---|---|
| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
| | | குழுவானது பி.க.அ./க.அ.இற்கு விதப்புரை செய்தது.<br><br>இறக்குமதி,ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் நாயகத்தின் IECD/07/01/40 ஆம் இலக்க மற்றும் 2024.02.065ஆந் திகதிய கடித்தின் வாயிலாக பின்வரும் விடயங்களை உள்ளடங்கிய கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது.<br><br>- 1953/28 ஆம் இலக்க மற்றும் 2016.02.11ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில், இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரங்களில் உள்ளடங்கும் நிபந்தனைகளை மீறும் இறக்குமதியாளர்களிடமிருந்து மேலதிக கட்டணத்தை அறவிடுவதற்கான ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும்,<br>- இறக்குமதி,ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11E பிரிவின் பிரகாரம் பண்டங்களின் விசேட தரங்களுடன் இணங்காத பண்டங்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களை பகிரங்கப்படுத்துவதற்கானதொரு செயன்முறையை தயார் செய்வதற்கான ஒழுங்குவிதிகளை வெளியிடும் வர்த்தமானி அறிவித்தலின் வரைபு, திருத்தங்களுடன் சட்ட வரைஞருக்கு 2023.12.22ஆந் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது.<br>- குறிப்பிட்ட திருத்தங்கள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் மீள்பரிசீலனைக்காக 2024.01.16ஆந் திகதி திணைக்களத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | - குறிப்பிட்ட வரைபில் திருத்தங்கள் எதையும் மேற்கொள்ள வேண்டியிருப்பின் குறிப்பிட்ட திருத்தங்களை சட்ட வரைஞருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பின்னர் சட்டமா அதிபரின் அங்கீகாரத்துக்கு முன்வைத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள காலச்சட்டகம்<br>(i) சட்ட வரைஞரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் – 2024.02.15<br>(ii) சட்டமா அதிபரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் – 2024.03.15<br>(iii) வர்த்தமானி அறிவித்தலை பகிரங்கப்படுத்துதல் – 2024.04.01<br>(iv) வர்த்தமானி அறிவித்தலுக்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதலும் வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு முன்வைத்தலும் – 2024.05.30<br>இதற்கு மேலதிகமாக, தொடர்ந்தும் சட்டங்களை திருத்துவதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **சட்டத்தை திருத்த வேண்டுமென்பதால், இது தொடர்பில் எதிர்காலத்தில் செயற்படுவதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.**<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>ஏனைய நாடுகளின் இறக்குமதியாளர்கள் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு, தரமற்ற பண்டங்களை இறக்குமதி செய்வது தொடர்பில், சர்வதேச சமவாயங்களுக்கு அமைய அந்தந்த நாடுகள் பின்பற்றும் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து 01 மாதத்துக்குள் ( 2024.02.23ஆந் திகதிக்கு முன்னர்) அறிக்கையிடுமாறு, வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கு (Ministry of Trade , Commerce and Food Security ) விரைவாக கடிதமொன்றை முன்வைக்குமாறு குழுவானது பி.க.அ./க.அ.இற்கு விதப்புரை செய்தது.<br><br>இந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், கணக்காய்வாளருகான பிரதி சகிதம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமென குழுவானது பி.க.அ./க.அ. இற்கு விதப்புரை செய்தது.<br><br>**இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் IECD/06/07/05/2024 ஆம் இலக்க மற்றும் 2024.02.07ஆந் திகதிய கடித்தின் வாயிலாக குறிப்பிட்ட தகவல்கள் வர்த்தக,** |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | **வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடத்தில் கோரப்பட்டுள்ளன.** |
| 05 | **<u>இறக்குமதி, ஏற்றுமதி கட்டுபாட்டுக்கு உட்படும் மற்றும் உட்பட வேண்டிய பண்டங்கள் மற்றும் குறிப்பிட்ட ஒத்திசைக்கப்பட்ட பண்ட விளக்கம் மற்றும் குறியீட்டு முறை ( HS Codes )</u>** | இறக்குமதி கட்டுப்பாட்டுக்கு உட்படும் சகல பண்டங்களும் இறக்குமதி,ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்படுவதாக க.அ. தெரிவித்தார். இறக்குமதி கட்டுப்பாட்டுக்கு உட்படும் 1075 ஒத்திசைக்கப்பட்ட பண்ட விளக்கம் மற்றும் குறியீட்டு முறைகள் ( HS Codes ) காணப்படுவதாகவும், 504 HS Codes அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தப்பட்ட தொகுதிக்குள் (Suspended License Category) உள்ளடங்குவதாகவும், 304 HS Codes தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும், தடை செய்யப்பட்டுள்ள 51 HS Codes காணப்படுவதாகவும் இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார்.<br><br>மேலும், வெளிநாடுகளில் பயன்படுத்தப்பட்டு அகற்றப்படும் தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்து சுத்திகரித்து விற்பனை செய்வதாகவும், இந்த தேங்காய் எண்ணெய் புற்றுநோயை ஏற்படுத்தும் தன்மை கொண்டது எனவும் இதன்போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும், சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்கள் போன்ற சில விளையாட்டுப் பொருட்களின் இறக்குமதி மீது HS Codes அறிமுகப்படுத்தப்படவில்லை எனவும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டது. மேலும், இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் கொண்டு வரப்படும் பண்டங்கள் மீதும் உரிய மேற்பார்வையை மேற்கொள்ளுமாறு குழு வலியுறுத்தியது.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரும் ஒத்திசைக்கப்பட்ட பண்ட விளக்கம் மற்றும் குறியீட்டு முறையின் (HS Codes) கீழ் இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மேற்பார்வை (Supervision) தொடர்பில் முறையானதொரு வேலைத்திட்டத்தை விரைவில் தயார் செய்யுமாறும், இலங்கை சுங்கத்துடன் இணைந்து இறக்குமதி கட்டுப்பாட்டுக்கு உட்பட வேண்டிய ஏனைய பண்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து பார்த்து தகுந்த ஒத்திசைக்கப்பட்ட பண்ட விளக்கம் மற்றும் குறியீட்டு முறையின் இறக்குமதி கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பி.க.அ./க.அ.இற்கு விதப்புரை செய்தது. |
| 06 | **<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு குறிப்புகள் 1. (5.1)</u>**<br><br>(i) விதப்புரை காலம் கடந்துள்ள வாகனங்களை துண்டாக்கி கொண்டு வரப்படும் வாகனங்கள் மற்றும் மதுபான உற்பத்திக்கான மதுசார | ஔடதங்கள் மற்றும் ஏனைய உற்பத்திகளின் தேவைக்காக மதுசாரத்தை இறக்குமதி செய்கையில், மதுவரித் திணைக்களத்தினால் விதப்புரை செய்யப்படும் மதுசாரத்தின் அளவுக்கு (Quantity), ஏற்ப இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதாக க.உ. குழு முன்னிலையில் தெரிவித்தார். தற்போது மதுபான உற்பத்திக்கான மதுசார இறக்குமதி |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | அனுமதிப்பத்திரங்களை வழங்கும் கொள்கை | நிறுத்தப்பட்டுள்ளதாகவும், மதுபான உற்பத்திக்கான மதுசாரத்தை இறக்குமதி செய்யத் தேவைப்படும் பட்சத்தில், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் க.அ. தெரிவித்தார்.<br><br>மருந்துப்பொருட்களின் உற்பத்திக்காக மதுசாரத்தை இறக்குமதி செய்கையில், இதற்கு மதுவரித் திணைக்களத்தின் விதப்புரைகளுக்கு மேலதிகமாக, சுகாதார அமைச்சு அல்லது குறிப்பிடட அமைச்சுக்களிடமிருந்தும் தேவையான அளவினைக் குறிப்பிட்டு விதப்புரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், 2020ஆம் ஆண்டு மதுபான உற்பத்திக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் நிறுத்தப்பட்ட நாள் முதல் இதுவரையில் மதுசார இறக்குமதிக்காக 06 இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார்.<br><br>மதுசார இறக்குமதிக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களம் இதுவரையில் மதுவரித் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்புடன் முறையானதொரு செயன்முறையை தயார் செய்யவில்லை என்பதை குழு அவதானித்தது.<br><br>**<u>விதப்புரைகள்</u>** |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | மதுவரித் திணைக்களத்தினால் விதப்புரை செய்யப்படும் மதுபானங்கள் / மதுசாரத்தின் அளவுக்கு (Quantity) ஏற்ப இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதனால், இவ்வாறு விதப்புரை செய்யப்படும் மதுபானங்கள் / மதுசாரத்தின் அளவுக்கான நிச்சயிக்கப்பட்டதொரு கொள்கையை தயார் செய்யுமாறு மதுவரி ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்குமாறு குழுவானது பி.க.அ./க.அ. இற்கு விதப்புரை செய்தது.<br><br>**மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் விதப்புரை செய்யப்படும் மதுபானங்கள் / மதுசார அளவுக்கான நிச்சயிக்கப்பட்டதொரு கொள்கையை தயார் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு குறிப்பிட் கொள்கையை முன்வைக்குமாறு அறிவித்து இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் IECD/03/01/03 ஆம் இலக்க மற்றும் 2024.02.06ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக மதுவரி ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**<br><br>**இது தொடர்பில், இறக்குமுதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் IECD/03/01/03 ஆம் இலக்க மற்றும் 2024.04.01ஆந் திகதிய ஞாபகமூட்டல் கடிதமும் மதுவரி ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.** |
| 07 | (ii) வாகன இறக்குமதி தொடர்பில் ஜனாதிபதி செயலகம் தேசிய கொள்கையொன்றைத் தயார் செய்தல். | வாகன இறக்குமதிக்கான தேசியக் கொள்கையொன்றை தயார் செய்வதற்கு ஜனாதிபதி செயலகத்தினால் தாபிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை தயார் செய்தல் இறுதிக் கட்டத்தில் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | காணப்படுவதாக வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார்.<br><br>இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான தேசிய கொள்கையொன்றைத் தயார் செய்கையில், இக்கொள்ளையினுள் பழைய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கானதொரு கொள்கையும் உள்ளடங்க வேண்டுமெனவும், பழைய வாகனங்களை இறக்குமதி செய்கையில் செலவாகும் எரிபொருளின் அளவு மற்றும் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் மீதான செலவு எவ்வளவு என்பது தொடர்பிலும் புதிய வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான கொள்கையும் உள்ளடங்க வேண்டுமென குழு வலியுறுத்தியது.<br><br>இதன்போது, பொருளாதாரம் மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பு, வாகன விபத்துக்களிலிருந்து காப்பாற்றிக்கொள்ளுதல் ஆகிய விடயங்கள் குறித்து கருத்தில் கொண்டு குறிப்பிட்ட தேசியக் கொள்கையை தயார் செய்ய வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியது.<br><br>வாகனங்களை இறக்குமதி செய்கையில் குறிப்பிட்ட வாகன இறக்குமதிக்கான தரங்கள் / ஒழுங்குவிதிகளை உள்ளடக்கியதொரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்தார். பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்கையில், அனுமதிப்பத்திரங்களை வழங்குவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், புதிய வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படவில்லை எனினும், இந்த வாகன இறக்குமதியானது வாயு வெளியீட்டு தரநியமங்கள் வெளியீட்டுத் தரங்கள் (Emission Standard) மற்றும் பாதுகாப்பு தரங்களுடன் (Safety Standard) இசைந்தொழுக வேண்டுமெனவும் க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>வாகன இறக்குமதிக்கான தேசிய கொள்கையை தயார் செய்வதற்கு ஜனாதிபதி செயலகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் தயார் செய்யப்பட்டுள்ள அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பி.க.அ./க.அ. தெரிவித்தார். |
| 08 | **<u>கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு குறிப்பு 1.(5.4)</u>**<br><br>பரிசுப் பொருள் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பின்னர் பல்வேறு தரப்பினர்களுக்கு கையளிக்கப்படுதல் | பரிசுப் பொருள் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை வழங்கியதன் பின்னர் உரிய வரியை செலுத்தாது குறிப்பிட்ட வாகன உரிமையை பிறிதொருவருக்கு கையளிக்க முடியாதென க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரைகள்</u>**<br><br>பரிசுப் பொருள் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை வழங்கியதன் பின்னர் வாகனங்களின் உரிமை மாற்றப்பட்டுள்ளதா என்பதையும் இதன்போது ஏதேனும் முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பது குறித்தும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துடனான ஒருங்கிணைப்புடன் பரிசீலிக்குமாறும், இவ்வாறு உரிமையை மாற்ற முடியாதென மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் குழுவானது பி.க.அ. / க.அ. இற்கு விதப்புரை செய்தது.<br><br>**பரிசுப் பொருள் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை பிறிதொரு தரப்பினருக்கு கையளிப்பதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்படும் பட்சத்தில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்திடம் முன்கூட்டி இது குறித்து வினவாது குறிப்பிட்ட கையளிப்புகள் தொடர்பிலான பதிவு செய்தலை மேற்கொள்ள வேண்டாமென அறிவித்து, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் IECD/02/2023/004 ஆம் இலக்க மற்றும் 2024.02.07ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.**<br><br>**2014ஆம் ஆண்டு முதல் இன்று வரை பரிசுத் திட்டத்தின் கீழ் வாகன இறக்குமதிக்கான இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் தற்போதைய விபரங்களைக் கோரி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு ஆம் இலக்க மற்றும் 2024.04.09ஆந் திகதிய கடிதத்தின் பிரதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| 09 | **<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் குறிப்புகள் – 1. (6.1)</u>**<br><br>1978ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கச் சட்டத்தின்மூலம் திருத்தப்பட்ட 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11 ஈ பிரிவின் பிரகாரம் தரநியமத்துக்கு முரணாக இறக்குமதிகளை மேற்கொள்கின்ற இறக்குமதியாளர்களின் பதிவை இரத்துச் செய்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு 03 மாத காலத்துக்குள் நடவடிக்கைகளை மேற்கொண்டு குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு 2022.06.08ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குள் பற்றிய குழுக் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டது. | தரநியமங்களுக்கு முரணான இறக்குமதிகள் தொடர்ந்தேர்ச்சியாக இடம்பெறுவதால் அத்தகைய இறக்குமதியாளர்களை கறைநிரற் பட்டியலில் சேர்த்து, வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படுகின்ற போதிலும், இதுவரை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என கணக்காய்வின்மூலம் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. |
| 10 | **<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக் குறிப்புகள் – 1. (6.2)</u>**<br><br>பயன்படுத்திய வாகனங்களுக்கு இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குதல். | பயன்படுத்திய வாகனங்களை இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், பயன்படுத்திய 33 வாகனங்களை இறக்குமதி செய்ததன்மூலம் வரி மோசடி இடம்பெற்றுள்ளதாக குழுக் கூட்டத்தில் தெரியவந்தது. முன்னைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் விதப்புரையின் படி, இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் மூலம் இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டிருந்த விசாரணைகளின் முன்னேற்றம் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | வினவப்பட்டதாகவும், இதுவரையில் இப்புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவுபெறவில்லை என்பதையும் குழு அவதானித்தது. |
| 11 | **<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக் குறிப்புகள் 1. (6.4)</u>**<br><br>மருந்து இறக்குமதிக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழைப் பயன்படுத்தி காலாவதியான மருந்துகளை இறக்குமதி செய்தல். | மருந்துகளை இறக்குமதி செய்யும் போது, சம்பந்தப்பட்ட மருந்துகள் நாட்டுக்குக் கொண்டுவரப்படும் போது அம்மருந்துகளின் மொத்த ஆயுட்காலத்தில் குறைந்தது 75%ஆவது முன்னைய காலத்துக்குக் காணப்பட வேண்டுமென மருந்து இறக்குமதி அனுமதிப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து குழு அவதானம் செலுத்தியது.<br><br>சுகாதார அமைச்சு, நிதி அமைச்சு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) மற்றும் இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய நிறுவனங்களின் உடன்பாட்டுடன் அவ்வகையில் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் ஆயுட்காலம் குறைந்தது 75%ஆவது இருக்க வேண்டுமென க.அ தெரிவித்தார். இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் இலங்கை சுங்கத்திலிருந்து மருந்துகளை அகற்றுவதற்கு இறக்குமதி செய்யும் வேளையில் மருந்துகளின் மொத்த ஆயுட்காலம் %75மேனும் எஞ்சியிருந்தால் மாத்திரமே அனுமதி வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் மருந்துகளின் ஆயுட்காலம் 74%-65%க்கு |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | இடைப்பட்டதாக இருந்தால், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (NMRA) அந்த மருந்துகளின் தரம் மற்றும் அந்த மருந்துகளை சந்தைக்கு வெளியிடும் திறன் என்பன தொடர்பில் சான்றளிக்க வேண்டும் என்பதோடு, சம்பந்தப்பட்ட இறக்குமதியாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டு அத்தகைய மருந்துகளை சுங்கத்திலிருந்து விடுவிக்க அனுமதி வழங்கப்படுவதாகவும் க.அ. தெரிவித்தார். மேலும், 65%க்கும் குறைவான ஆயுட்காலத்தைக் கொண்ட மருந்துகளை சுங்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமெனில், இறக்குமதியாளர் அந்த மருந்துகள் குறித்த சிறப்பு நியாய அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் க.அ மேலும் தெரிவித்தார்.<br><br>குறுகிய ஆயுட்கால மருந்துகளை இறக்குமதி செய்து மாகாண மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கும்போது அதிகளவு நேரம் எடுப்பதால் அந்த மருந்துகளின் காலாவதியாகும் (Expire) போக்கு அதிகமாக இருப்பதை குழு அவதானித்ததோடு, தரமான மருந்துகளை இறக்குமதி செய்து பொதுமக்களுக்கு வழங்குவது மிகவும் முக்கியமானது என குழு வலியுறுத்தியது.<br><br>மேலும், 2018-2020 காலப்பகுதியில், 75%க்கும் குறைவான ஆயுட்காலத்தைக் கொண்ட மருந்துகளை அதிகளவில் இறக்குமதி செய்திருப்பதை கண்காணித்த குழு, மருந்துகளை இறக்குமதி |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | செய்வதற்கான முறையான அமைப்பு இருக்க வேண்டுமென வலியுறுத்தியது.<br><br>**<u>விதப்புரை</u>**<br>சுகாதார அமைச்சு, நிதி அமைச்சு, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து, ஏதேனும் மருந்தை இறக்குமதி செய்யும் வேளையில் தொடர்புடைய மருந்தின் மொத்த ஆயுட்காலத்தில் குறைந்தது 75%ஐப் பராமரிப்பது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு குழு பி.க.அ / க.அ க்கு விதப்புரை செய்தது. |
| 12 | **<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக் குறிப்புகள் 2. (2.1)</u>** | மட்டுப்படுத்த வேண்டியதும் தடைசெய்யப்பட வேண்டியதுமான பொருட்களின் இறக்குமதியைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கிய இலக்கம் 2044/40 மற்றும் 2017 நவம்பர் 09ஆம் திகதிய வர்த்தமானி மற்றும் பழைய வாகனங்களை நாட்டுக்குள் கொண்டுவருவதை மட்டுப்படுத்துவதற்கான 1971/10 மற்றும் 2016 ஜூன் 14ஆம் திகதிய வர்த்தமானிமூலம் சட்டவிரோத இறக்குமதிகள் நாட்டுக்குள் கொண்டுவருவதைத் தடுத்துள்ள போதிலும், இலங்கை சுங்கம் மற்றும் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தரவு அமைப்புகளுக்கு இடையிலான தொடர்பு பலவீனமானதன் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | காரணமாக, இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் பின்னர், அது தொடர்பில் பின்னாய்வு செய்தல் முறைமை திணைக்களத்தில் இல்லை என்று கணக்காய்வாளர் தலைமையதிபதி குழுவிடம் சுட்டிக்காட்டினார். |
| 13 | **<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக் குறிப்புகள் 2.(2.2-ii)</u>**<br><br>சீனி இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் முறை 2020.10.30 முதல் நடைமுறைக்கு வந்தாலும், அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது 2020.11.18ஆம் திகதி வரை காலதாமதமானதன் காரணமாக அக்காலப்பகுதியில் 18 இறக்குமதியாளர்கள் அனுமதிப்பத்திரம் இன்றி சீனி இறக்குமதி செய்துள்ளனர். 2016.02.11ஆம் திகதிய 1953/28ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின்படி, C.I.F. பெறுமதியில் 5%ஐ மேலதிகக் கட்டணமாக அறவிடவேண்டிய போதிலும் அனுமதிப்பத்திரம் இன்றி இறக்குமதி செய்யப்பட்ட சீனித் தொகைக்கு C.I.F. பெறுமதியில் 2 %ஐ அறவிடுதல். | ஒரு கிலோகிராம் சீனிக்கு விதிக்கப்பட்ட விஷேட பண்ட அறவீட்டு வரி குறைக்கப்பட்ட வேளையில், சீனி இறக்குமதியை அனுமதிப்பத்திரக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதாகவும், வரி குறைக்கப்பட்ட ஆரம்ப சந்தர்ப்பத்தில் இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை எனவும் அச்சந்தர்ப்பத்தில் இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு எந்த அளவுகோலும் காணப்படவில்லை எனவும் க.அ. தெரிவித்தார். அந்தக் காலகட்டத்தில் இறக்குமதியாளர்கள் அனுமதிப்பத்திரம் இன்றி சீனியை இறக்குமதி செய்துள்ளனர் எனவும், அவ்வாறு அனுமதிப்பத்திரம் இல்லாமல் இறக்குமதி செய்யும் போது அதன்மீது அபராதத் தொகையை விதித்து பொருட்களை விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கும், நியாயமான காரணங்களில் அடிப்படையில் அபராதத் தொகையில் குறிப்பிட்டளவைக் குறைப்பதற்கும் கட்டுப்பாட்டு ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளதாகவும் க.அ. குழுவின் முன் தெரிவித்தார்.<br><br>இறக்குமதியாளர்கள் இறக்குமதி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்த |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | போதும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை எனவும், அதன்படி இறக்குமதியாளர்கள் தாம் சீனியை இறக்குமதி செய்ததாகத் தெரிவித்ததாகவும், மேற்படி கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள 5% அபராதத் தொகையில் குறிப்பிட்டளவு குறைக்கப்பட்டு, அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார். |
| 14 | <u>**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக் குறிப்புகள் 2. (2.2 - iii)**</u><br>ஒரு கிலோ கிராம் சீனிக்கு விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு வரியை 50 ரூபாயிலிருந்து 25 சதம் வரை குறைத்ததன்மூலம் நுகர்வோருக்கு எதிர்பார்த்த நிவாரணம் கிடைக்கவில்லை என்பது தொடர்பான கணக்காய்வு விசாரணை | சீனிக்கான இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் முக்கிய நோக்கமாக, வரி குறைக்கப்பட்டதன் பின்னர் அதிகளவில் சீனி இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்படும் சராசரி மாதாந்த சீனி அளவு, அனுமதிப்பத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அதிகரித்துள்ளதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது. |
| 15 | <u>**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக் குறிப்புகள் 2. (2.4)**</u><br>சீஷெல்ஸில் இருந்து தாய்லாந்து நோக்கி பயணித்த மீன் கொள்கலன்களை ஏற்றிச் சென்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் தொழில்நுட்பக் கோளாறுக்கு உட்பட்டு மின்சார விநியோகம் தடைப்பட்டமையால் இலங்கை | குறித்த மீன் கொள்கலன்கள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சென்றடைந்ததையடுத்து, அந்த மீன் கொள்கலன்களைப் பரிசோதிக்க இலங்கை சுங்கத்தால் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன்,<br>அப்புறப்படுத்தப்பட்ட இந்த மீன் பாகங்கள் நுகர்வுக்காக அன்றி இயற்கை உரம் தயாரிப்பதற்குத் தேவையான மீன் கழிவுகள் (Fish Waste) என |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | துறைமுக அதிகாரசபையை சென்றடைந்துள்ளதோடு,<br>வெளிநாட்டுக் கப்பலின் உள்நாட்டு முகவரின்மூலம் கண்டறியப்பட்ட உள்நாட்டு தனியார் நிறுவனமொன்றுக்கு சேதனப் பசளை உற்பத்திக்கு இம்மீன் கொள்கலனை 2022.03.09ஆம் திகதி விற்பனை செய்தமை தொடர்பான கணக்காய்வு விசாரணை | அறிக்கையிடப்பட்டதாக க.அ. தெரிவித்தார்.<br><br>இதன்படி, அப்புறப்படுத்தப்பட்ட மீன் பாகங்களை இறக்குமதி செய்வதற்கான உரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்தார்.<br><br>ஒதுக்கப்பட்ட இந்த மீன் கொள்கலன்களை அகற்றுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை சுங்கம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மேற்பார்வையில் மீன் கொள்கலன்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் குழுக் கூட்டத்தில் தெரியவந்துள்ளதோடு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மேற்பார்வையின்கீழ் சேதன உரம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.<br><br>அப்புறப்படுத்தப்பட்ட மீனைப் பயன்படுத்தி சேதன உரம் தயாரிக்கும் செயல்முறையை மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் பின்னர் கேட்டறிந்ததாகவும்,<br>அப்புறப்படுத்தப்பட்ட மீன் பாகங்கள் உள்ளடங்கிய 98 கொள்கலன்களில் 43 கொள்கலன்கள் சேதன உர உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும், மீதமுள்ள 55 கொள்கலன்களில் 40 கொள்கலன்கள் மீண்டும் ஏற்றுமதி (Re-export) செய்யப்பட்டதாகவும் எஞ்சிய 15 கொள்கலன்கள் இலங்கை சுங்கம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் பரிசோதிக்கப்பட்டு அந்த |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | நிறுவனங்களின் மேற்பார்வையின்கீழ் 'கொம்போஸ்ட்' உர உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார்.<br><br>மேற்படி அப்புறப்படுத்தப்பட்ட மீன் கொள்கலன்களைக் கொள்வனவு செய்த உள்நாட்டு தனியார் நிறுவனத்தால் 'செமன்' உற்பத்தித் தொழிற்சாலை நடாத்திச் செல்லப்படுவதாகவும், அந்த மீன் கொள்கலன்களை நாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும், அப்புறப்படுத்தப்பட்ட மீன் கொள்கலன்கள் சிலவற்றை மீள் ஏற்றுமதி செய்ததன் காரணமாக, அந்த மீன் கொள்கலன்களை நாட்டுக்குள் கொண்டுவரும் தீர்மானம் பிழையானது என்பது உறுதியாவதாகவும் கணக்காய்வின் போது தெரியவந்தது. இந்தக் கப்பலில் 98 மீன் கொள்கலன்கள் காணப்படவில்லை எனவும், 102 மீன் கொள்கலன்களே காணப்பட்டதாகவும் அவற்றில் 04 கொள்கலன்கள் குறித்த தகவல்கள் ஏதும் இல்லை எனவும் கணக்காய்வு மூலம் தெரியவந்தது. இறக்குமதியாளர் உரிய இறக்குமதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனினும், இலங்கை சுங்கம் அனுமதிப்பத்திரம் கோரியிருப்பது சிக்கலாக உள்ளதாகவும், இதற்காகப் போலியான விலைப்பட்டியல் ஒன்றையே குறித்த இறக்குமதியாளர் சமர்ப்பித்துள்ளமை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | தெரியவந்துள்ளதாகவும் கணக்காய்வின்மூலம் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>இலங்கை சுங்கத்தால் இந்த அப்புறப்படுத்தப்பட்ட மீன் கொள்கலன்களை நாட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், Eco N Rich Organic Fertilizer நிறுவனத்தால் இறக்குமதி மற்றும் அனுமதிப்பத்திரம் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் ஊடாக இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>I. இம்மீன் கொள்கலன்களை மீன் கழிவுகள் (Fish Waste) என அடையாளங்கண்டு, அதனோடு தொடர்புடைய பொருள்கூட்டு வகைப்படுத்தல் குறியீட்டை (HS Code) வழங்குவதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இலங்கை சுங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் அலுவலர்கள் பற்றிய தகவல்கள்; மற்றும்<br><br>II. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் இதுதொடர்பில் அளிக்கப்பட்ட |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | அறிக்கையைத் தயாரித்த அலுவலர்கள் பற்றிய தகவல்களை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு குழுவால் பி.க.அ./க.அ.க்கு பரிந்துரைக்கப்பட்டது.<br><br>**குறித்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக இலங்கை சுங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் அலுவலர்கள் பற்றிய தகவல்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையை தயாரித்த அலுவலர்கள் பற்றிய தகவல்கள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/Import & Export/COPA /2024 மற்றும் 2024.03.07ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>மேலும்,<br><br>I. சேதன உரம் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கழிவு மீன்கள் ( Fish Waste) அடங்கிய 15 கொள்கலன்கள் தொடர்பில் கண்டறிந்து, அவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்;<br><br>**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள்** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | அமைச்சின் செயலாளரின் MF06/10/Import&Export/COPA/2024 இலக்கமுடைய 2024.03.18ஆம் திகதிய கடிதத்தின்மூலம், அழுகிய மீன்கள் அடங்கிய 15 கொள்கலன்கள் சேதன உர உற்பத்திக்காக பேலியகொடையிலுள்ள M/C Agri Star Compost Pvt Ltd நிறுவனத்துக்கு வழங்குவதற்கு M/S Eco Rich Organic Fertilizer நிறுவனத்தின் உடன்பாட்டின் அடிப்படையில் விடுவிக்க இலங்கை சுங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் CDD/DES/MISC/ 2023/65ஆம் இலக்க மற்றும் 2024.02.26ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியதாக அறிவித்தார். எவ்வாறாயினும், சுகாதார அமைச்சின் அனுமதி கிடைக்கும் வரை 15 கொள்கலன்களை விடுவிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.<br><br>II. இந்தக் கணக்காய்வு விசாரணையுடன் தொடர்புடைய அப்புறப்படுத்தப்பட்ட மீன் பாகங்களைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் தொழிற்சாலைகளால் இதுவரை எவ்வளவு உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து கள ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறும், மற்றும் |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | III. இக்கள ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்படும் குழுவுக்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் அலுவலர் ஒருவரையும் உள்வாங்குமாறும் குழுவால் பி.க.அ /க.அ.க்கு பரிந்துரை செய்யப்பட்டது.<br><br>**தொடர்புடைய கள ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF/06/10Import & Export/ COPA/ 2024ஆம் இலக்க, 2024.06.11ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இக்குழுவால் 2024.03.25, 2024.04.29 மற்றும் 2024.04.30 ஆகிய திகதிகளில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதன்படி தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br><br>இச்சம்பவத்துடன் தொடர்புடைய அரச நிறுவனங்களான இலங்கை சுங்கம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை பொலிஸ் ஆகியவற்றை அடுத்த குழுக் கூட்டத்துக்கு 2024.03.05ஆம் திகதி அழைப்பதற்கும், இலங்கை சுங்கம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இச்சம்பவத்துடன் தொடர்புடைய குழு அலுவலர்களை அன்றையதினம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முன் அழைப்பதற்கும் இதன்போது குழு தீர்மானித்தது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| 16 | **<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக் குறிப்புகள் 2. (2.5)</u>**<br><br>அந்நியச் செலாவணி நெருக்கடி நாட்டில் நிலவும் வேளையிலும், எத்தனோல் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ள வேளையிலும், 1,960,000 டொலர் பெறுமதிக்கு இலங்கை சீனி நிறுவனத்துக்கு எத்தனோல் உற்பத்திக்குத் தேவையான வெல்லப்பாகு (மொலெசஸ்) இறக்குமதிக்கான இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை 2022.01.22ஆம் திகதி வழங்க திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. | மேற்படி கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேளையில், எத்தனோல் உற்பத்திக்குத் தேவையான வெல்லப்பாகு இறக்குமதிக்கான பரிந்துரைகளை மதுவரித் திணைக்களம் வழங்கியதாகவும், அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டபோதிலும், தற்போது அந்த அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>எத்தனோல் உற்பத்திக்குத் தேவையான வெல்லப்பாகு இறக்குமதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக, அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியுடன் இலங்கை சுங்கத்திலிருந்து அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு குழுவால் பி.க.அ./க.அ.க்கு பரிந்துரை செய்யப்பட்டது.<br><br>இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு உரிய பரிந்துரைகளை வழங்கும் 36 நிறுவனங்களுடன் நன்கு ஒருங்கிணைந்த அடிப்படையிலும் பின்னாய்வு செயல்முறையிலும் செயற்படுமாறு குழு க.அ.க்கு ஆலோசனை வழங்கியது.<br><br>**வ/ப லங்கா சீனி (தனியார்) நிறுவனத்துக்கு 5,000 மெட்ரிக் தொன்** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **வெல்லப்பாகுவை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட 2022.01.21ஆம் திகதிய 1M-3-540-2022-000199ஆம் இலக்க இறக்குமதி உரிமத்தை பயன்படுத்தி 2022.01.01ஆம் திகதி முதல் இதுவரை எந்தவோர் இறக்குமதியும் செய்யப்படவில்லை என்பதாக சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் IECD/03/01/03ஆம் இலக்க, 2024.02.15ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/Import&Export/COPA/2024 ஆம் இலக்கம், 2024.03.18ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 17 | <u>அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகள்</u> | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, இலங்கை சுங்கம், உண்ணாட்டரசிறைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றுடன் 2024.01.24ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்துக்கு, அரசாங்க நிதி பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிக திட்டமிடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிப்பதற்கான துறைசார் மேற்பார்வைக் குழு ஆகிய குழுக்களின் தவிசாளர்களையும் அழைக்க |

<table>
<tr><td></td><td>கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்</td><td>- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்</td></tr>
<tr><td></td><td></td><td>வேண்டுமென குழுவில் முடிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td colspan="3">நிதி அமைச்சு<br>(நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுடன் தொடர்புடைய 2021 மற்றும் 2022, நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள், அவ்வமைச்சின் தற்போதைய செயலாற்றுகை மற்றும் இலங்கை சுங்கத்தில் 2023 நவம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தினதும், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் 2023 நவம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தினதும் மதுவரித் திணைக்களத்தில் 2023 ஒக்டோபர் 05ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தினதும் தற்போதைய நிலைமை)<br>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 ஜனவரி 24</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள்-<br>❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு<br>❖ வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு<br>❖ இலங்கை சுங்கம்<br>❖ உண்ணாட்டரசிறைத் திணைக்களம்<br>❖ மதுவரித் திணைக்களம்</td></tr>
<tr><td>01</td><td><u>அரசாங்க வருவாயை அதிகரிக்க நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் தலையீடு</u></td><td>அரசாங்க வருவாயை அதிகரிக்க நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கு உண்மையான தேவை உள்ளதா என குழு வினவியது.<br><br>கணக்காய்வு நிறுவனங்களின் நடவடிக்கைகள் காரணமாக உண்ணாட்டரசிறைத் திணைக்களத்துக்கு வரி வருவாயை முறையாகச் சேகரித்துக்கொள்ள முடியாமல் போயிருப்பதை அவதானித்த குழு, கணக்காய்வு நிறுவனங்களை முறையாக ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதோடு, வருமான வளர்ச்சிக்காக உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும்</td></tr>
</table>

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | சுட்டிக்காட்டியது. பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு 2024ஆம் ஆண்டுக்கான குறிப்பிட்ட பொருளாதார திட்டத்துடன் செயற்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய குழு, அமைச்சின் பலவீனங்கள் அவதானிக்கப்படுவதாகவும் தெரிவித்தது.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>இலங்கை சுங்கம், உண்ணாட்டரசிறைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதிக திட்டமிடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழுவால் கடந்த ஒருவருட காலத்துக்குள் (2023.01.01-2024.1.26) வழங்கப்பட்ட கட்டளைகள்/ பரிந்துரைகள் /<br><br>ஆலோசனைகள் அடங்கிய கலந்துரையாடல் குறிப்புகளை ஆய்வுசெய்து, மேற்கூறிய மூன்று அரச நிறுவனங்களினதும் வருமானத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளையும் அதற்கான செயற்றிட்டமொன்றையும் 2024.02.26ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு வழங்குமாறும், இது தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தேசியக் கொள்கைகள் அமைச்சின் ஒருங்கிணைப்பை மிகவும் செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ளுமாறும் குழுவால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ/க.அ ஆகியோருக்கு பரிந்துரை செய்யப்பட்டது.<br><br>**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF6/4/COPA/General/2023ஆம் இலக்க, 2024.03.05ஆம் திகதிய கடிதத்தின்மூலம் மதுவரித் திணைக்களத்துடன் தொடர்புடைய வருவாயை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளும் செயற்றிட்டமும் இலங்கை சுங்கம், உண்ணாட்டரசிறைத் திணைக்களம் ஆகியன தொடர்பான வருமான அபிவிருத்திக்குத் தேவையான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன.** |
| 02 | **<u>நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பில் காணப்படுகின்ற பலவீனம்</u>** | கசினோ ஒழுங்குபடுத்துனர் ஒருவரை நியமிக்கவேண்டியதன் அவசியத்தை அரசாங்க நிதி பற்றிய குழு சுட்டிக்காட்டி இருந்ததோடு, அது 2023.09.30ஆம் திகதிக்குள் நிறைவுசெய்யப்படுமென நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு அறிவித்திருந்தபோதிலும், அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். உண்ணாட்டரசிறைத் திணைக்களம் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகன் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையில் சரியான |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | ஒருங்கிணைப்பு இல்லாததே இதற்குக் காரணமென குழு அவதானித்தது.<br><br>மேலும், இலங்கையில் வெளிநாட்டு நிறுவனங்கள் மென்பொருள் அமைப்புகளை விற்பனை செய்யும் நேரத்தில், அந்த நிறுவனங்களுக்காகவும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை (VAT) அறவிட முடியாமல் போயிருப்பது, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்துக்கும் இடையிலான பலவீனமான ஒருங்கிணைப்பேயாகும் என குழுவால் சுட்டிக்காட்டப்பட்டது. |
| 03 | **<u>இலங்கை சுங்கத் திருத்தச் சட்டவரைவு</u>** | இலங்கை சுங்கக் கட்டளைச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது என்றும், மேற்படி திருத்தத்திற்கு அமைய சன்மான நிதியத்திற்கு ஒதுக்கப்படும் தொகையின் விகிதங்களிலும் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது என்றும் 2024 யூன் மாதம் முதல் இதனை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் குழுவின் முன் தெரிவிக்கப்பட்டது.<br><br>சுங்கக் கட்டளைச் சட்டத்திற்குக் கொண்டுவரப்படுகின்ற புதிய திருத்தத்திற்கு அமைய சுங்கத் தண்டனை அல்லது வேறு அவ்வாறான அறவீடுகளிலிருந்து இலங்கை சுங்கத்தின் சன்மான மற்றும் நலன்புரி நிதியத்திற்கு விகிதாசார ரீதியில் பகிர்ந்தளிக்கப்படுவது பற்றி குழு வினவியது.<br><br>இதன் போது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. /க.அ. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தெரிவிக்கையில் குற்றம் செய்த தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற தண்டப் பணத்தில் 50% திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் என்றும் எஞ்சிய 50% இல் 5% நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் என்றும், எஞ்சிய 45% சன்மான நிதியத்திற்கு ஒதுக்கம் செய்ய உத்தேச திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.<br><br>சன்மான நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற விகிதம் மிகவும் அதிகமாகும் என்றும் மேற்படி விகிதத்தை மேலும் குறைக்க வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>இலங்கை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் உத்தேச திருத்தங்களை உள்ளடக்கிய சட்டவரைவின் பிரதியை ஒரு வாரத்திற்குள் குழுவுக்குப் பெற்றுத் தருமாறு குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. /க.அ. இற்கு விதப்புரை வழங்கியது.<br><br>மேலும், சுங்கக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்யும் போது பின்வரும் விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்தி குறித்த திருத்தங்களை மேற்கொள்ளுமாறு குழு மேலும் விதப்புரை வழங்கியது.<br><br>i. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடு பற்றிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டம் போன்ற சட்ட |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | ரீதியான நிலைமைகளின் கீழ் இறக்குமதி /ஏற்றுமதி நடவடிக்கைகளின் போது தவறிழைத்துள்ள தரப்பினர்களிடமிருந்து தண்டப்பணமாக அல்லது வேறு வகையில் இலங்கை சுங்கத்தினால் அறவிடப்படுகின்ற நிதியில் சாதாரண நிலைமையின் கீழ் அரசுக்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட முழு ஐமயான வரித்தொகையின் அளவு திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகையில் ஏதேனுமொரு விகிதத்தை இலங்கை சுங்கத்தின் சன்மான மற்றும் நலன்புரி நிதியத்திற்கு ஒதுக்குவது உகந்தது என்று சுட்டிக்காட்டிய குழு மேற்படி விடயத்தைக் கவனத்தில் கொண்டு சுங்கக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது, மற்றும்<br><br>ii. இலங்கை சுங்கத்தில் சேவையாற்றி வருகின்ற சரக்கு எழுதுநர்களின் (wharf clerk) ஒரு சில மோசடிச் செயற்பாடுகள் காரணமாக அரசுக்கு வரிப்பணம் இழக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய குழு மேற்படி நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு அமுலில் உள்ள சட்ட ஏற்பாடுகளை திருத்தம் செய்ய வேண்டும் என்பது.<br><br>**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின்** |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | **MF6/4/COPA/General/2023 ஆம் இலக்க 2024.03.05 திகதிய கடிதம் மூலம் சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 04 | **குறைந்தபட்ச மாற்று வரிக் கொள்கை** | ஒரு சில நாடுகள் தவிர உலகின் சகல நாடுகளிலும் அறவிடப்படுகின்ற குறைந்தபட்ச மாற்று வரிக் கொள்கையை (minimum alternate tax) இலங்கை அமுல்படுத்தாதிருப்பதன் காரணமாக அரசு பாரியளவில் வரிப்பணத்தை இழக்க நேரிடுகின்றது என்று குறிப்பிட்டு குழு அது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் கொள்கைசார் தீர்மானம் மேற்கொள்ளாமை தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்டது. |
| 05 | **தற்காலிக பெறுமதிசேர் வரி (VAT) பதிவு செய்தல்** | தற்காலிக பெறுமதிசேர் வரி (VAT) பதிவு செய்வதன் மூலம் அரசு பாரியளவில் வரி வருமானத்தை இழக்க நேரிடுவதை அவதானிப்புச் செய்த குழு நிலையான VAT பதிவுக்கு உரிமை இல்லாத நிறுவனங்களுக்கு தற்காலிக VAT இலக்கம் பெற்றுக் கொடுப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.<br><br>**விதப்புரை**<br><br>அது பற்றி ஆராய்ந்த உகந்த நடவடிக்கைகளை விதப்புரை செய்வதற்கு குழுவொன்றை நியமனம் செய்யுமாறும், தற்காலிக VAT இலக்கம் பதிவு செய்வதை இடைநிறுத்துவதற்குள்ள ஆற்றல் பற்றி ஆராய்ந்து அதனை நிறுத்த சுற்றறிக்கை வெளியிடுமாறும், அவ்வாறு பதிவை நிறுத்த இயலுமை இல்லை எனின் அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அறிக்கையொன்றை 2024.02.22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | சமர்ப்பிக்குமாறும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ இற்கு விதப்புரை வழங்கப்பட்டது.<br>**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF5/PA/04/2024/Tax ஆம் இலக்க 2024.03.11 திகதிய கடிதம் மூலம் தற்காலிக வெற் பதிவு வழங்குவதனால் பாரியளவில் வருமானம் இழக்கப்படுவது தொடர்பில் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை விதப்புரை செய்வதற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 06 | **<u>உண்ணாட்டரசிறை திணைக்களத்தின் RAMIS தரவு முறைமை (Revenue Administration Management Information System)</u>** | வரி தொடர்பிலான சட்டங்களில் கட்டமைப்புசார் திருத்தங்களை மேற்கொள்ளும் பட்சத்தில் அதற்கான மாற்றம் செய்யும் கோரிக்கைகளை (Change Request) மேற்கொள்ள வேண்டுமாயினும், வரி விகிதங்களில் இடம்பெறுகின்ற மாற்றங்களை தரவு முறைமைக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியும் என்று இதன் போது பி.க.அ. /க.அ. தெரிவித்தார். மேலும் RAMIS மென்பொருளின் சிக்கலான நிலைமைகளிலும் பார்க்க தொடர்பாடலின் பலவீனங்கள் காணப்படுவதும் இதன் போது தெரியவந்தது.<br>மேலும், இந்தத் தரவு முறைமையை அமுல்படுத்துவது தொடர்பில் அலுவலர்கள் வெளிப்படுத்துகின்ற அசமந்தப் போக்கு மற்றும் ரூபா |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | பில்லியன் 4 மூலம் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட RAMIS தரவு முறைமைக்கு இதுவரை சுமார் 16 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ள போதிலும், இதுவரை இம்முறைமையை முறையாக அமுல்படுத்த முடியாதிருப்பது பற்றியும், இந்தத் தரவு முறைமையை தாபிப்பதற்கான உடன்படிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கேனும் பரிசீலித்துப் பார்க்க பிரவேசிக்க இடமளிக்காமை பற்றியும் குழு தமது அதிருப்தியை வெளியிட்டது.<br><br>உண்ணாட்டரசிறை திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் குறிப்பிடுகையில், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் அறிவுரைக்கமைய RAMIS தரவு முறைமையின் குறைபாடுகளை இனங்காண்பதற்கு மற்றும் அதற்கான உத்தேச யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு பல்வேறு மட்டங்களிலுமான அலுவலர்களை உள்ளடக்கியதாக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>RAMIS தரவு முறைமை தொடர்பில் 2023.01.24 ஆம் திகதி அரச கணக்குகள் பற்றிய குழுவினால் நியமனம் செய்யப்பட்ட தொழில்நுட்பக் குழு 1 இனால் தயார் செய்யப்பட்ட அறிக்கையில் உள்ளடங்குகின்ற |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | விதப்புரைகளை அமுல்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு மேற்படி குழுவை மீண்டும் அழைத்து தேவையான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடி அதன் முன்னேற்றம் பற்றிய அறிக்கையை 2024.02.22 இற்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும்; மற்றும் RAMIS தரவு முறைமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம்(IMF) வழங்கியுள்ள அறிக்கையின் பிரதியை குழுவிடம் கையளிக்குமாறும்;<br><br>குழு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. இற்கு விதப்புரை வழங்கியது.<br><br>**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/04/COPA General 2023 ஆம் இலக்க 2024.05.08 ஆம் திகதிய கடிதம் மூலம் RAMIS தரவு முறைமை தொடர்பில் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு 1 இன் அறிக்கையில் உள்ளடங்குகின்ற செயல்ரீதியான விடயங்கள் தொடர்பான முன்னேற்றம் மற்றும் காலஎல்லைகளும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF6/4/COPA/ General/2023 ஆம் இலக்க 2024.03.05 ஆம் திகதிய கடிதம் மூலம் RAMIS தரவு முறைமை தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) வழங்கப்பட்ட** |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **அறிக்கையின் பிரதியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** |
| 07 | <u>**வரி நிருவாகத்தை முறைப்படுத்தல்**</u> | வரி நிருவாகத்தை விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்வதன் ஊடாக பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு வலியுறுத்தியது. அதற்கு இலங்கை சுங்கம், உண்ணாட்டரசிறை திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான தனியான அலகொன்றை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் நிருவாகப் பிரிவின் கீழ் தாபிக்கவும் குழு பிரேரித்தது. |
| 08 | <u>**விரல் அடையாள இயந்திரத்தைப் பயன்படுத்தல்**</u> | <u>**விதப்புரை**</u><br>இலங்கை சுங்கத்தின் சகல அலுவலர்களும் விரல் அடையாள இயந்திரத்தை கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும், யாதாயினுமொரு சுற்றிவளைப்பு சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறான கடமைகளில் பங்கேற்க வேண்டிய சந்தர்ப்பங்களில் அவ்வாறு பயன்படுத்துவது கடினம் எனின் அது பற்றிய உரிய அதிகாரிகளை முறையாக அறிவுறுத்தி தகுந்தவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு இலங்கை சுங்கத்திற்கு விதப்புரை வழங்கியது.<br>**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF6/4/COPA/ General/2023 ஆம் இலக்க 2024.03.05 ஆம் திகதிய கடிதம் மூலம் இலங்கை** |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | **சுங்கத்தின் தொழில் கூட்டமைப்பினால் அவர்களின் தொழில்சார் சிக்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தொழில்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்து விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடி நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வுகள் பற்றி தீர்மானம் மேற்கொள்ளல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.** |
| 09 | **<u>மதுபான போத்தல்களுக்கு போலி ஸ்ரிக்கர்களைப் பயன்படுத்தல்</u>** | மதுபான போத்தல்களில் போலி ஸ்ரிக்கர் பயன்படுத்தும் சம்பவங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்கள மட்டத்தில் விசாரணைகள் நடைபெறுவதும் குழுவின் முன் தெரியவந்தது. மேலும் இது தொடர்பான விசாரணைகளுக்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், அரச அச்சு நிறுவனம் மற்றும் அரச அச்சு திணைக்களத்தின் உதவி பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்றும் பி.க.அ./க.அ. தெரிவித்தார். அதற்கமைய அடுத்துவரும் 6 மாத காலப்பகுதிக்குள் ஸ்ரிக்கர்களில் முழுமையான மாற்றத்தை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.<br><br>ஸ்ரிக்கர் வழங்கப்பட்ட பின்னர் குறித்த வரி அறவிடப்பட்ட உற்பத்தி இருப்புக்களின் அளவு தொடர்பில் ஸ்ரிக்கர் செயற்படுத்தும் (Activation) பொறுப்பு மேற்படி உரிமப்பத்திரம் உள்ள நிறுவனத்தில் இருக்கும் மதுவரி அலுவலர் மற்றும் மேற்படி மதுபான உற்பத்தியாளரின் பொறுப்பாகும் என்றும் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | அவர்கள் அவ்வாறு செயற்படாமை கடும் மோசடி மேற்கொள்வதாகும் என்றும், அவர்கள் அது தொடர்பில் முறையான தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் குழு சுட்டிக்காட்டியது. மேலும், போலி ஸ்ரிக்கர் பயன்படுத்தப்பட்ட மதுபான உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து பாரியளவில் தண்டப் பணம் அறவிட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பி.க.அ. /க.அ. தெரிவித்தார்.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>மதுபான போத்தல்களில் போலி ஸ்ரிக்கர் பயன்படுத்துவதை தடுப்பதற்காக குறித்த மதுபானஉற்பத்தி நிறுவனங்களில் CCTV கெமரா கட்டமைப்புக்களை பொருத்தி அதனை தூரஇருந்து கண்காணிப்புச் செய்வதற்கான இணைப்புக்களை மதுவரி திணைக்களத்திற்குப் பெற்றுத் தருமாறு மேற்படி மதுபானம் உற்பத்தித் தொழில்சாலைகளின் உரிமையைக் கொண்டுள்ள கம்பனிகளுக்கு அறிவிக்குமாறும், அதற்கமைய CCTV கெமரா கட்டமைப்பின் ஊடாக சகல மதுபான உற்பத்தி தொழில்சாலைகளையும் கண்காணிப்புச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழு மதுவரித் திணைக்களத்திற்கு விதப்புரை வழங்கியது.<br><br>**மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2024.05.07 திகதிய ED/11/2/COPA -2024 ஆம் இலக்க கடிதம் மூலம் CCTV கெமரா** |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | **கட்டமைப்பை பொருத்தும் கருத்திட்டத்தின் பிரேரணை வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**<br>போலி ஸ்ரிக்கர் பயன்படுத்தும் மோசடி தொடர்பில் திறைசேரியின் செயலாளரினால் மதுவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட கடிதம் மூலம் போலி ஸ்ரிக்கர் பயன்படுத்தப்பட்ட நிறுவனங்களின் உரிமப்பத்திரங்களை ரத்துச் செய்தல், மதுவரி அலுவலர்களை இடமாற்றம் செய்தல், மதுபான உற்பத்தி நிறுவனங்களின் CCTV கெமரா கட்டமைப்புடன் இணைப்பை ஏற்படுத்தல், மதுபான போத்தல்களுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற ஸ்ரிக்கர்களை செயற்படுத்துதல் (Activation), மேற்படி ஸ்ரிக்கர்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அடையாளங்கள் சிலதையேனும் பொது மக்களுக்கு வெளியிடுதல் போன்ற விதப்புரைகள்<br>அறிவிக்கப்பட்டுள்ளதென்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் பி.க.அ. /க.அ. தெரிவித்தார். |

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

***(2021 மற்றும் 2022 ஆம் நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் மற்றும் தற்கால செயலாற்றுகையை பரிசீலித்தல்)***

**விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி - 2024 சனவரி 24**

**அழைக்கப்பட்ட நிறுவனங்கள்-**

- அரசாங்க சேவை ஆணைக்குழு

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| 01 | **அரசாங்க சேவை ஆணைக்குழுவின் *2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள்*** | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் *2021 மற்றும் 2022* ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்பட்டுள்ள போதிலும் 2020 ஆண்டின் பின்னர் ஆண்டறிக்கைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டிருக்காமை பற்றி குழு அவதானிப்புச் செய்தது. மேற்படி ஆண்டறிக்கைகளை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு தரவேற்றம் செய்யத் தவறியுள்ளதாகவும் அவற்றை தரவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். |
| 02 | **2021 ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை மூலம் ஆணைக்குழுவின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான போதியளவு விடயங்கள் சமர்ப்பிக்கப்படாமை.** | (i) ஆணைக்குழுவின் தாபனப் பிரிவு, ஒழுக்காற்றுப் பிரிவு, நியமனப் பிரிவு மற்றும் பதவி உயர்வுப் பிரிவினால் 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை மாத்திரம் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வு ஆண்டில் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் (பணிகள்) எண்ணிக்கை, மேற்படி முறைப்பாடுகளின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் தொடர்ந்தும் எஞ்சியுள்ள எண்ணிக்கை ஆகிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>அதற்கமைய, மேற்படி அறிக்கையில் 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மட்டத்தை மதிப்பீடு செய்வதற்குப் போதியளவு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டது. 2022 செயலாற்றுகை அறிக்கையிலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் குழுவில் தெரியவந்தது.<br><br>203 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் முதல் சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைகளில், நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறைப்பாடுகள் பற்றிய தகவல்களை தனித்தனியாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் பி.க.அ. குறிப்பிட்டார்.<br><br>(ii) மீளாய்வு ஆண்டின் மேன்முறையீட்டுப் பிரிவுக்கு கிடைத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை அளவு ரீதியாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகளைக் கொண்ட அறிக்கைகள் கோரப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை மற்றும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கையை சமர்ப்பிக்கும் போது அவை மீளாய்வு ஆண்டின் மற்றும் முன்னைய ஆண்டுகளின் மேன்முறையீட்டு எண்ணிக்கைகளையும் உள்ளடக்கியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது (காலப் பகுப்பாய்வு இன்றி) இதன் போது தெரிவிக்கப்பட்டது. இக்காரணங்களினால் இப்பிரிவின் மீளாய்வு ஆண்டுக்கான செயலாற்றுகை மட்டத்தை |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | குறித்துரைப்பதற்கு போதியளவிலான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் 2022 செயலாற்றுகை அறிக்கையிலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் குழுவின் முன் தெரியவந்தது.<br><br>முன்னைய ஆண்டில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வது மீளாய்வு ஆண்டின் சனவரி, பெப்ருவரி மாதங்களில் இடம்பெறுவதனால் மற்றும் மேன்முறையீடுகளுக்கு அறிக்கைகளை கோரும் நிறுவனங்களினால் அது தொடர்பில் முறையாக பதிலளிப்பது தாமதமடைவதன் மூலம் இவ்வாறான சிக்கல்கள் எழுகின்றது என்றும் பி.க.அ. குறிப்பிட்டார்.<br><br>நிறுவனத்தினால் முறைப்பாடுகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை/ பதில் நடவடிக்கை மேற்கொள்வதிலுள்ள மந்தகதி நிலை பற்றி சனாதிபதி செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பி.க.அ. குறிப்பிட்டார். நிறுவனத்தினால் முறைப்பாடுகளுக்கு குறித்த காலப்பகுதிக்குள் பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை காரணமாக குறித்த முறைப்பாட்டை மேற்கொள்ளும் தரப்பினர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது என்பதை அவதானிப்புச் செய்த குழு அது பற்றி துரித நடவடிக்கை மேற்கொள்வதன் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | அவசியத்தன்மையையும் வலியுறுத்தியது.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>இதற்கமைய, தற்போது அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு மூலம் கோரப்பட்டுள்ள அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்ட நிறுவனங்களின் (அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் போன்ற ஏனைய நிறுவனங்கள் / ஆட்கள்)பட்டியலை தாமதைமடைந்துள்ள காலப்பகுதிகள் சகிதம் 2024.02.22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு பெற்றுத் தருமாறு குழு பி.க.அ. இற்கு கட்டளையிட்டது.<br><br>**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க 2024 பெப்ருவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் மேற்படி அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.** |
| 03 | **<u>உள்ளகக் கணக்காய்வு</u>** | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கு அமைய ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பிரதம கணக்கீட்டு அலுவலர் தகுதிவாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டுமாயினும் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2023 அக்டோபர் 03 ஆம் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்றது |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | என்பதை குழு அவதானிப்புச் செய்தது. ஆணைக்குழுவுக்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரைப் பெற்றுத் தருமாறு அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று பி.க.அ. தெரிவித்தார். |
| 04 | **<u>பணியாட்டொகுதியின் தகவல்கள்</u>** | ஆணைக்குழுவில் 2023 டிசம்பர் 31 திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி 238 ஆகும் என்பதுடன், பணியாட்டொகுதி 219 ஆக உள்ளதனால் சிரேஷ்ட மட்டத்திலான 7 உம், மூன்றாம் நிலை மட்டத்திலான 4 உம், இரண்டாம் நிலை மட்டத்திலான 2 உம் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 6 உம் என்ற வகையில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும், சேவைசார் அவசியத்தன்மையை கவனத்தில் கொண்டு அத்தியாவசியமான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை என்பதையும் குழு அவதானிப்புச் செய்தது.<br><br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு தாபிக்கப்பட்ட பின்னர் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி திருத்தம் செய்யப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டது என்றும், ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதனால் வெற்றிடங்களை பூர்த்தி செய்துகொள்ள முடியாதுள்ளது என்றும் பி.க.அ. தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| 05 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XI அத்தியாயத்தின் 13.3 பிரிவுக்கு அமைய முழுநேர சேவைசார் அவசியமாகின்ற ஒரு பதவிக்கு நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளமை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2022 டிசம்பர் 14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்த நடவடிக்கைமுறை விதிகளின் 139 ஆம் பிரிவுக்கு அமைய பதில் கடமையாற்றுதல் அல்லது கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் நியமனம் வழங்குவதானது ஒரு வருட காலம் எனும் உச்சளவான காலப்பகுதிக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2022 ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு அமைய மேற்படி சட்டங்கள், விதிகளுக்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை.<br><br>அதற்கமைய, 2019 மார்ச் 01 திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட ஆணைக்குழுவின் நிருவாக அலுவலர் பதவிக்கு கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 31 ஆம் திகதி அதாவது 4 வருட காலமாக பதில் கடமையாற்றுவதன் அடிப்படையிலும், 2021 டிசம்பர் 09 | 2023 மே 24 திகதி நிருவாக அலுவலர் பதவிக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆகஸ்ட் 02 திகதி செயலாளர் பதவிக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 56 (4) உறுப்புரைக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவரை நியமனம் செய்துகொள்ள ஆணைக்குழுவுக்கு தத்துவமுள்ளதாக பி.க.அ. தெரிவித்தார்.<br><br>நடவடிக்கைமுறை விதிகளுக்கு அமைய அலுவலர்களின் இடமாற்றம் 5 வருடங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும் அரசாங்க சேவை ஆணைக்குழு அதற்கு முரணாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் குழு அவதானிப்புச் செய்தது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலர்கள் வருடாந்த இடமாற்றங்களுக்கு உட்படுவதில்லை என்றும், யாராயினும் அலுவலர் ஒருவர் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இடமாற்றம் செய்யப்பட முடியும் என்றும் பி.க.அ. குறிப்பிட்டார். சுயாதீன ஆணைக்குழுக்களின் இடமாற்றல் நடவடிக்கைமுறைக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு ஆணைக்குழுவின் தற்றுணிபின் பிரகாரம் இடமாற்றங்களை அமுல்படுத்தாதிருக்க முடியும் என்றும் பி.க.அ. தெரிவித்தார். |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | திகதி முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட செயலாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதில் கடமையாற்றுவதன் அடிப்படையிலும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளமை. | |
| 06 | ***2016 யூலை 08 ஆம் திகதி நடைபெற்ற முன்னைய அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கட்டளைகளை அமுல்படுத்தல்***<br><br>**கட்டளை இல. 07**<br><br>2010, 2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்கான செயற்பாட்டுத் திட்டங்கள் தயார் செய்யப்படவில்லை என்பதுடன் 2016 ஆண்டில் செயற்பாட்டுத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார் என்பதுடன் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய முன்னேற்ற மீளாய்வு மற்றும் முன்னேற்றம் அறிக்கையிடப்படல் வேண்டும் என்பது. | 2020 ஆகஸ்ட் 28 திகதி வெளியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க அரச நிதிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கு அமைய வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ள போதிலும் செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றங்களை குறிப்பிடுகின்ற முன்னேற்ற அறிக்கைகள் தயார் செய்யப்படவில்லை என்று குழு அவதானிப்புச் செய்தது.<br><br>செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் ஒவ்வொரு வருடமும் செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு தயார் செய்யப்படுவதாக பி.க.அ. தெரிவித்தார். எவ்வாறாயினும் அமைச்சுக்களிடமிருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகளை தீர்த்துவைப்பதன் முன்னேற்றம், குறித்த நிறுவனங்கள் அது தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளும் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதனால், குறித்துரைக்க முடியாது என்றும் செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய நிறைவேற்றப்பட்ட பணிகளின் அளவு பருமட்டாக விகிதாசார அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். |
| 07 | **அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள்** | அரசாங்க சேவை ஆணைக்குழுவில் சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளுக்கு அரச நிருவாக சேவையைச் சேர்ந்த அலுவலர்களை மாத்திரம் ஆட்சேர்ப்புச் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | செய்துகொள்ளாது அதற்கு ஏனைய நாடளாவிய சேவைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள வேண்டும் என்று குழு விதப்புரை வழங்கியது. அதன் மூலம் அரச சேவையிலுள்ள பல்வேறு சேவைகள் /துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பை தயார் செய்வதன் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு பல்வேறு துறைகளையும் சேர்ந்த அலுவலர்களினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற நியமனம் வழங்குதல் மற்றும் பதவி உயர்வு தொடர்பான பல்வேறு சிக்கல்களுக்கும் நடைமுறைக்குச் சாத்தியமான வெற்றிகரமான தீர்வுகளை வழங்க இயலுமாகும் என்றும் குழு சுட்டிக்காட்டியது. இதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் காணப்படுகின்ற நிறுவன ஒழுங்கமைப்பை மாற்றம் செய்ய வேண்டும் என்றும் குழு மேலும் யோசனை சமர்ப்பித்தது.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>கடந்த 5 வருடங்களில் அரச சேவையிலுள்ள சகல சேவைகளிலிருந்தும் கிடைத்த முறைப்பாடுகள் பற்றி பகுப்பாய்வு செய்து / வகைப்படுத்தி அது தொடர்பான புள்ளிவிபரங்களைக் கொண்ட அறிக்கையொன்றை 2024.02.22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்குப் பெற்றுத் தருமாறு குழு பி.க.அ. இற்கு விதப்புரை வழங்கியது. |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | **அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க 2024 பெப்ருவரி 22 ஆம் திகதிய கடிதம் மூலம் ஒவ்வொரு ஆண்டுக்குமான அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.**<br><br>அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற தீர்ப்புக்கள்/ தீர்மானங்களை மென்மேலும் நியாயமான மற்றும் விளைதிறன்மிக்கதாக்கும் பொருட்டு நாடளாவிய சேவைகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சேவைகளிலிருந்து அலுவலர்களின் பிரதிநிதித்துவத்தை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியில் (Cadre) இணைத்துக் கொள்ளுமாறும், அவ்வாறு செய்ய முடியவில்லை எனின், ஆலோசகர் மட்டத்தில் அல்லது சகல சேவைகளினதும் பிரதிநிதித்துவத்தை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதற்குத் தேவையான பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு ம்றறும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி அது பற்றிய பிரேரணைகள் சம்பந்தமாக 2024.01.31 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குழு பி.க.அ. இற்கு விதப்புரை வழங்கியது.<br><br>**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க 2024 பெப்ருவரி 22 ஆம் திகதிய** |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | **கடிதம் மூலம் இந்த விடயம் தொட்பில் அரசாங்க சேவை ஆணைக்ழுவின் பதில் அளிக்கப்பட்டுள்ளது.** |
| 08 | 2017 ஜூலை 25ஆம் திகதிய, 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் படி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், தேசிய அபிவிருத்தி மூலோபாயங்களுடன் நிரல்படுத்தப்பட வேண்டியிருப்பினும் 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயலாற்றுகை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த அபிவிருத்தி இலக்குகள் பொருந்தவில்லை என ஆணைக்குழு குறிப்பிட்டது. | இது தொடர்பில் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பொருந்தவில்லை என பல தடவைகள் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்ட போதிலும் குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 07 ஆண்டுகளின் பின்னர், 2024 ஆம் ஆண்டில் 05 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் காணப்பட்டதாகவும், 2030 ஆம் ஆண்டிற்கான நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்காக இப்போதிலிருந்தே பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனினும், அத்தகைய திட்டமோ அல்லது தயார்நிலையோ காணப்படுவதாக கணக்காய்விற்கு புலனாகவில்லையெனவும் குழுவில் தெரிவிக்கப்பட்டது.<br><br>நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு மற்றும் பொது சேவைகள் குறித்து செயற்படுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இதற்காக நிறுவனத்தில் தனியொரு பிரிவை நிறுவி மேற்படி நிலைபேறான இலக்குகளை மீளாய்வு செய்து நிறுவனத்திற்குப் பொருத்தமான இலக்குகளை இனம் |

| | | |
|---|---|---|
| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
| | | கண்டு அதற்கேற்ப செயலாற்ற வேண்டுமென குழு வலியுறுத்தியது.<br><br>**<u>விதப்புரை</u>**<br><br>i. பிரமாணக் குறிப்பை அங்கீகரித்தல் மற்றும் ஆட்சேர்ப்பு வழிகாட்டல்களைத் தயாரிக்கும் போது, மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் மற்றும் மேம்படுத்தல்களை கணிப்பிட்டு அதற்கேற்ப செயல்நடைமுறையை தயாரித்தல் மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு விதப்புரை செய்தது.<br><br>ii. ஒவ்வொரு நிறுவனங்களிடமிருந்தும் கடந்த 5 ஆண்டுகளில் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளை ஆராய்ந்து, அரச சேவையில் கண்டறியப்பட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்த அறிக்கையை 22.02.2024 க்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு குழு பி.க.அ. கு விதப்புரை செய்தது.<br><br>**2024 பிப்ரவரி 22 ஆம் திகதிய PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் கடிதத்தின் ஊடாக இவ்வாணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.** |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | - **பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>- **குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | iii. ஒவ்வொரு நிறுவனத்திலும் ஆட்சேர்ப்பு செய்வதை இடைநிறுத்தும் வகையில் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவுகள் (Stay Orders) பற்றிய அறிக்கையொன்றை குழுவிற்கு பெற்றுக்கொடுக்குமாறு குழு பி.க.அ. கு விதப்புரை செய்தது.<br><br>**2024 பிப்ரவரி 22 ஆம் திகதிய PSC/ACC/R01/AUDIT/03/202 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் கடிதத்தின் ஊடாக குறித்த அறிக்கை பெற்றுக்கொடுக்கப்பட்டது.** |
| 09 | **அரசாங்க சேவை <u>ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுகின்ற</u> மேன்முறையீடுகள்**<br><br>2009 பெப்ரவரி 20ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளின் 237 வது பிரிவின்படி, ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட மேன்முறையீடொன்று ஆணைக்குவுக்கு கிடைக்கப்பெற்று இடமாற்றம் தொடர்பில் 15 நாட்களுக்குள்ளும் பதவியுயர்வு தொடர்பில் 45 நாட்களுக்குள்ளும் ஆணைக்குழு முடிவொன்றை எடுக்க வேண்டும். எனினும், | இது தொடர்பில், மாதிரி பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட 10 மேன்முறையீட்டுக் கோப்புகளில் 04 கோப்புகள் தொடர்பான முடிவுகள் 2024 ஜனவரி 22 ஆம் திகதி வரை வழங்கப்படாமல் இருந்ததுடன் முடிவுகள் வழங்கப்படாமலிருந்த 06 கோப்புகளுக்கான முடிவுகளை வழங்குவதற்கு 02 தொடக்கம் 08 வருடங்கள் கடந்துள்ளன.<br><br>மேற்படி நடைமுறை ஒழுங்குவிதிகளை இரத்துச் செய்து 2022 டிசம்பர் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2310/29 ஆம் இலக்க நடைமுறை ஒழுங்குவிதியின் படி பதவி உயர்வுகள் தொடர்பாக பெறப்பட்ட மேன்முறையீடுகளுக்கான முடிவுகளை வழங்குவதற்கான காலக்கெடு குறிப்பிடப்படவில்லை.<br><br>2022 டிசம்பர் 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2310/29 ஆம் இலக்க நடைமுறை ஒழுங்குவிதிகளைத் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | பரிசீலிக்கப்பட்ட 21 மேன்முறையீட்டுக் கோப்புகளில், 07 இடமாற்ற மேன்முறையீடுகளுக்கான முடிவுகளை அறிவிப்பதற்கு 45 நாட்கள் தொடக்கம் 1,504 நாட்கள் வரை கடந்துள்ளதாகவும், மேலும் ஒரு பதவி உயர்வு பற்றிய மேன்முறையீடு கிடைக்கப்பெற்று 2 ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ள நிலையில், கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. | திருத்துவதற்கு தற்போது ஆணைக்குழு முடிவு செய்திருப்பதாக பி.க.அ. தெரிவித்தார். |
| 10 | **<u>ஓய்வூதிய பிரமாணக் குறிப்புக் கோவையின் 12வது பிரிவின் கீழ் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள்</u>** | ஓய்வூதிய பிரமாணக் குறிப்புக் கோவையின் 12வது பிரிவின் கீழ் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைப் பெறுவதற்கான வசதி ஆணைக்குழுவின் தரவு அமைப்பில் காணப்படவில்லை.<br>பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட கோப்புகளிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பணிகளை நிறைவுசெய்வதற்கு கூடுதலான காலம் கடந்துள்ளமையால் குற்றஞ்சாட்டப்பட்ட சில உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதிய கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுத்தலானது ஒழுக்காற்று விசாரணை முடிவடைந்த ஒழக்காற்று உத்தரவு வழங்கப்படும் வரை பல ஆண்டுகள் தாமதிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களையும் குழு அவதானித்தது. |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தாபனக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்த ஒழுக்காற்று விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி உத்தியோகத்தர்களிடம் ஒழுக்காற்று விசாரணைக்கான பணிகள் இதுவரை வழங்கப்படாமலிருப்பதற்கான காரணம் அதற்கான தேவை இதுவரை எழவில்லை என்பதாகுமெனவும் பி.க.அ. தெரிவித்தார்.<br><br>உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது ஆணைக்குழுவினால் ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து அவ்வப்போது தகவல்கள் கோரப்படுவதுடன், அந்நிறுவனங்கள் அத்தகவல்களை வழங்க தாமதிக்கும் போது நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டிருந்ததாகவும், எனினும் இந்த நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல் சகல கோப்புகளுக்கும் பொதுவான குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனவும் குழு அவதானித்தது.<br><br>ஒழுக்காற்று நடவடிக்கைகளின் ஒவ்வொரு கட்டத்திற்கும் விரயமாகும் கால வரையறைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால் இவ்வாறு நினைவூட்டல் கடிதங்களை அனுப்பும் மாறுப்பட்ட கால வரையறைகள் காணப்படுவதாக பி.க.அ. தெரிவித்தார்.<br><br>நினைவூட்டல் கடிதங்களை அனுப்புதல் அனைத்து ஆவண கோப்புகளுக்கும் பொதுவான கால வரையறைக்கு அமைவாக மேற்கொள்வதற்குத் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | தேவையான வழிகாட்டல்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல் முறை ஒழுங்குவிதிகளுக்குள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு வலியுறுத்தியது. |
| 11 | **<u>இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு கணினிமயமாக்கப்பட்ட வலையமைப்பின் ஆவண முகாமைத்துவ கட்டமைப்பைப் பயன்படுத்துதல்.</u>** | ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட இந்த கட்டமைப்பின் ஊடாக அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற கடிதமொன்றின் / தற்போதைய நிலைமை (Present status) அதாவது குறித்த ஆவணம் எந்த பிரிவில் காணப்படுகின்றது என்பதை விசாரிக்க முடிந்த போதிலும் ஒரே கோப்புடன் தொடர்புடைய கடிதங்கள் பல சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறும் போது அக்கடிதங்களுக்கு இந்த கட்டமைப்பினால் தனித்தனி இலக்கங்கள் வழங்கப்படுகின்றமையால் இந்த ஆவணக் கோப்புகளின் முன்னேற்றத்தை இதன் மூலம் கண்காணிக்க முடியாதென்பது குழுவில் புலனாகியது.<br><br>அரசாங்க சேவை ஆணைக்குழு தினமும் சுமார் 200 கடிதங்களை முகாமைத்துவம் செய்யக்கூடிய வகையில் 2012 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த கணினிமயமாக்கப்பட்ட வலையமைப்பின் ஆவண முகாமைத்துவ கட்டமைப்பின் ஊடாக குறித்த கடிதங்கள் குறித்த திகதியில் எந்தெந்த அலுவலகங்களில் காணப்படுகின்றன என்பதை கண்காணிக்க முடியுமென பி.க.அ. தெரிவித்தார். எனினும், மேற்படி கணினிமயமாக்கப்பட்ட வலையமைப்பின் ஆவண முகாமைத்துவ தகவல் கட்டமைப்பினை மேலும் |

| | **கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்** | **- பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்**<br>**- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்** |
|---|---|---|
| | | மேம்படுத்தி அறிக்கைகளை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு ஒழுங்கு செய்வதற்கு இக்குழுவில் முன்மொழியப்பட்டது. |
| 12 | **<u>2023 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி 2023 கணக்காய்விற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினதும் பூர்த்தி செய்யப்படவுள்ள கோப்புக்களின் நேர பகுப்பாய்வு</u>** | 2023 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி 2023 கணக்காய்விற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினதும் பூர்த்தி செய்யப்படவுள்ள கோப்புக்களின் காலவரையறை தொடர்பான பகுப்பாய்வு மற்றும் 2024 ஜனவரி 12 ஆம் திகதி பெற்றுக்கொடுக்கப்பட்ட ஆணைக்குழுவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் ஆவண கோப்புக்களுக்கு அமைவாக காணப்பட்ட கோப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகளை ஆராய்ந்தபோது மேற்படி வழங்கப்பட்ட காலவரையறை தொடர்பான பகுப்பாய்வு தவறானதென குழு அவதானித்தது.<br><br>மேலும், 2023 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி பெற்றுக்கொடுக்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக மேன்முறையீட்டுப் பிரிவு, ஒழுக்காற்றுப் பிரிவு மற்றும் பதவியுயர்வுப் பிரிவில் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் கோப்புகளின் எண்ணிக்கை முறையே 292, 180 மற்றும் 168 என்பதுடன் அனைத்து கோப்புகளும் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்குரியதாவதுடன், 2024 ஜனவரி 12 ஆம் திகதி பெற்றுக்கொடுக்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக மேன்முறையீட்டுப் பிரிவு, ஒழுக்காற்றுப் |

| | கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள் | - பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) தெளிவுபடுத்தல்<br>- குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் |
|---|---|---|
| | | பிரிவு மற்றும் பதவியுயர்வுப் பிரிவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் கோப்புகளின் எண்ணிக்கை முறையே 247, 131 மற்றும் 178 ஆகுமெனவும் காலவரையறை பகுப்பாய்வின் படி இக்கோப்புகள் 01 ஆண்டு தொடக்கம் 04 ஆண்டுகளுக்கு மேல் காணப்படுவதாமென்பதை குழு அவதானித்து.<br><br>மேன்முறையீட்டுப் பிரிவு மற்றும் ஒழுக்காற்று குழுவின் கோப்புகள் ஒவ்வொரு விடயத்திற்கும் அமைவாக பேணப்படுகின்றமையால் காலவரையறை பகுப்பாய்வு 4 ஆண்டுகளுக்கு மேலாக இருக்க முடியுமென்ற போதிலும் பதவியுயர்வுப் பிரிவிலுள்ள நிறுவன ரீதியான கோப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளமையால் மேற்படி காலவரையறை பகுப்பாய்வு தவறானதென பி.க.அ. தெரிவித்தார். |

**<u>உள்ளடக்கம்</u>**

**அ**
அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம்
பகிரங்க சேவைகள் ஆணைக்குழு

**இ**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
இலங்கை சுங்கத் திணைக்களம்
இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்
பாதுகாப்பு அமைச்சு

**<u>உ</u>**
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**<u>க</u>**
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

**<u>ச</u>**
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

**<u>த</u>**
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

**<u>ந</u>**
நிதி அமைச்சு

**<u>விசேட விசாரணைகள்</u>**

அரச நிறுவனங்களில் நிதியல்லாத சொத்துக்களை முகாமைத்தும் செய்யும் நடைமுறையின் தற்போதைய நிலைமை மற்றும் இதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆராய்தல்

தேசிய கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையின் (NEMIS)

தற்போதைய செயலாற்றுகை, பிரச்சினை மற்றும்

மேம்படுத்தல் பற்றி மீளாய்வு செய்தல்